# இந்து ஒளி

HINDU OLI

தீபம் - 17 சுடர் - 06




**தீபாவளி - கந்தசஷ்டி சிறப்பிதழ்**

விஜய வருடம்
ஐப்பசி - கார்த்திகை

அகில இலங்கை இந்து மாமன்ற ஆன்மீக இதழ்
Religious Journal of All Ceylon Hindu Congress

Oct - Nov
2013

## வைகாசித் திங்களில் மாமன்றம் கௌரவித்த சத்தியவித்தகராக...








## புரட்டாதித் திங்களில் வடமாகாணம் தேர்ந்தெடுத்த முதல்வராக...



தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதும்...



நல்லூர் ஆலய வழிபாட்டினை தொடர்ந்து



படம் நன்றி: தமிழ்மிரர்

பதவியேற்பு வைபவம்

**நீதியரசர் சி. வி. விக்னேஸ்வரன்**

(மாமன்றத்தின் கௌரவ உறுப்பினர்)

**என்றும் இறையருள் வேண்டி முதல்வரை மாமன்றம் வாழ்த்துகிறது!**

உ
சிவமயம்

தீபம் - 17

# இந்து ஒளி

சுடர் - 06

விஜய வருடம் ஐப்பசித் திங்கள் 16ஆம் நாள் (02.11.2013)

## பஞ்ச புராணங்கள்

திருச்சிற்றம்பலம்

### தேவாரம்

நெடியவன் பிரமனும் நினைப்பரி தாயவர்
அடியொடு முடியறியா அழல் உருவினன்
கடிகமழ் பொழில்அணி கழுமல வளநகர்ப்
பிடிநடை அவளொடும் பெருந்தகை இருந்ததே!

### திருவாசகம்

வாழ்த்து வதும் வான வர்கள்
தாம் வாழ்வான் மன நின்பால்
தாழ்த்து வதுந் தாம் உயர்ந்து
தம்மை யெல்லாந் தொழவேண்டி
சூழ்த்து மது கரமு ரலும்
தாரோ யைநாயடி யேன்
பாழ்த்த பிறப் பறுத்தி டுவான்
யானும் உன்னைப் பரவுவனே!

### திருவிசைப்பா

வரம்புரி வாளை மளிர்மடுக் கமலம்
கரும்பொடு மாந்துமே திகள்சேர்
பரம்பிரி செந்நெற் கழனிச்செங் கழுநீர்ப்
பழனம்சூழ் பெரும்பற்றப் புலியூர்ச்
சிரம்புணர் முடிவா னவரடி முறையா
லிறைஞ்சுசிற் றம்பலக் கூத்தா
நிரந்தரம் முனிவர் நினைதிருக் கணைக்கால்
நினைந்துநின் றொழிந்ததென் நெஞ்சே!

### திருப்பல்லாண்டு

சேலுங் கயலும் திளைக்கும் கண்ணாரிளங்
கொங்கை யிற்செங் குங்குமம்
போலும் பொடியணி மார்பிலங் குமென்று
புண்ணியர் போற் றிசைப்ப
மாலும் அயனும் அறியாநெறி தந்து
வந்தென் மனத் தகத்தே
பாலும் அமுதமும் ஒத்துநின் றானுக்கே
பல்லாண்டு கூறுதுமே!

### திருப்புராணம்

திங்கள்சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அங்கணர் கருணை கூர்ந்த அருட்டிரு நோக்கம் எய்த
தங்கிய பவத்தின் முன்னைச் சார்புவிட் டகல நீங்கி
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்புருவம் ஆனார்!

திருச்சிற்றம்பலம்

## வேலுக்கு வேலை - எதிர்காலம் நல்லதாக அமையட்டும்

ஆன்மீகம் அறத்தின் வழிப்பட்டது. நீதியை நிம்மதியை நிலைநாட்டக்கூடிய தகுதி ஆன்மீகத்துக்கூடாக உருவாகும் போது அதனால் பயன் அதிகம். கடவுளுக்கும் மனிதர்களுக்குமிடையே என்ன வித்தியாசம் என்ற கேள்வியை ஒரு ஞானியிடம் பக்தன் ஒருவன் கேட்டான். அதற்கு பதிலளித்த ஞானி "கடவுள் எவரையும் மன்னிக்கும் மனப்பாங்கு உடையவர். ஆனால் மனிதன் இவ்விடத்தில் மிகவும் வேறுபாடு உடையவன். நல்லதோர் பக்தனிடன் மன்னிக்கும் மனப்பாங்கு வளர வேண்டும்" எனக் கூறினார்.

கந்தபுராணத்தைப் பாடிய கச்சியப்ப சிவாச்சாரியார் முருகக் கடவுளின் பெருந்தன்மையை வியந்து போற்றுகிறார்.

**"தீயவை புரிந்தாரேனும் குமரவேல் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி அடைவர்"**

எனக் குறிப்பிட்டார். கொடுங்கோல் ஆட்சி செய்த சூரபத்மனை முருகக்கடவுள் அவனை அழிந்து போ என விடவில்லை. மாறாக அவனை சேவலாகவும் மயிலாகவும் உயிர்ப்பித்து தனக்கருகில் இருத்தி தன்னை வணங்குபவர்கள் தூய்மை பெற்றுள்ள சூரனையும் சேர்த்து வணங்குகின்ற சிறப்பை செய்திருப்பதை இங்கு யார் அறிவார்?

இலங்கையில் எம் இனம் விடிவின்றி வேதனைகளை சுமக்கத் தொடங்கி ஐம்பது ஆண்டுகள் கடந்து விட்டன. தமிழர் களிடையே ஒற்றுமை இன்மை என்ற சொல் ஓங்கி வளர்ந்து கொண்டு போகின்றது. "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" என்ற அர்த்தமுள்ள வார்த்தையை அறியாத தமிழர் இல்லை.எம் இனத்தின் வீழ்ச்சிக்கு பிற இனத்தவர்கள் இழைத்ததை விட எம் இனத்தவர்களின் பிரிவுகளால் உருவான இழப்புக்கள் அதிகம். ஆத்மீக நூல்கள் அறக்காப்பியங்கள் பல நூற்றாண்டு தாண்டி உயிர் வாழக் காரணம் உண்டு. அவர்களால் சொல்லப்பட்ட விடயங்கள் நித்தியமானவை. திருவள்ளுவர் திருக்குறளில் உட்பகை என்ற அதிகாரத்தைப் படைத்து அதனால் ஏற்படும் ஆபத்துக்களை நன்கு விளக்கினார்.

**"வாள்போல் பகைவரை அஞ்சற்க-அஞ்சுக
கேள் போல் பகைவர் தொடர்பு"**

என்ற திருவள்ளுவரது உட்பகை பற்றிய கருத்து மிகவும் அற்புதமானது. அதாவது வாளைப் போல் வெளிப்பட்டு நிற்கும் பகைவர்களுக்கு அஞ்சவேண்டாம்.ஆனால் சுற்றத்தார் போல் அன்பு காட்டி உட்பகை செய்பவர்கள் தொடர்பாக எப்போதும் மிகக் கவனமாக இருத்தல் அவசியம். எம் இனத்தின் வாழ்வில் உட்பகையே அழிவுக்கு வித்திட்டது. இன்றும் அதுவே தொடர்கதையாக உள்ளது. எங்கள் வரலாற்றை மீண்டும் மீண்டும் எடுத்துரைப்பதனால் பயனில்லை. ஆனால் வரலாற்றில் பெற்ற அனுபவங்களை உணர்ந்து செயற்படுவதே காலத்தின் தேவையாகும். இன்றைய இனத்தின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக விளங்குவது அனைவரும் ஒன்றுபட்ட ஒரு தலைமைத்துவத்தின் கீழ் செயற்படுவதாகும். அதனைக் காப்பதே உண்மையான கடமையாகும். அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்று ஆகும் என்ற கருத்து மிகவும் ஆழமானது.

நீண்ட இடைவெளிக்குப் பின் வடக்கு மாகாண சபை தமிழர்களின் கைக்கெட்டியுள்ளது. இழப்புக்கள், காணாமல் போனவர்கள், கால வரையறையின்றி சிறையில் வாடுபவர்கள், கணவனை இழந்து தவிக்கும் கைம்பெண்கள், ஆதரவற்ற குழந்தைகள், அகதிகள் மத்தியில் ஒரு சிறிய துடுப்பு கிடைத் துள்ளது. அல்லல்படுபவர்களின் கண்ணீர் துளியும் வற்றவில்லை. செய்வதறியாது துன்பக்கடலில் தத்தளிக்கும் மக்களுக்கு இவ்வாய்ப்பு பெரிய விமோசனம் அல்ல. சிறியதோர் ஆறுதல். மண்ணால் வரையப்பட்ட ஒரு பானை. இப்பானையில் தாகம் தீர்க்க தண்ணீர் கொண்டு வரும் பொறுப்பு மாகாணசபையில் வெற்றி பெற்றவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பானையின் கொள்ளளவு பற்றிய அளவு தெரியாது. ஆனால் பானையில் தண்ணீர் கொண்டு வர முன்னே பானையை போட்டு உடைத்துவிடுவார்கள் எனப் பலர் அஞ்சத் தொடங்கிவிட்டார்கள். கடவுள் தந்த சந்தர்ப்பத்தை சரியாக பயன்படுத்த வேண்டும். துன்பக்கடலில் துடிக்கும் மக்களை கரை சேர்க்கக்கூடிய மாலுமி என கௌரவ முதலமைச்சர் அவர்களை மக்கள் நம்பியிருப்பது முற்றுமுழுதான உண்மை. அந்நம்பிக்கை வீண்போகக்கூடாது. உட்பகையை களைந்து வாழ்பவர்களை மன்னித்து அவர்களையும் புனிதராக்கி இனிய உறவாக அரவணைத்து காக்கும் பொறுப்பு தலைமகனுக்கு உரியது. உட்பகையில் வளராது பகைமை இல்லா பண்புடையவராக மாற்ற ஆன்மீகத் தோடு கூடிய ஆளுமையால் முடியாது என்றால் எப்போதுமே முடியாது.

கந்தசஷ்டி ஆரம்பிக்கும் இவ்வேளையில் தீயவர்களையும் நல்லவர்களாக மாற்றிய **கந்தனின் சக்தியை எமது தலைமை பெற வேண்டும்.** முருகனின் கையில் இருந்த வேல் பகைவனாகிய சூரனை பண்புடையவனாக்கியது. வேலுக்குரிய வேலை அழிப்பது அல்ல. அரவணைப்பது. அர்த்தமுள்ள வேலை அறியாதவர்கள் யாரும் இல்லை. வேலை வணங்குவதே எமக்கு வேலை என வாழ்ந்தவர்கள் தமிழர்கள். யாரோ முதல்வரைக் கௌரவிக்க அறிந்தோ அறியாமலோ புனிதமான வேலை கையில் கொடுத்ததை ஊடகங்களும் வெளிப்படுத்தின. **கொடுத்த வேலை கையில் எடுத்தவர் விக்கினம் தீர்ப்பார் என அனைவரும் எதிர்பார்க்கின்றனர். வேல் பகையை வெல்லும்; வினையைப் போக்கும்; மன்னிக்கும்; ஒளியைக் கொடுக்கும்; ஞானத்தைக் கொடுக்கும்** என்பதை நாம் அறிவோம். வேலைக் கையில் **ஏந்தியவர் வேலின் இயல்புகளை வெளிப்படுத்தட்டும். மக்களின் உதிரத்தால் அளித்த வாக்கினைப் பெற்றவர்கள் மக்களை உயர்வாய் காக்கட்டும்!**

**இன்றைய சூழலில் மதம், மொழி, இன எல்லைகளைக் கடந்து தமிழினம் ஒன்றுபடவேண்டிய தேவை முதன்மை பெறுகிறது.** வடக்கு கிழக்கு மற்றும் மலையகத் தமிழ் மக்கள் எல்லோரும் இணைந்து புரிந்துணர்வையும் அரவணைப்பையும் வளர்த்து ஒருமித்த குரலில் செயற்படவேண்டும். அப்போது எங்கள் மக்களினது வாழ்வு ஒளிமயமாகும். அதற்கு **இத்தீபாவளித் திருநாளில் எல்லோரும் தீபமேற்றி பிரார்த்தித்து இறையருள் பெறுவோமாக!**

ISSN : 2012 - 9645

### வாழ்த்து

ஆர்த்த பிறவித் துயரொடு அல்ல லெல்லாம்
தீர்த் தருளும் திருக்குமரன் திருத்தாள் போற்றிக்
கீர்த்தி மிகுஅவன் நோன்பாம் கந்த சஷ்டிதனை
நேர்த்தி யாய்நோற்று பேரருள் பெற்றுய்வோமே!


# இந்து ஒளி

அகில இலங்கை இந்து மாமன்ற வெளியீடு
விஜய வருடம் ஐப்பசி - கார்த்திகை
**02.11.2013**

ஆசிரியர் குழு :
திரு. கந்தையா நீலகண்டன்
சைவஞானபானு கலாநிதி ஆறு. திருமுருகன்
கலாநிதி முத்தையா கதிர்காமநாதன்
சிவஸ்ரீ ம. பாலகைலாசநாத சர்மா
திரு. த. மனோகரன்
திரு. அ. கனகசூரியர்

ஒரு பிரதியின் விலை — ரூபா 50.00
வருடாந்தச் சந்தா (உள்நாடு) — ரூபா 300.00 (தபாற் செலவு தனி)
வருடாந்தச் சந்தா (வெளிநாடு) — US டொலர் 15

## அகில இலங்கை இந்து மாமன்றம்

A.C. H. C. கட்டிடம்
91/5, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, கொழும்பு – 2, இலங்கை.
யாழ் பணிமனை : 211/17, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
இணையத்தளம் : http:/www.hinducongress.lk
மின்னஞ்சல் : hinducongress@gmail.com
தொலைபேசி : 0112434990, தொலைநகல் : 0112344720

இந்து ஒளியில் வெளியிடப்பட்டுள்ள கட்டுரைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துக்கள் ஆக்கியோன்களுடையதே.

## HINDU OLI

Issue of
**ALL CEYLON HINDU CONGRESS**
Aippasi -Karthikai
02.11.2013

**Editorial Board :**
Mr. Kandiah Neelakandan
Dr. Aru. Thirumurugan
Dr. Muthiah Kathirgamanathan
Sivasri M. Balakailasanatha Sarma
Mr. D. Manoharan
Mr. A. Kanagasooriar

Price : Rs. 50.00
Annual Subscription (Inland) Rs. 300.00 (Excluding Postage)
Annual Subscription (Foreign) U. S. $ 15 (Including Postage)

**ALL CEYLON HINDU CONGRESS**
**A.C.H.C. Bldg.**
91/5, Sir Chittampalam A. Gardiner Mawatha Colombo - 2, Sri Lanka.
Jaffna Office : 211/17, Temple Road, Nallur, Jaffna.
Website : http://www.hinducongress.lk
E-Mail : hinducongress@gmail.com
Telephone No.: 011 2434990, Fax No.: 011 2344720

**Views expressed in the articles in Hindu Oli are those of the contributors.**


**Next Issue**
**MARKAZHI - THAI**



ஆன்மீகச்சுடரின்

அருள் மடல்



# சிவஞானிக்கு ஐம்பதாம் குருபூசை

இப்புவியில் சமீபகால வரலாற்றில் எளிமையான முறையில், ஆனால் ஆழ்ந்த தெய்வீக ஊற்றாகத் திகழ்ந்த ஞானிகளில் சிவயோக சுவாமிகள் முதன்மையானவர் என்றால் மிகையாகாது. சிவ தொண்டும் சிவதியானமுமே அவரின் போதனைகளின் சாராம்சம். அது தன்னைத்தானே விளங்கி, தன்னைத்தானே உணர்ந்து சிவதொண்டையும் சிவதியாகத்தையும் மறவாது சிவசிந்தனையுடன் மனிதாபிமானமாக ஆண்டவனுக்குச் செய்யும் தொண்டாக அமைகின்றது.

இலங்கையில் மாவிட்டபுரம் கிராமத்தில் 1872 ஆம் ஆண்டில் சிவயோகசுவாமிகள் பிறந்தார். நல்லூர் திருத்தலத்தில் தனது குருவான செல்லப்பா சுவாமிகளைத் தன் முப்பத்தைந்தாவது வயதில் சந்தித்தார்; அந்த முதற் சந்திப்பே லௌகீக வாழ்வில் உலக ஆர்வமெல்லாம் துறந்து ஆன்மீக வாழ்வில் சுவாமிகளை ஈடுபட வைத்தது. தனது குருவின் வழிகாட்டலில் மிகவும் கடுமையான ஆன்மீக கட்டுப்பாடுகளுக்குள் தன்னை ஆழ்த்திக் கொண்டார். செல்லப்பா சுவாமிகள் 1915 இல் மகாசமாதி அடைந்ததும் கொழும்புத்துறைக் கிராமத்தில் இலுப்பை மரத்தின் கீழ் தன் வதிவிடத்தை அமைத்துக் கொண்டார், அங்கு அடிக்கடி தியானத்தில் ஈடுபடுவார்.



ஆன்மீகப் பிரார்த்தனையில் மூழ்கி உலக வாழ்வை மறந்து வெள்ளை உடையணிந்து எளிமையாக வாழ்ந்தார். விவசாயிகள் முதல் இராஜதந்திரிகள் வரை சுவாமிகளது இறைவனுடனான சரணாகதி உறவை அறிந்து சுவாமிகளின் குடிசையைத் தேடி வந்து சுவாமிகளின் திருவடியில் ஆசி கோரி நின்றனர். அவரது உள்ளார்ந்த ஆன்மீக வழிபாட்டை 'சிவதொண்டு சிவதியானம்' என்ற இருசொற்களில் எடுத்துரைக்கலாம். மேலும் இதயத்தை உருக்கும் அன்பு சொற்களாலோ அம்புபோல் சுடும் கடின வார்த்தைகளாலோ அவரின் அருள்மிகு பணிப்புகளாகவே மதிக்கப்பட்ட வார்த்தைகளில் வரும் சூட்சும சக்தியை இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், முஸ்லிம்கள், ஏன் நாஸ்திகர்கள் கூட நாடி நின்றனர். தமிழர்கள், அமெரிக்கர்கள், கனேடியர் மற்றும் ஐரோப்பியர், அவுஸ்திரேலிய மக்கள் என எத்தனையோ பேரின் வாழ்க்கையில் மறுமலர்ச்சியைச் சிறப்புற வைத்தது சிவயோகசுவாமியாரின் வாழ்வு.

எனது குருவான அமெரிக்கா ஹவாய் ஆதீனத்தின் குருதேவர் சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளும் அவரின் சீடர்களில் ஒருவர். வட அமெரிக்காவில் முதலாவது இந்து ஆலயத்தை குருதேவர் நிறுவியதுடன் ஓர் ஆதீனத்தையும் ஹவாயில் அமைத்து, மேற்கு உலகில் முதலில் சைவ சமயத்தைப் பரப்பினார். எனது குருநாதரை அப்பணியில் தூண்டிவிட்ட பெருமை யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிக்கே உரியது. 2014 **சித்திரை முதல் 2015 சித்திரை வரையான இந்து ஜெய ஆண்டு முழுவதும் சிவயோகசுவாமிகள் மகாசமாதி அடைந்த ஐம்பதாவது வருடம் என்பதை போற்றி அர்ப்பணத்துடன் பிரகடனப்படுத்த வேண்டும் எனவும் இலங்கையில் நாடளாவிய ரீதியில் சிவயோக சுவாமிகளின் பொன்விழாவை நடத்த முன்நிலை வகிக்குமாறும் அகில இலங்கை இந்து மாமன்ற நிறைவேற்றுக் குழுவைச் சந்தித்து வேண்டிக் கொண்டோம்.** அதன்படி ஏற்கனவே மாமன்றம் நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துவிட்டது. ஏனைய நிறுவனங்களையும் அழைத்து விசேட ஒழுங்கிணைப்புக் குழு அமைத்துச் செயற்படுகிறார்கள். சிவதொண்டன் இதழையும் சிறப்புமலராக ஐம்பதாவது குருபூசையில் வெளியிட சிவதொண்டன் நிலையமும் தீர்மானித்து இருக்கின்றது.

**பாரெல்லாம் பரந்து வாழும் இந்து மக்கள் இச்சிவஞானியின் பொன்விழாவைக் கொண்டாட வேண்டுமென வேண்டிக் கொள்கிறோம். வருடம் முழுவதும் நடக்கும் பொன்விழா நிகழ்வுகளில் குருபூசைகளை நடாத்தி விழாக்கள் எடுப்பது மட்டுமல்லாமல், சுவாமிகளின் போதனைகளையும் நடைமுறைப்படுத்தவேண்டும் அதற்கு சிவதொண்டுப் பணிகளைத் திட்டமிட்டு சுவாமிகளின்பெயரால் நடாத்துவதுடன், யோகர் சுவாமிகளின் போதனைகளை இளம் சமுதாயம் அறிந்து அவ்வழி வாழவும் வழிசமைப்போமாக.!**

ஓம் சாந்தி.

**தொண்டுநாதன்**

# மாதச் சிறப்புகள்

## (ஐப்பசி–கார்த்திகை)

### ஐப்பசி வெள்ளி



ஐப்பசி மாதத்து வெள்ளிக்கிழமை முக்கியத்துவம் வாய்ந்த தினமாகும். பொதுவாக வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளில் விரதம் அனுட்டிக்க விரும்புபவர்கள் ஐப்பசி மாதத்து முதலாவது வெள்ளிக்கிழமையிலிருந்தே விரதத்தை ஆரம்பிக்க வேண்டும். சுக்கிரவாரம் என்று சொல்லப்படும் வெள்ளிக்கிழமை விரதமானது முருகப் பெருமானைக் குறித்து அனுட்டிக்கப்படுவதாகும்.

வெள்ளிக்கிழமை விரதநாளில் உபவாசம் இருப்பது உத்தமம். அதற்கு இயலாதவர்கள் இரவிலே பழம் முதலியன உட்கொள்ளலாம். இதனையும் மேற்கொள்ள இயலாதோர் ஒருபொழுது பகலில் உணவுகொள்ளலாம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் விரதம் இருக்கமாட்டாதவர்கள் மாதந்தோறும் வரும் கடைசி வெள்ளிக்கிழமைகளில் விரதம் அனுட்டிக்கலாம். அதுவும் இயலாதவர்கள் ஐப்பசி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் விரதம் மேற்கொள்ளலாம். அதுவும் முடியாத பட்சத்தில் ஐப்பசி மாதத்து கடைசி வெள்ளிக்கிழமையன்று விரதம் அனுட்டிப்பதன்மூலமும் நற்பலன் பெறலாம். இவ்விரதத்தை தொடர்ந்து மூன்று ஆண்டுகளாவது அனுட்டித்தல் வேண்டும்.

### திருக்கார்த்திகை



கார்த்திகை நட்சத்திரம் மாதந்தோறும் வந்தாலும், கார்த்திகை மாதத்தில் வரும்போது மிகவும் சிறப்புப் பெறுகிறது. அது திருக்கார்த்திகையாக போற்றப்பட்டு அன்றையதினம் விரதம் அனுட்டிக்கப்படுகிறது. இது முருகப் பெருமானைக் குறித்து நோற்கும் விரதமாகும். கார்த்திகை நட்சத்திரத்திற்கு முதல் நாளாகிய பரணி நட்சத்திரத்தன்று ஆசாரமாக இருந்து, ஒருவேளை உணவருந்தி, மறுநாள் (கார்த்திகை நட்சத்திரம்) முருகப் பெருமானை முறைப்படி பூசை வழிபாடுகளாற்றி உபவாசமிருப்பதுடன் அடுத்த நாளாகிய ரோகிணி நட்சத்திரத்தன்று பாரணை செய்தல் உத்தமம். இது கைகூடாதவர் பழம் முதலியன இரவில் உட்கொள்ள வேண்டும். இவ்விரதத்தை தொடர்ந்து பன்னிரண்டு வருடங்கள் அனுட்டிப்பதனால் உத்தமபலன் கிடைக்கும். விஜய வருடம் கார்த்திகை திங்கள் முதலாம்நாள் (17.11.2013) திருக்கார்த்திகை விரதமாகும். அன்றைய தினமே சர்வாலய தீபம் (வீடுகளில் தீபம்), குமாராலய தீபம் என்பன இடம்பெறுகின்றன.

### கார்த்திகை சோமவாரம்



சிவ விரதங்களுள் சோமவார விரதம் மிக மேலானதாகும் திங்கட்கிழமை சோமவாரம் என அழைக்கப்படுகிறது. சந்திரனுக்குரிய தினம் திங்கள். கிருதயுகம் தோன்றியதும், சந்திரன் சிவபெருமான் முடியில் அமரும் பேற்றினைப் பெற்றதும் கார்த்திகை சோமவாரத்திலேதான். எனவே கார்த்திகை மாதத்து திங்கட்கிழமை முக்கியத்துவம் பெறுகிறது. சோமவாரம் விரதம் அனுட்டிக்க விரும்புபவர்கள் கார்த்திகை மாதத்து முதலாவது சோமவாரத்தன்று விரதத்தை ஆரம்பிக்கவேண்டும். விரத நாளில் பகல் முழுவதும் உபவாசம் இருந்து, சிவ வழிபாட்டில் ஈடுபட்டு, இரவு மட்டும் ஒருவேளை உணவு உண்ணல் வேண்டும். இவ்விரதம் வாழ்நாள் முழுவதுமாயினும் அனுட்டிப்பது உத்தம பலனைத் தரும். அவ்விதம் இயலாதவர்கள் பன்னிரண்டு வருடங்கள் அல்லது மூன்று வருடங்கள் அல்லது ஒரு வருட காலமாயினும் அனுட்டித்தல் வேண்டும். அதுவும் இயலாதுவிட்டால் கார்த்திகை மாதத்தில் வரும் சோமவாரத்தில் விரதமிருப்பதும் பலன் தரும்.

### கேதாரகௌரி விரதம்



இவ்விரதம் புரட்டாதி மாதத்து அமாவாசையைத் தொடர்ந்துவரும் பூர்வபட்ச அட்டமி, அல்லது நவமி அல்லது தசமி திதி முதலாக ஐப்பசி மாதத்து அபரபட்ச சதுர்த்தசி வரையிலான இருபத்தொரு நாட்கள் அனுடிக்கப்படுகிறது. உமாதேவியார் சிவபெருமானை நோக்கி பூசைசெய்து அர்த்த நாரீஸ்வரப் பேற்றினை பெற்ற விரதமாகையால் இது கேதாரகௌரி விரதம் என்ற பெயருடன் கேதாரீஸ்வரர் விரதம் என்றும் அழைக்கப்படுகிறது.

மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்து மங்கலமாக இருக்க வேண்டும் என்றும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் இவ்விரதத்தை அனுட்டிப்பர். மங்களகரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுட்டிப்பதுண்டு. இதற்கும் மேலாக, இவ்விரதத்தை அனுட்டிப்பதால் ஐஸ்வரியம் பெருகும், வறுமை ஒழியும், நினைத்தனவெல்லாம் கைகூடும்.

கடந்த அக்டோபர் 14ஆம் திகதி ஆரம்பமாகிய இவ்விரதம் இம்மாதம் (நவம்பர்) 3ஆம் திகதி நிறைவு பெறுகிறது.

# கந்தபுராணம் பற்றிய....

தமிழிலே கந்தபுராணத்தை அருளிய கச்சியப்பர் நூற்பயனை எடுத்துக்காட்டிய இடத்தில் "ஓதுவோரும் கேட்போரும் இப்பிறவியில் நல்வாழ்வைப் பெற்றுப் பின்னர் சிவலோகத்தையடைவர்" என்றும், "அரக்கர்களுடைய வலிமையை முருகப்பெருமான் எவ்வாறு கெடுத்தருளினாரோ அதேபோன்று கந்தபுராணத்தைக் கேட்போருடைய தீயசக்திகளும் மாய்ந்து அழிந்துவிடும்" என்றும் காட்டுகிறார்.

முருகப்பெருமான் கொடுமையை அழித்தவரேயன்றிக் கொடியவர்களை அழித்தவரல்லர். கொடியவர்களை அடியவர்களாக மாற்றிவிட்டார். இதனையே சூரசங்காரம் காட்டுகிறது.

மயக்கமுற்ற உயிர்கள் மலங்களின் வழிச்சென்று அல்லற்பட்டுப் பின்புதிருவருள் உணர்வுபெற்று இறைவனைப் போற்றித் தெளிவடைந்து முடிவான பயனை எய்திநிற்கும் நிலையே கந்தபுராணத்தில் விளக்கப்படுகின்றது.

முருகு என்பதில் அமைந்த மூன்று எழுத்துக்களிலும் உகரம் கலந்து ஒலிக்கிறது. அதுகாத்தல் செய்யும் அடையாளத்தைக் காட்டுவது. ஆதி நடு அந்தம் என்ற மூன்று இடங்களிலும் காத்தற் பொருளில் வருவதால் முருகன் மூன்றுகாலத்தும் மூவுலகிலும் உயிர்களைக் காப்பவன் என்பதுபுலனாகிறது. காத்தல் என்பது இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றையும் அருளுதலாகும். உலகம் உய்ய அவதரித்தான் முருகனென்றால் உயர்ந்தவர்களாகிய நல்லவர்கள் வாழவே முருகன் அவதாரம் ஏற்பட்டது என்பதாகும். உலகம் என்பது உயர்ந்தோர் மேற்று என்றார் தொல்காப்பியர் . ஆன்மாக்கள் பிறவிக்கடலில் இருந்து நீந்தி முத்திக்கரை சேரவேண்டும் என்னும் கருணையோடு அவதரித்தவனே முருகன். முருகன் அவதாரத்தின் இந்நோக்கை நாம் சிந்தித்தால் முருக ஒளிநம் இதயமலரிற் பிரகாசிக்கும் என்பதில் ஐயமில்லை.

கந்தபுராணத்தில் முருகனை ஒரு முருகனாகவும், திருமுருகனாகவும் ஒரு திருமுருகனாகவும் காட்டுகிறார் புராணகாரர்.
சிவனின் நெற்றிக் கண்ணிலிருந்து உதித்தவனே முருகன்.
அதேநெற்றிக்கண்ணால் எரிந்து சாம்பராகியவனே மன்மதன். எனவே அனுக்கிரகம், நிக்கிரகம் ஆகிய இரு செயல்களையும் நெற்றிக்கண் நிகழ்த்தியுள்ளது. முருகப்பெருமான் நிக்கிரகம் செய்யும் பொழுதுசிவத்தின் அம்சமாகவும் அனுக்கிரகம் செய்யும் பொழுது சக்தியின் அம்சமாகவும் விளங்குவான்.
அம்மை அப்பர் அம்சத்தோடு உதித்தவனாகையால் ஒருமுருகனாகவும், திருமுருகனாகவும் காட்சி அளிக்கிறான்.



மெய்ப்பொருளைப் போற்றியவர்கள் எல்லோரும் வாழ்ந்தார்கள் என்றும் பொய்ப்பொருளைப் போற்றியவர்கள் வீழ்ந்தார்கள் என்றும் புராண இதிகாசங்களில் காணுகிறோம்.
திசைமாறிச் செல்பவன் குறித்த இலக்கை என்றுமே அடையமாட்டான்.
பொய்யை மெய்யாகக் காண்பவர்களை "மங்குவார்" என்று அப்பர் சுவாமிகள் கூறுகிறார்.
கந்தபுராணத்திலே பொய்மைக்கும் மெய்மைக்கும் இடையில் நடைபெற்ற போர் குறிப்பிடப்படுகிறது. மெய்யைச் சார்ந்து நின்ற தேவர்களுக்கு மற்றொருபொய்மையினால் இடுக்கண் விளைந்தது. ஆனால் தேவர்கள் மனம்மாறிபொய்மையைச் சார்ந்தபோது அந்தமெய்ப் பொருளாகிய பெருமானே வெற்றியை ஈட்டிக் கொடுத்தான்.

குமரகோட்டத்து முருகனின் அருள்பெற்றவர் கச்சியப்பசிவாச்சாரியார்.
சிவநெறியும் செந்தமிழ் நயமும் கலந்துமிளிரத் தமிழ்பேசும் சைவமக்களுக்குப் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கந்தபுராணக் காவியத்தை அருளிச்செய்த சிவாச்சாரியாரை நாம் குருபூசைஎடுத்துப் போற்றுதற்குக் கடமைப்பட்டுள்ளோம்.

## ...தெய்வத்திருமகளின் சிந்தனைமுத்துக்கள்

# கந்தனுக்கு ஒரு கந்தசஷ்டி

இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு

"அஞ்சுமுகம் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சல் என வேல் தோன்றும்"

முருகப் பெருமான் திருக்கரங்களில் வேல் எடுத்து வெஞ்சமர் புரிந்து சூரபதுமனை, அவனது அகந்தையை அழித்து தேவர்கள் துயர் துடைத்த புனித நாட்கள் கந்தசஷ்டி விரத நாட்களாகும். இவற்றில் ஐப்பசி மாதம் இடம்பெறும் அமாவாசையைத் தொடர்ந்து வரும் பிரதமை முதல் ஆறு தினங்களும் கந்தனுக்குரிய கந்த சஷ்டி விரத நாட்கள். சஷ்டி என்பது ஒரு திதியாகும்.

ஒவ்வொரு மாதமும் அமாவாசை, பௌர்ணமி ஆகிய திதிகளைத் தொடர்ந்து வரும் ஆறாம் நாள் சஷ்டி திதியாக அமைகின்றது. கந்தப் பெருமான் தேவர்களைக் காக்கும் பொருட்டு சூரபதுமனை அழித்தொழித்து அருள் புரிந்த காலமும் சஷ்டியாகும். "கந்தன்" என்றாலே, பகைவர்களை அழித்து அவர்கள் வல்லமையை வற்றச் செய்பவன் என்று பொருள். "வேல்" என்றால் உயிர்களுக்கு உபகாரம் செய்பவன் என்று அர்த்தம். எனவே பகைவர்களை அழித்து, அடியார்க்கு இன்னருள் புரியும் கந்தவேளை எம் சிந்தையுள் வைப்போம்.



கருணை கொள் ஆறு முகங்கள் கொண்ட ஆறுமுகனின் மறுநாமங்கள் முருகன், கந்தன், கடம்பன், கார்த்திகேயன், சேயோன், சுப்பிரமணியன், குகன் என்பனவாகும். கந்தனுக்குரிய கந்தசஷ்டி விரதம் பற்றி நோக்குமுன் "விரதம்" என்ற பதத்தின் விளக்கத்தை நோக்குவோம். விரதம், உபவாசம் என்னும் போது, "விரதம்" என்றால் மனம் பொறிவழி போகாமல், நிற்றற் பொருட்டு, உணவை விடுத்தேனும், சுருக்கியேனும், மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் கடவுளை மெய்யன்போடு விதிப்படி விஷேடமாக வழிபடுதலாகுமென்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தந்த விளக்கமாகும். "உபவாசம்" என்னும் போது பட்டினி கிடத்தல் என்று பொருள் கொள்வர் ஒரு சிலர். இதற்கு உள்ள மறுஅர்த்தத்தையும் பார்ப்போம். "உப" என்றால் அருகே என்று பொருள், "வாசம்" என்றால் வசித்தல், இருத்தல் என்று பொருள். எனவே இங்கு உபவாசம் என்றால், மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் இறைவனோடு நெருங்கி இருத்தல் என்று பொருள் கொள்ளலாம்.

"சங்கரன் பிள்ளை சட்டியிலே மாவறுத்தார்" என்று கூறுவதுண்டு. சங்கரன் சிவன் ஆவார், சட்டி - திதி, மாவறுத்தல் - மா அறுத்தல் எனக் கொண்டு, போரின் போது முருகப் பெருமான் மாமரமாக நின்ற சூரபதுமனை சங்கரித்தார் என்று இக்கூற்றிற்கு பொருள் கொள்ள வேண்டும். இதுவே சூரசம்காரம். தேவர்கள் துயர்துடைக்க வேண்டி சிவனாரின் நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய கந்தக் கடவுள், சூரனோடு பொருதி, ஆறாம் நாள் அவனைத் தன் ஞானவேலால் கொன்றொழிக்கின்றார். வேல்பட்ட சூரனின் உடல் இருகூறுகளாகிறது. பெருமானருளால் ஒரு கூறு சேவலாகி முருகப்பெருமானின் கொடியில் அமைய, மறு கூறு மயிலாக கந்தக் கடவுளுக்கு அழகிய மயில்வாகனமாக அமைய, முருகன் மயில்வாகனன் என்னும் நாமத்தையும் பெறுகின்றார். கந்தசஷ்டி புண்ணியகாலத்திலே ஆலயங்களிலே இடம்பெறும் சூரன்போர் நிகழ்விலே நாம் காணும் காட்சி இதுவாகும்.

கந்தசஷ்டி விரதம், பலவிதமாக முருக பக்தர்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. சிலர் விரதநாட்களின்போது பகற்பொழுது உணவை விடுத்து மாலையில் பால், பழம் உண்பர், சிலர் மாலையில் மாத்திரம் ஒருபொழுது உணவு உட்கொள்வர். இவற்றை விட ஐந்து நாட்களும் ஒருவேளை உண்டு ஆறாம்நாள் உபவாசமிருந்து, அன்று மாலை சூரன்போர் காட்சியைக் கண்டுகளித்து, மறுநாட்காலை பாரணை செய்து, ஆறு அடியார்க்கு அன்னமளித்து, தம்மால் இயன்ற தானம் செய்து விரதத்தை பூர்த்தி செய்யும் மரபும் எம்மிடையே உண்டு. "விரலுக்கு தக்கது தான் வீக்கம்". எனவே எமது உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ப விரதங்களை அனுஷ்டிக்கலாம். விரதகாலத்தில் உளத்தூய்மையும், உடற் தூய்மையும் இறைசிந்தனையுமே மிகமுக்கியம். "நோன்பு என்பது கொன்று தின்னாமை". இதன்படி பிற உயிரினங்களை எமது உணவுக்காகக் கொன்று தின்னாமல், சைவ உணவையே நாம் உட்கொண்டால் இது சிறந்ததோர் விரதமாகும். புண்ணியச் செயலாகும்.

"வேண்டுவோர்க்கு வேண்டுவன ஈயப்படும்" என்பது நிஜம். கந்தசஷ்டி கால ஆறுநாட்களும் காம, குரோதலோபமோக, மதமாற்சரியமாகிய அறு பகைகளையும், அகற்றி இறைஅருள் பரிபாலிப்பதைத் தத்ரூபமாகக் காட்டி நிற்கிறது. சூரன்போர் ஞான சக்தியைக் குறிக்கும். ஞானவேல், சூரனைச் சங்கரிக்கிறது. தேவர்களது முகங்களாகிய தாமரைகள் ஞானசூரியனைக் கண்ட தாமரைகளாக மலர்கின்றன. அரக்கர் குழாம் அழிந்தொழிய மீண்டும் தர்மம் உதயமாகின்றது. இந்நிகழ்வு இறைவன் ஆன்மாக்களை மாயையினின்றும் நீக்கி ஞானஅருள் புரியும் தத்துவத்தை குறிப்பதாகக் கந்தபுராணம் கூறி நிற்கின்றது.

கந்தப்பெருமானுக்கு உகந்த கார்த்திகை நட்சத்திரம், சஷ்டிதிதி, சுக்கிரவாரம், ஆகியவை கந்தவழிபாட்டுக்கு உகந்த காலங்களாகும். கார்த்திகேயனைக் கார்த்திகையில் மெய்யன்போடு வழிபட்டு நற்பேறுகள் பெற்றவர்களுள் நாரதர், முசுகுந்தச் சக்கரவர்த்தி, நக்கீரர், அருணகிரிநாதர் ஆகியோரைக் குறிப்பிடலாம்.

நல்லவர்களைத் தனது அறக்கருணையாலும், தீயோரை மறக் கருணையாலும் ஆட்கொள்வர் ஈசன். சூரபதுமன் தான் ஈசனிடம் பெற்ற பலவரங்களின் பலத்தைத் துஷ்பிரயோகம் செய்தான். அதற்காக ஈசன் முருகப்பெருமானைக் கொண்டு அவனை அழித்தார். ஆனாலும் அவனுடைய நல்வரங்களின் பயனாக அவன் இறந்தபின் மகாபாவியாகிவிடக் கூடாது என்பதற்காக அவனை சேவலும் மயிலுமாக முருகப் பெருமானை ஏற்றுக்கொள்ள வைக்கின்றார் ஈசன். "தேவர்களிடத்தே அறக்கருணை சூரனிடத்து மறக்கருணை". இந்த உண்மையை விளக்கி நிற்கின்றது கந்தசஷ்டி விரத நிறைவில் இடம்பெறும் சூரன்போர்.

இந்தவகையில் இவ் விரதத்துவத்தை யாம் புரிந்துகொள்வதோடு நின்று விடாமல், அதனை எமது இளைய தலைமுறையினருக்கும் எளிதாகக் கூறிப் புரியவைத்து, எதிர்காலத்திலும் ஒரு சைவப்பரம்பரையை உருவாக்குவது எம் ஒவ்வொருவரதும் கடமையாகும்.

# திருமுருகாற்றுப் படை



சங்க நூல்களில் கடவுளர் வரிசையில் முருகனுக்கு தனியாக இலக்கியம் உண்டு. அதுதான் நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப்படை. இந்நூலானது சங்க காலத்தில் தமிழர்கள் மேற்கொண்ட முருகவழிபாட்டின் மாண்பையும், உயர்வையும் அளக்கும் அளவுகோலாக உள்ளது.

இந்நூல் தோற்றம் பெறுவதற்கு அதாவது திருமுருகாற்றுப்படை பாடுவதற்கு காரணமாகவிருந்தது ஒரு சிறு சம்பவமாகும். ஒரு தடவை நக்கீரர் கயிலை நோக்கி சென்று கொண்டிருக்கையில், காசி நகரில் ஒரு குளத்தில் நீராடிவிட்டு அதன் கரையிலிருந்த ஆலமரத்தடியில் சிவ வழிபாடு செய்து கொண்டிருந்தார். அப்போது ஆலமரத்திலிருந்து ஒரு இலை அவருக்கு முன்னே பாதி நீரிலும் பாதி கரையிலும் விழுந்தது. நீரில் விழுந்த பாதி இலை மீனாகவும், கரையில் விழுந்த பாதி இலை பறவையுமாகி மீன் பறவையை நீருக்குள் இழுக்க பறவை மீனை நிலத்திற்கு இழுத்தது.நக்கீரர் அப்புதுமையைக் கண்டு மிக வியப்படைந்ததில் கவனம் திரும்பியதால் சிவ வழிபாட்டில் தவறு ஏற்பட்டது.


ஏற்கனவே சிவ வழிபாட்டில் தவறியவர்களான தொள்ளாயிரத்து தொன்னூற்றொன்பது பேர்களை ஒரு மலைக்குகையில் அடைத்து வைத்துக்கொண்டு மேலும் ஒருவன் வேண்டும் என்று காத்திருந்த "கற்கிமுகி"என்ற குதிரை முகமுடைய சூரியபூதம் ஒன்று நக்கீரரைத் தூக்கிச் சென்று அக்குகையில் அடைத்துவிட்டு தனது கொள்கைப்படி ஆயிரம்பேர்கள் ஆனதும் ஒரேதடவையில் உண்ணுவதற்கு தயாரானது.அதற்கு முன்பதாக பூதம் நீராடச் சென்றுவிட்டது.


முன்பு அடைக்கப்பட்டிருந்தவர்கள் எல்லோரும் நக்கீரரைப் பார்த்து "நாங்கள் நெடுங்காலமாக பூதத்திடம் சிறைப்பட்டிருந்தாலும் இதுவரை பிழைத்திருந்தோம். நீர் ஆயிரமாவது நபர் என்பதால் உம்மால் இன்றைக்கு பூதத்திற்கு இரையாகும் காலம் வந்துவிட்டது" என்று மிக வருந்தி அழுதனர். அவர்களுக்கு மனமிரங்கிய நக்கீரர் முருகக் கடவுளை நினைத்து "திருமுருகாற்றுப் படை" என்ற அருள் நூலைப் பாடினார். உடனடியாகவே முருகப்பெருமான் எழுந்தருளி பூதத்தைக் கொன்று அனைவரையும் சிறை மீட்டார் என்பது வரலாறு.

சிவனைப் பாடியுள்ள நக்கீரர் முருகனைப் பாடாமையால் நக்கீரரை ஒரு குகையில் சிறைப்படச் செய்து அதனூடாக தன்னைப் பாடுவிக்கச் செய்த முருகப்பெருமானின் ஒரு திருவிளையாடல் தான் இந்த நிகழ்வு எனவும் சொல்லப்படுகிறது.

(நவம்பர் 17ஆம் திகதி திருக்கார்த்திகை)

# வாழ்வில் ஒளி காட்டும் கார்த்திகை விளக்கீடு





தெய்வத்தமிழ்ச்சுடர் கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்

உலகெல்லாம் நிறைந்து பரந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான சிவபெருமானையும் அவரது திருக்குமாரரான முருகனையும் குறித்து அனுட்டிக்கப்படும் ஓர் உன்னதமான விரதம் தான் திருக்கார்த்திகை.இது ஒரு புண்ணிய நல்விரதமாகும்.

ஒவ்வொரு மாதத்திலும் கார்த்திகை நட்சத்திரம் வந்தாலும் கார்த்திகை மாதத்திலே வருகின்ற கார்த்திகை நட்சத்திர நாளே திருக்கார்த்திகை எனப்படுகின்றது. இந்தப் புனித நாளில் சைவமக்கள் அனைவரும் தத்தம் இல்லங்களில் மற்றும் தொழில் புரியும் இடங்களில் தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து அந்த ஒளியிலே இறைவனைக் கண்டு வணங்கி வாழ்த்தி இன்புறுகின்றனர். விளக்குகளை ஏற்றுவதனால் இது விளக்கீடு எனப்படுகின்றது.

சிவபெருமான் சோதி வடிவில் நின்று பிரம்ம விட்டுணுகளுக்கு உண்மையை உணர்த்திய நாளும் இதுவே என்று நம் முன்னோர்களால் கருதப்பட்டு வருகின்றது. அதாவது முன்பொருமுறை படைத்தல் தொழில் புரியும் பிரம்மாவும் காத்தல் தொழில் புரியும் விட்டுணுவும் தாமே பெரியவர் என்று கூறி தம்முள் அடிபட்டுக் கொண்டனராம்.

இவர்களது அகந்தையை அடக்க எண்ணிய சிவபெருமான் ஒரு சோதி வடிவாக நின்று இந்தச் சோதியின் அடி முடி காண்பவர் எவரோ அவரே பெரியவர் என்று கூறினாராம். உடனே பிரம்மா ஓர் அன்னப்பட்சி வடிவமெடுத்து ஆகாயத்தை நோக்கி முடியைக் காண்பதாகச் சென்றாராம் . மகாவிஷ்ணு தான் அடியைக் காண்பதாகச் கூறி ஒரு பன்றி வடிவமெடுத்து பூமியைத் துளைத்துக் கொண்டு சென்றாராம்.

இருவராலும் சோதிப் பிழம்பின் அடியையோ முடியையோ காணமுடியவில்லை. அவ்வேளை பிரம்மா தான் முடியைக் கண்டு விட்டதாகவும், தாழும்பூவை பொய்ச்சாட்சி சொல்ல வைத்து பொய் கூறி ஏமாற்றியதால் பிரம்மாவுக்குக் கோயிலே இல்லாமல் போனதாகவும், பொய்ச்சாட்சி சொன்னதால் தாழம்பூ பூசைக்கு பயன்படுத்தப்படுவதில்லை என்றும் சொல்லப்படுகின்றது.

ஆனால் மகாவிஷ்ணுவானவர் தன்னால் அடியைக் காணமுடியவில்லை என்பதை ஒப்புக் கொண்டதாகவும் அதனால் அவருக்கு ஆலயவழிபாடு உண்டென்றும், சிவபெருமானே முழுமுதற் கடவுளென எல்லோராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதாகவும் அந்த நாளே திருக்கார்த்திகை என்றும் சொல்லப்படுகின்றது.

ஆண்டவன் ஒளி மயமானவன். ஆகையால் ஆண்டவனை நாம் தீபஒளியிலே கண்டு தரிசித்த பிரகாசமான திவ்விய பேரின்ப ஆனந்தசாகரத்தில் மூழ்கித்திளைக்கும் நாளே விளக்கீடு. விளக்கு இடு என்பதே விளக்கீடாகத் திரிபுற்றுள்ளது.

சைவ ஆலயங்களிலே சொக்கப்பானை என்று சொல்லி ஓலைகளாலும் ஆக்கப் பெற்ற ஒரு பெரிய கூட்டை அமைத்து சுவாமியை எழுந்தருளச் செய்து அவருக்கு முன்னாலே அதைச் சுவாலை விட்டு எரியும் படியாக தீயிட்டுக் கொழுத்துவார்கள். அது நல்ல பிரகாசமாக நீண்ட சுவாலை விட்டு எரியும் போது அதிலே இறையருளை வேண்டி வழிபாடியற்றப்படும்.

சொர்க்கப்பாவனை என்பதே சொக்கப்பானை என மருவியது என் சொல்லுவாருமுளர். சகல ஆலயங்களிலும் நிகழ்த்தப்படும் இவ்விழா சர்வாலய தீபம் எனவும் முருகன் கோயில்களிலே குமாராலய தீபம் எனவும் விஷ்ணு ஆலயங்களில் விஷ்ணுவாலய தீபம் எனவும் அழைக்கப்படும்.

இந்த திருக்கார்த்திகை தீப ஒளித்திருநாள் இந்தியாவின் திருவண்ணாமலையிலே வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. மலையின் உச்சியிலே தீபத்தை ஏற்றி வைத்து இறைவழிபாடு இயற்றி வருவர். இந்த விளக்கீடு எல்லா இடங்களிலும் அதாவது சைவர்கள் வாழ்கின்ற ஒவ்வொரு வாழிடத்திலும் சிறப்புத் திருநாளாக மதிக்கப் பெற்று தீபங்களை வரிசையாக ஏற்றி வைத்து இறை வழிபாடுகளும் ஆராதனைகளும் நிகழ்த்தப் பெறுகின்றன.

இத்தீபத்திருநாளிலே முருகப் பெருமான் எழுந்தருளியுள்ள ஆலயங்களில் மாவிளக்கு என்று சொல்லப்படும் தேனும் தினை மாவும் கலந்த விளக்குகளை தயார் செய்து அதில் சுத்தமான பசு நெய்யைவிட்டு திரி போட்டுத் தீபம் ஏற்றுவார்கள். அந்தத் தீபங்கள் நெய்யிலே வெந்து இனிப்புத் தின்பண்டமாக மாறிவிடும். பின்னர் அதனை சுவைத்து மகிழ்வர்.

மனித வாழ்க்கையில் நோய் நொடியின்றி சகல சௌபாக்கியங்களும் கிடைக்கப்பெற்று சந்தோசமான வாழ்வு அமைய வேண்டுமென்று இறையருளை வேண்டி நிற்கும் வகையிலே விரதம் அனுட்டிப்பது வழக்கம். அதற்கு இந்தத் திருக்கார்த்திகை தீபத்திருநாள் மிகவும் உகந்ததாக கருதப்படுகின்றது. ஏனெனில் ஒளி இல்லாமல் நாம் வாழமுடியாது. அதாவது இருளில் எந்தக் காரியமும் செய்யமுடியாது. ஆகையால் நமது முன்னோர்கள் இந்தக் கார்த்திகை மாதத்தில் வரும் திருக்கார்த்திகையைத் தேர்ந்தெடுத்து விரதம் அனுட்டித்து வழிபாடுகளையும் ஆராதனைகளையும் செய்து வந்துள்ளார்கள்.

ஆதலால் சைவமக்களாகிய நாமும் இந்த திருக் கார்த்திகை நன்னாளில் விரதமிருந்து இறைவழிபாடு செய்து வாழ்வில் சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெற்று இன்புற்றிருப்போமாக!

# தமிழ் தந்த முருகன்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்

*சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்பனைச் செஞ்சுடர்வேல்*
*வேந்தனைச் செந்தமிழ்நூல் விரித்தோனை விளங்கு வள்ளி*
*காந்தனைக் கந்தன் கடம்பனைக் கார்மயில் வாகனனைச்*
*சாந்துணைப் போதும் மறவாதவர்க்கொரு தாழ்வில்லையே*

*- (கந்தரலங்காரம்.)*

செந்தமிழ் தெய்வம் எனப் போற்றப்படுகின்ற முருகக் கடவுள் தமிழ் மக்களால் பண்டு தொட்டு வணங்கி வழிபாடு செய்யப்பட்டு வருகின்ற தெய்வ மூர்த்தியாகும். பண்டைய சங்க இலக்கிய நூல்களில் முருகன் குறிஞ்சி நிலக்கடவுள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளான். மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி நிலம் எனப் பண்டைய தமிழ் மக்கள் அழைத்தனர்.

"சேயோன் மேய மைவரை உலகம்" என்கின்றது தொல்காப்பியம். சேயோன் முருகனைக் குறிக்கின்றது. "மை வரை உலகம்" என்பது மலைப்பிரதேசம்.

சங்ககாலத் தமிழ் இலக்கிய நூல்களை பத்துப்பாட்டு, எட்டுத்தொகை என இரு தொகுதிகளுள் அடக்குவர். திருமுருகாற்றுப் படை எனும் முருகன் புகழ் பாடும் நூல் பத்துப் பாட்டில் முதன் நூலாக இடம் பெற்றுள்ளது. அந் நூல் சங்கப் புலவர்களுள் தலைமைப் புலவராக திகழ்ந்த நக்கீரர் என்பவரால் இயற்றப்பட்டது. முருகப் பெருமானின் பெருமை புகழ் சிறப்பு என்பன பற்றிப் பேசுவதோடு முருகன் விரும்பி உறையும் ஆறுபடை வீடுகள் பற்றிய குறிப்புகளும் இந்நூலில் உள்ளன. திருமுருகாற்றுப்படை சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் பதினோராந் திருமுறைப் பிரபந்தங்களுள் ஒன்றாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பரி பாடல் எனும் பண்டைத்தமிழ் இலக்கிய நூலிலும் முருகக் கடவுள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. முருகு என்றால் அழகு. முருகன் என்பவன் அழகன். இயற்கையின் அழகினை ஆராதித்து மகிழ்ந்தவர்கள் பண்டைத்தமிழர். இயற்கையில் இறைவனைக் கண்டு தரிசித்தவர்கள். அந்த அழகு தெய்வத்தை கட்டிளைஞனாக, குமரனாக, செந்நிறத்தானாக உருவம் கொடுத்து பார்த்து மகிழ்ந்தனர். அழகே தெய்வம் எனக் கொண்டாடினர். குமரன், முருகன், சேயோன் எனப் பெயரிட்டு அழைத்து வணங்கி வழிபாடு செய்து வந்தனர். முருகன் தமிழ் கடவுள் ஆயினான்.

தமிழுக்கும் முருகனுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. தமிழ் என்றால் இனிமை என்றும், அது என்றும் இளமையுடன் உளது என்றும் அறிஞர் கூறுவர். அவ்வாறே முருகனும் என்றும் இளமையும் அழகும் கொண்டு விளங்குகின்றான். அகத்திய முனிவருக்குத் தமிழ் உரைத்து அம்முனிவர் மூலம் நமக்கு தமிழ் தந்தவன் முருகன்.




"குறு முனிக்குத் தமிழுரைக்கும் குமர" என்பது பாடலடி. "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்கின்றது நிகண்டு. தமிழ் என்னும் சொல்லின் பொருள் இனிமை மற்றும் நீர்மை என நிகண்டு கூறுகின்றது. தமிழ் நுதலியது அன்பு என்றும் கூறப்படுகின்றது. "தமிழுக்கு அமிழ்து என்று பெயர்" என்பார் பாரதிதாசன். அமிழ்தினும் இனியது தமிழ்; தமிழ் தந்த முருகன் தமிழினும் இனியவன் ஆவான்.

*"இருந்தமிழே உன்னால் இருந்தேன் வானோர்*
*விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்"*

என்கிறார் ஒரு புலவர். தமிழ் அமிழ்தினும் இனியதாக இருப்பதே காரணம்.

*"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்*
*தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே"*

என்பது திருமூலர் வாக்கு.

நமக்கு இந்தச் சரீரத்தையும் புலன் பொறிகளையும் மனம் முதலிய உட்கரணங்களையும் மற்றும் புவன போகங்களையும் இறைவன் வழங்கியமைக்கு காரணம் தன்னை அவற்றின் துணை கொண்டு நன்றாக தமிழ் செய்தலுக்கேயாகும் என்பது இப்பாடலில் உணர்த்தப்படுகின்றது. இறைவன் எங்கும் உள்ளவர்

"இனித் தமிழ் செய்தல்" என்பதன் உட்பொருள் என்ன என்பது சிந்தித்துத் தெளிதற்பாலது. தமிழ் செய்தல் என்பதன் பொருள் இனிமை செய்தல் நீர்மை செய்தல் அன்பு செய்தல் ஒப்புரவு செய்தல் என்பவற்றையே உணர்த்தி நிற்கின்றது என்பதை நாம் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இறைவனுக்கு இவற்றைச் செய்தல் என்பதால் இவற்றை அனைத்து உயிர்களுக்கும் செய்தல் என்ற ஆன்மீக ஒருமைப்பாட்டு

ரீதியான கருத்துத் தொக்கி நிற்பதை உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இந்த மானிடப் பிறவி எடுத்ததன் நோக்கம் தமிழ் செய்தலுக்காகும் என்பது தெளிவாகின்றது.

தமிழ் வேறு முருகன் வேறு அல்ல. "தமிழ் செய்தல்" அதே கருத்தையே "முருகனை வழிபடுதல்" என்ற தொடரும் சுட்டி நிற்கின்றது. முருகனை வணங்குதல். உபாசித்தல். ஆராதித்தல், வழிபடுதல் என்றால் சகல உயிர்களையும் நேசித்தல், அன்பு செய்தல். நீர்மை செய்தல், ஒப்புரவு செய்தல். இனிமை செய்தல் என்பவற்றை வாழ்வில் தவறாது கடைப்பிடித்தலுமாம்.

தமிழ் வாழும் மொழி; முருகன் கண்கண்ட தெய்வம்.

"என்று முள தென்தமிழ் இயம்பி இசை கொண்டான்" என்கிறார் கம்பர்.

திருமுருக கிருபானந்த வாரியார் முருகனுக்கும் தமிழுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பினைப் பின்வருமாறு கூறுகின்றார்.

*"முருகனுக்கு தோள்கள் பன்னிரண்டு"*
தமிழில் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு
*"முருகனுக்கு கண்கள் பதினெட்டு"*
தமிழில் மெய்யெழுத்துக்கள் பதினெட்டு.
*முருகனுக்கு முகங்கள் ஆறு*
தமிழில் இன எழுத்துக்கள் ஆறு.
*முருகனுக்கு வேல் ஒன்று*
தமிழில் ஆயுத எழுத்து ஒன்று"

செந்தமிழ்ப் பெருமாள் என்று அருணகிரிநாதர் முருகனை அழைக்கிறார். அந்த செந்தமிழ் முருகனே தமிழையும் தந்துள்ளான் என்பதை,

"அருணதள பாதபத்மம் அது நிதமுமே துதிக்க அரிய தமிழ் தானளித்த மயில் வீரா" என்று வரும் திருப்புகழ் அடியில் அருணகிரிநாதர் அழகாகக் குறிப்பிடுகின்றார்.

அத்தகைய செந்தமிழ் முருகனுக்கு இன்று அகில உலகிலும் திருக்கோயில்கள் உள்ளன. எனினும் தமிழ் நாட்டிலுள்ள ஆறு தலங்கள் ஆறுபடை வீடுகளாக முருகனுக்கு அமைந்துள்ளன. திருமுருகாற்றுப்படை நூல் இத்தலங்களை சிறப்பாகக் கூறுகின்றது.

அவையாவன திருப்பரங்குன்றம், திருச்செந்தூர், பழனி சுவாமிமலை மற்றும் குன்று தோறாடல், பழமுதிர்ச்சோலை என்பனவாகும்.

இந்த ஆறு படை வீடுகளும் நமது உடம்பிலே உள்ள ஆறு ஆதாரங்கள் ஆகும் எனப்படுகின்றன. மூலாதாரம்: திருப்பரங்குன்றம், சுவாதிஷ்டானம்: திருச் செந்தூர், மணிபூரகம்: பழனி, அநாகதம்: சுவாமிமலை, விசுத்தி: குன்றுதோறாடல், ஆக்கை: பழமுதிர்ச்சோலை.

ஆறுமுகக் கடவுள் எம்முள் உள்ள ஆறு ஆதாரங்களிலும் வீற்றிருக்கின்றான். அதனாலேயே நாம் உயிர்ப்புடன் இயங்குகின்றோம். அவனின்றி ஓர் அணுவும் அசையாது. இறைவன் எம் உடம்பினுள் உறைவதால் "ஊனுடம்பு ஆலயம்" என்கின்றார் திருமூலர். அகத்தூய்மை புறத்தூய்மை பேணப்பட வேண்டியதன் அவசியம் உணரப்படவேண்டியது.

புறத்தூய்மை நீரால் அமையும், அகத்தூய்மை வாய்மையால் காணப்படும் என்பர் திருவள்ளுவர். யோகப் பயிற்சி மூலம் ஆறு ஆதாரங்களையும் சுத்தி செய்யமுடியும். அந்த வகையில் அகக் கண்ணினால் எம்முள்ளே ஆறுமுகனைக் கண்டு தரிசனம் செய்யலாம்.

அதே வேளை நம் புறக்கண்களாலும் முருகப் பெருமானைக் கண்குளிரக் கண்டு தரிசிக்கவே திருப்பரங்குன்றம் முதலிய ஆறு படை வீடுகளிலும் அப்பெருமான் எழுந்தருளி வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள்புரிகின்றார். இந்த ஆறு படை வீடுகளிலும் எழுந்தருளியுள்ள முருகப்பெருமானை மனம் மொழித் தூய்மையுடன் வழிபட்டு ஓம் சரவணபவ எனும் ஆறெழுத்து மந்திரத்தை அனுதினமும் ஓதிவரும் அடியார்களின் மனக் கோயிலில் முருகப் பெருமான் நீங்காது உறைந்திருப்பான். இதனை கந்தர் கலிவெண்பா பாடல் பின்வருமாறு உணர்த்துகிறது.

*"ஆறு திருப்பதி கண்டு ஆறெழுத்தும் அன்பினுடன்*
*கூறுமவர் சிந்தைகுடி கொண்டானே"*

என அப் பாடல் வரிகள் கூறுகின்றன.

இலங்கைத்திரு நாட்டில் கதிர்காமம், மண்டூர், சித்தாண்டி, நல்லூர், செல்வச் சந்நிதி, மாவிட்டபுரம் ஆகிய ஆறு கந்தன் ஆலயங்களையும் ஈழத்து ஆறு படை வீடுகள் ஆகக் கொள்ளப்படும் வழக்கம் உள்ளது.

பகைவரை ஒழிப்பதற்காக மன்னனும் அவனின் படை வீரர்களும் தங்கியிருந்து போர் புரியும் பாசறைகளைப் படைவீடுகள் ஆகக் கொள்ளப்படும் வழக்கம் உள்ளது

பகைவரை ஒழிப்பதற்காக மன்னனும் அவனின் படை வீரர்களும் தங்கியிருந்து போர் புரியும் பாசறைகளை படைவீடுகள் எனக் குறிப்பிடுவர். முருகன் தனது தேவ சேனைகளுடன் தேவசேனாதிபதியாக இந்த ஆறு படைவீடுகளில் தங்கியிருந்து சூரபன்மன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் முதலிய அசுரர்களை அழித்ததாகக் கந்தபுராணம் கூறும். இந்த முன்று அசுரர்களும் முறையே ஆணவம் கன்மம் மாயை எனும் மும்மலங்களையும் உருவகப்படுத்துபவர்களாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. உட்பொருளை உணர்ந்து கொள்ளவது அவசியம். சூரசங்காரம் என்பது ஆணவமலநீக்கம் ஆகும்.

அறம் பொருள் இன்பம் வீடு என்பவற்றை அடைதல் வாழ்க்கைப் பயன்கள் ஆகக் கொள்ளப்படுகின்றன. "இந்தச் சரீரம் எமக்கு கிடைத்தது கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" என நாவலர் பெருமான் கூறுகின்றார். முத்தி என்பதற்கு வீடு என்று தமிழில் கூறப்படுகின்றது.. மும்மலங்களின் பிடியிலிருந்து விடுபட்டு இறைவனை அடைந்து உயிர் பேரின்பம் பெறுதலைக் குறிப்பதாக வீடு அமைகின்றது. பிறப்பு இறப்புகளிலிருந்து விடுபடுவது. அதன் பயனாக, கிடைக்கப் பெறுவது வீடு. வீட்டின்பம் என்பது பேரின்பம், நிரந்தர இன்பம், முடிவில்லா இன்பம், மரணமிலாப் பெருவாழ்வு ஆகும்.

மும்மலங்களின் கட்டிலிருந்து விடுதலை பெற்ற உயிர்களுக்கே வீடு பெறும் வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்த விடுதலையைப் பெறுவதற்கு உயிர்க்குத் திருவருள் புரிந்து உதவுபவன் முருகப் பெருமான். இதனைக் கந்தபுராணம் தெளிவாக உணர்த்துகிறது. காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம் எனும் ஆறு பகைவர்கள் மனிதர்களுக்கு உள்ளேயே இருந்து கொண்டே அவர்களுக்கு குழி பறித்துத் துன்பங்களையும் இடையூறுகளையும் செய்த வண்ணம் இருக்கின்றன. அவைகள் உட்பகைகள். வெளிப்பகையை விட உட்பகை மிகப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடியன. ஆயினும் மனிதர்கள் அறியாமை

காரணமாக உட்பகைவர்களை நண்பர்களாக கருதி நேசித்து வளர்த்து வருகின்றார்கள். அவர்களின் அறியாமைக்கு காரணம் அவர்களைப் பீடித்துள்ள ஆணவ மலம் ஆகும். பேராசை, கடும் பற்று, சினம், ஏற்றத்தாழ்வு, உணர்வு, முறையற்ற பால் கவர்ச்சி, வஞ்சம், வெறுப்பு, கர்வம் செருக்கு, பொறாமை - இவையாவும் மனிதரிடம் குடிகொண்டுள்ள தீய குணங்கள். ஆணவ மலத்தின் கொடைகள்.

ஆணவம், "நான்" எனும் அகந்தையையும், "எனது" எனும் மமதையையும் இயல்புகளாகக் கொண்டுள்ளன. நான் என்பது தற்பற்று தன்னலப்பற்று . எனது என்பது பொருட்பற்று . இப்பற்றுக்கள் வினைகளுக்கு காரணமாகின்றன. வினைகளே பிறப்புக்குக் காரணம். பிறப்பு துன்பங்களுக்கு காரணமாகின்றன. இவ்வாறு ஆணவம் உயிர்களோடு கலந்து ஒட்டியிருக்கும் வரை பிறப்பு, இறப்பு வட்டம் முடிவுற்றதாக தொடர்ந்த வண்ணமே இருக்கும். பற்றுக்கள் இருக்கும் வரை பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரையேற முடியாது என்பது சைவ சித்தாந்தம் கூறும் முடிந்த முடிபு. பற்றுக்களைக் களைதல் தூய்மை பெறல் மூலமே வீடு பேற்றினை அடைதல் சாத்தியமாகும்.

*"யான் எனது என்னும் செருக்கு அறுப்பான்*
*வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும்"* - *திருக்குறள் 346*

*பற்றி விடா இடும்பைகள் பற்றினைப்*
*பற்றி விடா அ தவர்க்கு* - *திருக்குறள் 347*

திருவள்ளுவரும் சைவசித்தாந்தத்தின் முடிபினை ஒட்டிய கருத்தினையே இக்குறள்களில் வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அடுத்து, பற்றுக்களை விட்டொழிப்பதற்கு வள்ளுவப் பெருந்தகை காட்டும் வழி முறை பின்வருமாறு அமைகின்றது.

*பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்*
*பற்றுக பற்று விடற்கு"* -*திருக்குறள் 350*

யான் எனது என்னும் பற்றுக்களை விடாமல் பற்றிக் கொண்டிருப்பதனாலேயே மனிதரைத் துன்பங்கள் விடாமல் பற்றிக் கொள்கின்றன. பிறவிகளும் தொடர்கின்றன. வீடு பேறு எட்டாக்கனியாகி விடுகின்றது. இந்த உடம்பினை "நான்" எனவும் உலகிலுள்ள எமக்குத் தொடர்பு இல்லாத பொருட்களை எனது எனவும் கருதுகின்ற மயக்கத்தை - அறியாமையை - ஆணவ மலத்தைப் போக்குகின்றவன் மாத்திரமே தேவர்க்கும் எட்டாத உயர்நிலையாகிய வீட்டின்பத்தை அடைவான் என்கிறார் திருவள்ளுவர்.

உலகியல் பற்றுக்களை துறப்பதற்கு வழி என்ன என்பதற்கும் வள்ளுவப் பெருந்தகை விடை பகர்ந்துள்ளார். நோயையும் கூறி அதனைத் தீர்ப்பதற்கான மருந்தையும் வழங்கியுள்ளார்.

''பற்றற்றான் பற்றினைப் பற்றுக'' என்று எம்மை வழிப்படுத்துகின்றார். கடவுள் ஒருவரே மும்மலப் பற்றவர். அதனால் அவர் நிர்மலர் எனப்படுகிறார். அதனால் உலகியல் பற்றுக்களை விட்டொழிப்பதற்குக் கடவுள் மீது ஆன பற்றினை மட்டும் பற்றிக்கொள்ளவேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் தளர்த்தவோ விலக்கவோ கூடாது. அத்துணை இறுக்கமாக இருக்கவேண்டும்.

மும்மலங்களையும் ஒழிக்கவல்லவன் முருகப்பெருமான். சிவனும் முருகனும் வேறல்லர். ஒரே பரம்பொருள் . சூரசங்காரம் மூலம் மும்மல ஒழிப்பு நடைபெற்றுள்ளமையைக் கந்தபுராணம் காட்டுகின்றது. ஆகவே பற்றற்றான் ஆகிய முருகப்பெருமானை இறுகப்பற்றுதல் மூலமே ஏனைய மும்மலப்பற்றுக்களை விட்டொழித்து வீடு பேற்றினை அடைய உயிர்களுக்கு முடியும் என்ற உண்மையை உணர்தல் வேண்டும்.

# கந்தர் சஷ்டி கவச மகிமை

தேவர்கள் சூரபத்மனின் கொடுமைகளில் இருந்து விடுவிக்க வேண்டி கந்தப்பெருமானை நோக்கி சஷ்டி விரதம் அனுட்டிக்கப்பட்டதால் இதற்கு கந்தர் சஷ்டி எனப் பெயர் வந்தது. சஷ்டி என்பது அமாவாசை அல்லது பௌர்ணமி நாளின் பின்னர் வரும் பிரதமையிலிருந்து ஆறாவது திதியாகும். ஐப்பசி மாதத்து அமாவாசையைத் தொடர்ந்து வரும் வளர்பிறையின் பிரதமை திதி முதலாக சஷ்டி திதிவரையிலான ஆறு நாட்களும் அனுட்டிக்கப்பட்டு வருவதே கந்தர் சஷ்டி விரமாகும்.

இந்த மேன்மைக்குரிய கந்தர் சஷ்டி விரத காலத்தில் கந்தர் சஷ்டி கவசம் பாராயணம் செய்யப்படுவது அவசியமானது. ஒரு போர் வீரனுக்கு இரும்பாலான கவசமானது பகைவரின் ஆயுதங்கள் தன்மீது படாமல் உடலைப் பாதுகாக்கும் வகையில் காவலாக விளங்குவது போல இந்த கந்தர் சஷ்டி கவசமும் படிப்போர்க்கு உடலுக்கும் உள்ளத்துக்கும் தாங்கள் வேண்டியபடி முருகப்பெருமானின் அருளால் பாதுகாக்கும் அற்புத சக்தி கொண்டதாக அமைந்திருப்பது சிறப்புக்குரியது.

கந்தர் சஷ்டி கவசம் தேவராய சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது. இக்கவசத்தில் முருகக் கடவுள் வரவேற்பு, மந்திரமாலை, பாதவருணனை, மெய்க்காப்பு வேண்டுதல், இடர் களைதல், உலகவசியம், முருகப்பெருமான் நாமாவளி, திருநீற்றுப் பெருமை, வாழ்த்துரை, குறைதெரிவித்தல், சாதனமும் இதன் பயனும், வணக்கம் என பன்னிரண்டு வகையாகப் பிரித்துள்ளார் தேவராய சுவாமிகள். சில சொற்கள் கிராமிய வழக்கில் கூறப்பட்டுள்ளது. அப்படியே அவை நடைமுறை வழக்கிற்கான சொற்களாகிவிட்டன. உதாரணமாக "நோற்க" என்ற சொல் நோக்க என வழங்கலாயிற்று

'சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வரும்' என்றொரு கிராமியப் பழமொழி உண்டு. இதன் உண்மைப் பொருளை திருமுருக கிருபானந்தவாரியார் இவ்வாறு தெளிவுபடுத்தினார். அதாவது கந்தர் சஷ்டியில் விரதமிருந்தால் அகம் என்ற பையில் அருள்சுரக்கும். என்கிறார். வாரியார்.

இறையருளைப் பெறுவதற்கு இன்றியமையாத சாதனம் "கந்தர் சஷ்டி கவசம்" என்பதில் ஐயமில்லை. கந்தர் சஷ்டி விரத காலத்தில் மட்டுமல்ல நாள் தோறும் இதனை பக்தியுடன் பாராயணம் செய்து வருவது சிறப்பான வாழ்வுக்கு துணை நிற்கும் என்பது உண்மையாகும்.

**கவிஞர் தெய்வச்சிலை**

*(நன்றி : கஷ்டங்கள் அனைத்தும் களையும் கந்த புராணம்)*



# முருகனின் அறுபடைச் சிறப்பு

முனைவர் நா. சங்கரராமன்
தமிழ்ப்பேராசிரியர்
எஸ். எஸ். எம். கலை அறிவியல் கல்லூரி குமாரபாளையம்

## முன்னுரை

பண்டைத் தமிழரின் தெய்வமாக வணங்கப்பட்டவர் முருகன் அல்லது வேலன் ஆவார். அவரையே பின்னர் வந்தவர்கள் கந்தன், சுப்பிரமணியன், ஆறுமுகம் என்ற பெயரால் வழங்கிவருகின்றனர். முருகனைப் பற்றி எழுந்த சமயமே கௌமார சமயமாகும். கௌமார சமயத்தின் முன்னோடியாக நக்கீரர் விளங்கிவந்தார். கௌமார சமயத்தின் தொடக்கத்தை நக்கீரரிடத்தும், புராண நிலையில் அதன் வளர்ச்சியை கச்சியப்பரிடத்தும், சமயநிலை உயர்வினை அருணகிரிநாதரிடத்தும், தத்துவ முழுமையினை பாம்பன் அடிகளிடத்தும், உருவத்தை அருவமாக காணும் முறையினை வள்ளலாரிடத்தும் காணமுடிகிறது.

## அறுபடையின் கோட்பாடு

சமயம் என்பது இறைவழிபாட்டைப் பற்றிய கொள்கையின் தொகுப்பு என்றும் கூறலாம். இக்கொள்கைகளை பொதுவாக நான்கு வகைகளாகப் பகுக்கலாம். அவை, உயிர், இறைவன், இறைவனை அடையும் முறை, இவை பற்றிய கோட்பாடுகளும் வழிபாடுகளும் என்பவைகளாகும். இப்பகுப்பின் அடிப்படையில் இறைவன் உறையும் இடங்களே இறையருள் வெளிப்படும் இடங்களாகும் என்ற நம்பிக்கை உள்ளது. அவ்வகையில் அறுபடை வீடு கோட்பாட்டை உருவாக்கியவர் நக்கீரர் ஆவார். இந்தக் கோட்பாட்டை நான்கு பிரிவுகளாகக் கொள்ளலாம். பிற தெய்வங்கள், முருகனைப் பற்றி செய்திகள், கோயில்கள் உருவ வணக்கம், நக்கீரரின் திருமுருகாற்றுப்படையின் மூலம் சமயக் காழ்ப்பற்ற நிலையில் தெய்வ வழிபாடு அன்றைய காலக்கட்டத்தில் நிலவியது என்பதை அறியமுடிகிறது.

"பாம்புபடப் புடைக்கும் கொடுஞ்சிறைப் புள் அணி நீள் கொடிச்செல்வன்" (திருமுருகு 150 – 151) என்று திருமாலையும், வெள் ஏறு மருக்கிய முருண்மிகு செல்வன் (திருமுருகு 152 – 155) என்று சிவனையும் இந்திரனையும் குறிப்பிடுகிறது.

## முருகனின் அறுபடை வீடுகள்

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திரு ஆவினன்குடி, திருவேரகம், குன்றுதோராடல், பழமுதிர்ச்சோலை என்பன முருகனின் அறுபடை வீடுகளாகும். திருப்பரங்குன்றத்தில் மனித உருவம் தாங்கிய முருகனாகவும் திருச்சீரலைவாயில் மனித உருவம் தாங்கிய தெய்வமாகவும், திருஆவினன்குடியில் முழுமுதற் கடவுளாகவும், திருவேரகத்தில் அந்தணர் வழிபடும் தெய்வமாகவும், குன்றுதோராடல் பழமுதிர்ச்சோலை ஆகியவற்றில் வேலன் குறமகள் வழிபடும் தெய்வமாகவும் காணப்படுகிறான்.

திருமுருகாற்றுப்படையில் முதல் அறுபத்தாறு அடிகள் திருப்பரங்குன்ற முருகனின் அழகையும் மலையின் அழகையும் விளக்குகின்றன. அடுத்து கூறப்படும் அடிகள் திருச்சீரலைவாயில் முருகனின் ஆறுமுகம் பன்னிரு கைகளும் வருணிக்கப்படுகின்றன. வேறுஎந்தப்படைவீட்டிலும்இவ்வருணனைகள்காணப்படுவதில்லை. "பல்கதிர் பிரிந்தன்று ஒருமுகம் வள்ளியோடு நகையமர்ந்தன்றே". திருஆவினன் குடியில் முருகன் தெய்வானையுடன் காட்சி தருவதாகக் கூறப்படுகிறது. இன்று அது திருப்பரங்குன்றத்தில் உள்ளது. "தா இல் கொள்கை மடந்தையொடு சின்னாள் ஆவினன்குடி அசைதலும் உரியன்" (திருமுருகு 175 – 176) என்னும் அடிகளில் தெய்வயானையுடன் முருகன் குடிக்கொண்டிருந்த கோலம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. குன்றுதோராடலில் முருகனின் தோற்றப் பொலிவு விரித்துரைக்கப்படுகிறது.

"செய்யன் சிவன் ஆடையன்.. கோட்டன் குறும்பல் இயத்தன்" (திருமுருகு 206 – 209) என்ற அடிகள் குரவைக் கூத்தாடும் இடத்திற்கு முருகன் வரும் அழகினைக் கூறுகிறது. பழமுதிர்ச் சோலையில் முருகன் ஆற்றுப்படுத்துவதாக வருணிக்கப்படுகிறார். "அரும்பெறல் மரபின் பெரும் பெயர் அளிக்கும் பொலம் பூண்சேய்" (திருமுருகு 269 – 271) திருஏரகம் தவிர பிற படைவீடுகள் அனைத்திலும் குண இயல்புகளும் காட்சி தரும் விதமும் அழகுறக் கூறப்படுகிறது.

## வழிபாட்டு முறைகள்


குமரன் குடியிருக்கும் திருப்பதிகளில் வேத வழிபாடு, வேடர் வழிபாடு, வானவர் வழிபாடு ஆகிய வழிபாட்டு முறைகளைக் காணமுடிகிறது. முருகனை வழிபடுகிறவர்கள் தலையின் மேல் கூப்பிய கையுடன் முருகனின் ஆறெழுத்து மந்திரத்தை உச்சரித்து நறுமலராய் அவனை வணங்குகின்றனர்.

## முருக வழிபாட்டின் தத்துவம்

தத்துவம் என்பது சமுதாயத்திற்கு அடிப்படையானது மட்டுமன்று சமுதாயத்தோடு இரண்டறக் கலந்து நிற்பதும் ஆகும். இல்லறத்தை நோக்கின் மிகுந்த துன்பமுடைய துறவறத்தைக் கடைபிடிப்போர் உள்ளத்திலே முருகப்பெருமானின் திருமுகங்கள் நிலை பெற்றுள்ளன. அத்தகைய ஆறுமுருகன் அருள்பெற படை வீடுகளிடத்தும் பிற இடங்களிடமும் நாடிச் செல்பவர்கள் முருகனின் அருள்பெறுவார்கள் என்று திருமுருகாற்றுப்படை நிறைவு பெறுகிறது. இதன்மூலம் இறைவனை நாடிச்செல்லும் ஆன்மா வழியில் எதிர்ப்படும் ஐயம், ஆற்றாமை, நம்பிக்கை, வேட்கை, துன்பம், இன்பம் ஆகியவற்றைக் கடந்து அமைதியாகிய வீடுபேற்றினைப் பெறும் என்ற தத்துவமும் நமக்குப் புலனாகிறது.

# அருள்மிகு ஆறுபடை வீடு

## திருப்பரங்குன்றம்



இது மதுரையில் உள்ள திருத்தலமாகும். இங்கு முருகப் பெருமான் மணக்கோலத்தில் காட்சி தருகிறார்.சூரபத்மனுடன் போரிட்டு தேவர்களை சிறை மீட்டதற்கு நன்றிக்கடனாக இந்திரன் தன் மகளான தெய்வயானையை முருகனுக்கு திருமணம் செய்து கொடுக்கிறார். முருகனுக்கும் தெய்வயானைக்கும் திருமணம் நடந்த இடமே திருப்பரங்குன்றம். இங்குள்ள சரவணப்பொய்கை எனும் புண்ணிய தீர்த்தம் மகத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றது.

## திருச்செந்தூர்



தென் தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருத்தலம் இது. கடல் அலைகள் 'ஓம்' என்ற ரீங்காரத்துடன் கரைமோதும் இடத்தில் அமைந்துள்ளதால் இத்தலத்திற்கு திருச்சீரலைவாய் என்ற பெயரும் உண்டு. முருகப் பெருமான் சூரமத்மனுடன் போரிட்டு வெற்றிபெற்ற இடம் இதுவாகும்.இதனால்தான் ஐப்பசி மாதத்து வளர்பிறை கந்தர் சஷ்டியின் போது விசேடமாக இங்கு விரதமிருந்து முருகனை வழிபாடு செய்கின்றனர்.இங்கு எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமான் செந்தில் ஆண்டவன் என்றும் அழைக்கப்படுகிறார்.

## பழனி



மதுரையில் உள்ள மற்றுமொரு திருத்தலம் இது. சித்தர்கள் வாழ்ந்த புண்ணிய பூமி என்ற பெருமை பெற்றது. மருந்தே மலையாக அமைந்த தலம். ஞானப்பழம் (மாம்பழம்) கிடைக்காத காரணத்தால் தன் பெற்றோரிடம் கோபங் கொண்டு முருகப்பெருமான் ஆண்டியின் கோலத்தில் நிற்கும் இடமே பழநி.இதற்கு திருவாவினன்குடி என்ற பெயரும் உண்டு. இங்குள்ள முருகன் விக்கிரகம் நவபாஷணத்தால் ஆனது. அதனால் தான் இங்கு அபிஷேகம் செய்யப்படும் பால், பஞ்சாமிர்தம், தீர்த்தம் போன்றவைகளை உட்கொண்டால் தீராதநோய்கள் தீரும் என்று சொல்லப்படுகிறது.

## சுவாமி மலை



தஞ்சை மாவட்டத்தின் கும்பகோணம் பகுதியில் இத்திருத்தலம் அமைந்துள்ளது. முருகப் பெருமான் தந்தைக்கு உபதேசம் செய்த இடம் இதுவாகும். இதனை திருவேரகம் என்றும் சொல்வர். பிரணவ மந்திரத்திற்குப்பொருள் தெரியாத பிரம்மனை முருகன் சிறையில் அடைக்கிறார். இதனைக் கேள்வியுற்ற சிவபெருமான் எனக்கும் பிரம்மாவுக்கும் தெரியாத பிரணவ மந்திரத்தின் பொருள் உனக்குத் தெரியுமா? என்று கேட்கிறார். அதன்படி உபதேசிப்பவன் குரு, கேட்பவன் சீடன் என்ற முறையில் முருகன் சுவாமிநாதனாக ஆசனத்தில் அமர்ந்திருக்க, அவர் கீழ் சிவன் அமர்ந்து உபதேசம் கேட்ட இடமே இந்த சுவாமி மலை.எப்போதுமே சிறந்த நீர் வளம் உள்ள இங்கு உழவர்கள் ஏர் நிலத்தை உழுது பண்படுத்திக் கொண்டிருப்பதால் ஏரகம் எனப் பெயர் வந்தது என்றும் சொல்லப்படுகின்றது.

## பழமுதிர்ச்சோலை



இத்திருத்தலம் மதுரையில் உள்ளது. இதன் தலவிருட்சம் நாவல் மரமாகும். ஒளவை யாரிடம் "சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று முருகப் பெருமான் நடத்திய திருவிளையாடல் இங்குதான் இடம்பெற்றுள்ளது. முருகன், ஒளவைக்கு நாவல் பழத்தை உதிர்த்து அளித்ததால் பழம் உதிர் சோலை எனவும், பழம் முற்றிய சோலை எனவும் பெயர் வந்ததாக சொல்லப்படுகிறது. குறிஞ்சிக் கடவுளான முருகன், நக்கீரனுக்கு வயோதிபனாகக் காட்சியளித்த இடம் இதுவென்றும், இதனையே "இழுமென இழிதரும் அருவிப் பழமுதிர்ச்சோலை மலை கிழவோனே" என்று திருமுருகாற்றுப் படை பாடலில் நக்கீரர் குறிப்பிட்டிருப்பதாகவும் சொல்வர்.


## திருத்தணிகை



இத்திருத்தலம் செங்கை மாவட்டத்திலுள்ள அரக் கோணம் பகுதியில் உள்ளது. திருச்செந்தூரில் சூரனை வதம் செய்த முருகப் பெருமான் சினம் தணிந்த இடம் என்பதால் தணிகை எனப் பெயர் வந்தது. வேடர் குலத்தில் பிறந்த வள்ளியை முருகன் காதல் மணம் செய்து கொண்ட இடமும் இதுவாகும். முருகனின் மலைத்தலங்களில் மணிமகுடமாக விளங்கும் திருத்தணிகை பகுதியிலுள்ள குன்றுகள் அனைத்தையும் குமரனின் வடிவங்களாக நினைத்து பக்தர்கள் வழிபடும் வழக்கமும் இருந்து வருகின்றது

# சுப்பிரமணியக் கடவுளும் ஔவையாரும்

அச்சுவேலி சிவாகம ஞானபானு
ச. குமாரசுவாமிக் குருக்கள்



சரசுவதியின் அம்சமாய்ப்பிறந்து, விநாயகக்கடவுளைப் பூசித்து அக்கடவுளின் திருவருளைப்பெற்ற ஔவையார், அரசசபையை வெறுத்து, கல்விச்செருக்கினால் அகங்கார முற்றுக் காட்டுமார்க்கமாக வந்தார். சுப்பிரமணியக்கடவுள் ஔவையாரின் கல்விச்செருக்கை நீக்கவும், ஒரு கலாவிநோதஞ் செய்யவுந் திருவுளங்கொண்டருளினார். ஔவையார் வரும் வழியில் குமாரக்கடவுள் பசுக்களை மேய்க்கும் ஒரு இடைச்சிறுவராகி, கோல்பொருந்திய கையையுடையவராய், நாவல் மரத்திலேறிப் பழம் தின்னுபவர்களைப் போல் நடித்து நின்றார். பசியினால் மிக வருந்தி நின்ற ஔவையார் சுப்பிரமணியக் கடவுளாகிய இடைச்சிறுவரை நோக்கி, "குமாரனே! பழத்தில் மிக்க விருப்பமுடையவனாக இருக்கின்றனை! என் பசி நீக்கச் சிலபழம் கொடுக்க" என்றார். "தாயே! சுடுபழம் தருவோமா? சுடாப்பழம் தருவோமோ? எதுவென்று கூறுவாயானால் இப்பொழுதே கொடுப்போம்" என்றார்.

ஔவையார் கேட்டுக் திகைத்து நாவற் பழங்களிற் சுடும் பழத்தை எங்கேயாவது கண்டதும் கேட்டதுமில்லை. சுடாத பழங்களே எங்கும் இருப்பதைக் கண்டும் கேட்டுமுள்ளோம். இதென்ன புதுமையென்று ஆலோசித்து அதனை அறிவோமென்று, "பிள்ளையே! சுடுகனி தருக" என்று சொன்னார். குமாரசுவாமியாகிய பாலவடிவினர் நன்றாய்க் கனிந்த சில பழங்களை மணலின் மீது எறிந்தார். அப்பழங்களை ஔவையார் எடுத்துப் பசிக்கொடுமையால் விரைந்து உண்பதற்கு விரும்பி பழங்களிலொட்டியிருந்த மண் போகுமாறு வாயால் ஊதினார். அதனைப் பார்த்த எம்பெருமான் "கிழவியே! சுட்டது போலும்? சுட்டது போலும்?" என்று திருக்கரங்களைத் தட்டிச் சிரித்தார். ஔவையார் அதுகேட்டு மிகவும் நாணி, "அறிவால் முதிர்ந்த எமக்கு நிகராவார் ஒருவருமிலரென்று இறுமாந்தோமல்லவா? அகத்திய முனிவருடைய சிறியகையுள் பெருங்கடல் உழுந்தளவாக்கி ஆசமிக்கப்பட்டதே! சிற்றுளியாலே பெருமலை தகர்ந்து ஒளிதல் கண்கண்ட விஷயமே. அறிவு யாரிடத்தடங்கற்று. அறிவுக்கும் எல்லையுண்டோ? அது நாள்வரையும் எவராலும் வெல்லப்படாமல் கூரிய மதிகொண்ட புலவர்களையெல்லாம் வென்று சிறப்புற்று விளங்கினேன். இத்தினத்தில் ஒரு சிறுவன் வெள்கச்செய்தனனே இது என்னை" என்று துன்பசாகரத்தில் (துன்பமாகிய கடல்) ஆழ்ந்தார்.

குமாரக்கடவுள் கண்டு "முதியாய்! நீ வருந்தலை" என்று தமது சுபவடிவத்தைக் காட்டி முன்னின்றார். ஔவையார் பரவசமாய், பன்முறை துதித்துநின்றார். சுப்பிரமணியக் கடவுள் கிருபா நோக்கஞ்செய்து, "பண்டிதையே! உன்னுடன் காலாவினோதஞ் செய்யவந்தோம். இனியது எது என்று" வினவியருளார். ஔவையார்,

**'இனியது கேட்கிற் றனிநெடு வேலோய்!**
**இனிது இனிது வேகாந்த மினிது**
**வதனினு மினிது வாதியைத் தொழுத**
**லதனினு மினிது வறியுள் ளோரைக்**
**கனவிலும் நனவிலுங் காண்பது தானே'**

என்று கூறினார்.

அதைக்கேட்ட கடவுள் "கலைக்கிழத்தியே! நன்று நன்று இனியது கூறினை: கொடியனவற்றையும் இவ்வுலகத்தார் அறிந்தொழுகுமாறு தெரிவிப்பாய்." என்று கட்டளை செய்தருளினார்.

அதற்கு விடையாக.

**'கொடியது கேட்கி னெடியவெவ் வேர்லாய்**
**கொடிது கொடிது வறுமை கொடிது**
**வதனினுங் கொடிது விளமையில் வறுமை**
**யதனினுங் கொடிது வன்பிலாப் பெண்டி**
**ரதனினுங் கொடிதிங் கறையி**
**னின்புற வவள்கையி லுண்பது தானே.'**

என்ற கவியை ஔவையார் சொற்றனர். அதுகேட்ட முருகவேள் "ஔவையே! அரியவற்றுளெல்லாம் அரியது யாது"? என்று வினவியருளினார்.

ஔவையார்,

**'அரியது கேட்கின் வரிவடி வேலோய்!**
**அரியது மானுட ராத லரிது**
**மானுடராயினுங் கூன்குருடு செவிடு**
**பேடு நீங்கிப் பிறத்த லரிது**
**பேடு நீங்கிப் பிறந்த காலையு**
**ஞானமுங் கல்வியு நயத்த லரிது**
**ஞானமுங் கல்வியு நயத்த காலையுந்**
**தானமுந் தவமுந் தாஞ்செய்த லரிது**
**தானமுந் தவமுந் தாஞ்செய்வ ராயின்**
**வானவர் நாடு வழிதிறந்திடுமே'**

என்றுஉத்தரங்கூறினார். "பெரியவற்றுளெல்லாம்பெரிது யாது" என்று குமாரக்கடவுள் கேட்டருளினார். ஔவையார்

அவருடைய திருவடிகளை வணங்கி, ''எங்கள் தெய்வமே! தேவரீர் அறியாத தொன்றுண்டோ? எல்லாவறிவுமுடைய தேவரீர் நாயினுங் கடைப்பட்ட பேதையேனை வினவல், பிதாமாதாக்கள் தமது சிறுவர்களது வாயினின்றுண்டாகும் குதலை வார்த்தையைக் கேட்டுச் சந்தோஷமுறுதல் போன்றது'' என்று கூறுவாராயினார்.

'பெரியது கேட்கி னெரிதவழ் வேலாய்!
பெரிது பெரிது புவனம் பெரிது
புவனமோ நான்முகன் படைப்பு
நான்முகன் கரியமா லுந்தி வந்தோன்
கரிய மாலோ வலைகடற் றுயின்றோ
னலைகடல் குறுமுனி யங்கையி லடக்கங்
குறுமுனி யோகல சத்திற்பிறந்தோன்
கலசமோ புவியிற் சிறுமண்
புவியோ வரவினுக் கொருதலைப் பார
மரவோ வுமையவள் சிறுவிரன் மோதிர
முகையோ விறைவர் பாகத் தொடுக்க
மிறைவரோ தொண்ட ருள்ளத் தொடுக்கந்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லலும் பெரிதே'

என்று கூறிய உத்தரத்தைக் குமாரக்கடவுள் கேட்டு மகிழ்ந்து பண்டிதாய்! உனது விடைகளைக் கேட்டுச் சந்தோஷமுற்றோம். பசி, பிணி, நரை, திரை முதலியன இல்லாதபடி நெடுங்காலம் வாழ நினைப்பாயாகில், சேரநாட்டிலே பெருமலையின் முழையிடத்தே கருநெல்லியிலே அமிர்தம் போன்ற இனிய பழமொன்றிருக்கின்றது. அரசனாகிய அதிகமான் நெடுமான் வஞ்சியைப் பாடிக்கேட்பாயானால் தருவான். அதை உண்டு நன்றாக வாழ்குதி'' என்று கிருபை செய்து மறைந்தருளினார். அத்திருவாக்கின் படியே ஔவையார் கொங்கநாட்டில் கருவூரை அடைந்து, அங்கே அரசாட்சி செய்திருந்த அதிகமாநெடுமான் வஞ்சியைப் பாடி, நெல்லிக் கனியுண்டு நெடுநாள் வாழ்ந்திருந்தனர்.

(நன்றி : சைவப்பிரகாசிகை)

## சத்தியவித்தகர் எடுத்துக்காட்டும் இந்து மதத்தின் சிறப்பியல்பு



இந்து சமயம் என்றாலே அது படிப்பினைகள் நிறைந்தது தான். ஒரு நோக்கை அடைய இன்னொன்றைப் பாவிப்பதும், தெரிந்ததைக் கூறித் தெரியாத இன்னொன்றைப் புரிய வைப்பதும், இன்னொருவரின் அனுபவத்தை எங்கள் வாழ்க்கை மேம்பாட்டிற்காகப் பாவிப்பதும் இந்து மதச் சிறப்பியல்புகளில் சில. மனித வேற்றுமைகளைப் புரிந்து, அவர்களின் மனோநிலைகளை அறிந்து, எவர் எவர்க்கு எந்தெந்த ஆன்மீக மார்க்கம் தோதானதோ, பொருத்தமானதோ அதனை அவர்களுக்குக் கிடைக்கச் செய்வது தான் இந்து மதத்தின் தனிச் சிறப்பியல்பு. 'இதுதான் ஒரே வழி இப்படித்தான் செல்ல வேண்டும். வேறு வழிகள் இல்லை' என்று எங்கள் மதம் கூறுவதில்லை. 'ஏகம் சத் விப்ரா பகுதா வதந்தி' என்பது தான் அதன் அடிப்படைஉண்மையொன்று; பல விதங்களில் அதனை மக்கள் விமர்சிப்பர் என்று தான் இந்து மதம் கூறுகிறது. மதங்களின் இதயம் ஒன்றாக இருப்பினும் அவற்றைச் சுற்றி இருக்கும் இழைபாடுகள் வித்தியாசமாக வித்தகர்களால் விமர்ச்சிக்கப்படலாம் என்று இந்து மதம் புரிந்திருந்தது. அறிவுக்கு அப்பாற்பட்ட ஒன்றை அறிவால் தன் அதிகார வட்டத்தினுள் கொண்டு வர முடியாது என்பதையும் எம்மதம் உணர்ந்திருந்தது. அகத்தினால் உணர முடியுமே தவிர அறிவினால் அறிவுக்கு அப்பாற்பட்ட அதனை சிறைப்படுத்த முடியா தென்பதையும் எங்கள் மதம் உணர்ந்திருந்தது. காண்பவர்கள் ஒரே காட்சியைத்தான் காண்பார்கள் என்று எம்மதம் கொள்ளவில்லை. காண்பொருள் காண்பவர் கண்களில் தங்கியிருக்கிறது என்ற இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்பையே இந்துமதம் வலியுறுத்தியது.

சத்தியவித்தகர்
நீதியரசர் சி. வி. விக்கினேஸ்வரன்

## தொல்காப்பியத்தில் முருகன்

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய சங்க இலக்கியங்களில் முருகன் பேசப்படுகிறான். இன்றைய தமிழ் நூல்களிலே மிகவும் பழமையானதாகக் கருதப்படும் தொல்காப்பியத்தில் முருகனைப் பற்றிய குறிப்பு உள்ளது. "சேயோன் மேய மைவரை உலகமும்"என்று குன்றா அழகுடைய குறிஞ்சிநிலக் கடவுளாக அவன் சிறப்பித்துச் சொல்லப்பட்டுள்ளான்.



# வாழ்வை புனிதமாக்கும் தீபாவளித் திருநாள்

திருமதி நாச்சியார் செல்வநாயகம்
*முதுநிலை விரிவுரையாளர் – இந்து நாகரிகத்துறை*
*யாழ்பல்கலைக்கழகம்*

தீப + ஆவலி = தீபாவலி. தீபங்களின் வரிசை எனப் பொருள்படும். தீபாவலி என்ற சொல் பிற்காலத்தில் தீபாவளி என்று வழங்கப்படலாயிற்று. வீடுகளையும் ஆலயங்களையும் தீபங்களை வரிசையாக வைத்து அழகுபடுத்திக் குதூகலித்துக் கொண்டாடும் பண்டிகை (திருநாள்) தான் தீபாவளியாகும். ஐப்பசி மாதத்து திரியோதசி இரவிற் பொழுது புலரும் காலத்தில் வரும் சதுர்த்தசி தினத்தில் கொண்டாடப்படுவதாகும். இத்தினத்தை நரக சதுர்தசி எனவும் கூறுவர். நரகாசுரனுக்கு கிருஷ்ணபகவான் மோட்சமளித்த காரணத்தினால் இச்சதுர்த்தசி "நரகசதுர்த்தசி" எனப்படுவதாயிற்று என்பர். இக்காலத்தில் செய்யப்படும் ஸ்நானம் நரக சதர்த்தசி ஸ்நானம் என்று அழைக்கப்படும்.

தீபாவளித் திருநாள் பற்றிய புராண ஐதீகங்கள் பலவாறாகக் காணப்படுகின்றன. அவற்றில் நரகாசுரன் பற்றிய கதையே மக்களிடையே பெரிதும் அறியப்பட்டிருக்கின்றது. அது வருமாறு. "நரகாசுரன் பிரம்மாவை நோக்கித் தவம் செய்து பலவரங்களைப் பெற்றான். அந்த வரங்களால் பலரையும் துன்புறுத்தினான். இந்திரனுடன் போரிட்டான். முனிவர்களையும் துன்புறுத்தினான். இதனைத் தாங்கமாட்டாத தேவர்களும் முனிவர்களும் கிருஷ்ணபகவானிடம் சென்று முறையிடவே அவர் சத்தியபாமாவின் துணையுடன் நரகாசுரனுடன் போர் தொடுத்து அவனைக் கொன்றார். கிருஷ்ணனால் கொல்லப்படும் சமயத்தில் நரகாசுரன் கிருஷ்ணனை வணங்கி தான் செய்த தீமைகளைப் பொறுத்தருளி நான் இறக்கும் இந்நாளைக் கொண்டாடி மக்கள் மகிழ வேண்டும் என்றும், அந்நாளில் மக்கள் என்னை நினைத்து நீராடி புத்தாடை புனைந்து ஆலய வழிபாடு செய்து தானதருமஞ் செய்ய வேண்டுமெனவும் வேண்டியதாகவும் கூறப்படுகின்றது."

இறைவனிடம் ஒருவன் எவ்வளவு வரங்களைப் பெற்றாலும் அவனிடம் அகந்தை இருக்குமேயானால் அவன் தன் சக்தியைத் தீயவழியில் பயன்படுத்தி இறப்பையே சந்திக்கின்றான். ஒருவன் இறக்கும் தறுவாயில் ஏற்படும் விழிப்புணர்வு அதாவது தான் செய்த கொடுமைகள் பற்றிய கழிவிரக்கத்தினால் தன் செயல்களுக்கு வருந்துவதானால் இறையருட்பேற்றை அடைகின்றான். நாம் மற்றவர்களுக்குச் செய்த துன்பத்தை நினைத்த நமக்குள்ளே வேதனைப்பட்டு பிறருக்குத் தீங்கு செய்தல் பெரும் பாவம் என்பதை உணரும்போது நம் அகம்பாவம் மறைந்து நாம் தெய்வ நிலை பெறமுடியும் என்பதே தீபாவளித் தத்துவம் உணர்த்தி நிற்கின்றது. நான், எனது என்னும் அகந்தை மமதைகளினால் மனிதன் தன்னையே அழித்துக் கொள்கின்றான். "நன்றும் தீதும் பிறந்தர வாரா" என்பது சங்ககால சான்றோர் கூற்று. நாம் இறைவனை வணங்கும்போது பிற உயிர்கள் நலமாகவும் வளமாகவும் வாழவேண்டும் என்ற நிலையில் பிறர்நலன் பொருட்டுப் பிரார்த்தனை பண்ணுவதனால் நம் உள்ளம் மலர்ச்சி பெறுகின்றது. அதனால் நாம் தெய்வ அனுக்கிரகத்தைப் பெற்று வாழ்வில் உன்னதம் அடைகின்றோம். நம்மை நாம் அகம்பாவத்தினால் குறுக்கும் போது நம் மனம் முழுமையாக சுருங்கி விடுகின்றது. இதனால் வாழ்வில் கீழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றோம். மனிதன் அகம்பாவத்தை விடுத்து உலகத்துடன் இணைந்து வாழும்போது ஆனந்தம் அடைகின்றான்.

"சர்வேஜனகா சுகினோ பவந்து" என்றும் "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதேயல்லால் வேறொன்றுமறியேன் பராபரமே" என்னும் அருளாளர்கள் கூறுவது சிந்தித்துச் செயற்பட வேண்டியதொன்றாகும். "ஜந்தூனாம் நரஜன்மதுர்லபம்" என்று ஆதிசங்கரர் கூறியிருக்கின்றார். அதாவது ஜந்துகளில் மனித உடல் எடுப்பது மிகவும் கிடைத்தற்கரிய பேறாகும். "அரிது அரிது மானிடராதல் அரிது" என்று ஔவையார் என்ற அருளாளர் கூறியிருப்பதும் மனித உடலின் மகத்துவத்தையும் அது தெய்வ அனுபவம் பெறுவதற்குக் கிடைத்த கருவி என்பதையும் உணரும் போதே உடலின் சிறப்பை உணரமுடியும். "தேஹோ தேவாலயம்" (தேகம் தேவாலயம்) என்பது அருள்வழிப்பட்ட உண்மையாகும். தீபாவளித் திருநாள் மக்களை ஒன்றுகூடச் செய்யும் மகோன்னதமான விழாவாகும். ஏனெனில் அன்றைய தினம் குடும்பத்தினர் பிரம்ம முகூர்த்தத்தில் எழுந்து எண்ணெய் ஸ்நானம் செய்து புத்தாடை புனைந்து வீட்டிலும் ஆலயங்களிலும் வழிபாடுகள் செய்து உறவினர், அயலவர் வீடுகளில்

பகைமைகளை மறந்து விருந்து உண்டு குதூகலிக்கும் நாளாகும்.

நம் ஒவ்வொருவருக்கும் மலர்போல் மலர்கின்ற மனம் வேண்டும். எல்லோரும் போற்றிடும் குணம் வேண்டும். வாழ்க்கையில் முழுமனதுடன் வாழவேண்டும். சுவாமி தயானந்த சரஸ்வதி "மனம் மலர வேண்டும் அது பூத்துக் குலுங்க வேண்டும்" என்று கூறுவது மனங்கொள்ளத்தக்கதாகும். மனிதர்கள் பலவிதமாக இருந்தாலும் நல்வாழ்வு வாழ்வதற்கான அடித்தளம் ஒன்றுதான். அது என்னவென்றால் பரோபகார சிந்தனையும். நன்றியுணர்வும் தான். இத்தகைய பரோபகார சிந்தனையும் நன்றியுணர்வும் மக்களிடையே வளர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தே ஞானிகளாலும் அருளாளர்களாலும் குடும்பங்களும் சமூகங்களும் ஒன்றுகூடி அன்பு பொங்க கொண்டாடும் கொண்டாட்டங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

இந்து சமயத்துடன் இணைந்த விழாக்கள் நாம் மகிழ்ச்சியுடன் இருப்பதற்கான சந்தர்ப்பத்தை அளிப்பதோடல்லாமல் உன்னதமான தெய்வீக நிலை எனும் லட்சியத்தையும் நம் சிந்தையில் நிறுத்தி அந்த இலட்சியத்தை அடைவதற்காக எம் சிந்தையை அந்த உயர்ந்த நிலைக்கு உயர்த்துவதற்கு நமக்கு உத்வேகத்தையும் அளிக்கின்றன. உள்ளத்தையும் உடலையும் தூய்மைப்படுத்தி உள்ளத்திற்கும் உடலுக்கும் பேராற்றலைத் தருவன இத்திருநாட்கள்.

வாழ்க்கையை முழுமையாக வாழ அதாவது உடல், உள ஆன்மீக ரீதியில் முழுமையான உற்சாகத்துடனும் அதேநேரம் சாந்தியும் ஆனந்தமும் பெற்றுக் குதூகலிக்கவும் இவ்விழாக்கள் பெருந்துணை புரிகின்றன.

ஸ்ரீ இராமபிரான் வனவாசத்தைப் பூர்த்தி செய்த பின் அயோத்திக்குத் திரும்பிய நாள் தீபாவளித் திருநாள். அன்றைய தினம் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரத்தால் குதூகலித்துக் கொண்டாடினர். மகாபலிச் சக்கரவர்த்தி முடிசூடிக்கொண்ட தினமும் தீபாவளித் திருநாளாகும். ஆதிசங்கரர் ஞானபீடங்களை அமைப்பதற்கு ஓர் தீபாவளித் திருநாளில் அருள் பெற்றார் எனவும் கூறப்படுகின்றது. ஜைனர்கள் தங்கள் மதஸ்தாபகரனான மகாவீரர் பரிநிர்வாணமடைந்த நாள் தீபாவளித் திருநாள் என்று கொண்டாடுகின்றார்கள். சீக்கிய மதகுருவான குருநானக் வீடுபேறு பெற்ற நாள் தீபாவளி ஆகும். மேலும் ஆரிய சமாஜத்தைத் தோற்றுவித்து அதன்மூலம் இந்து தர்மத்தை வளர்த்த தயானந்த சரஸ்வதியும் தீபாவளித் தினத்தன்று மோட்சம் அடைந்ததாக அறியக் கிடக்கின்றது.

காமிகம் காரணம், வாதுளம் சுப்பிரபேதம் என்ற ஆகமங்கள் தீபாவளியை ஒரு புனிதமான கொண்டாட்டத்திற்குரிய திருநாளாகக் கூறுகின்றன. மேலும் வங்காளிகள் இத்தினத்தை காளியைப் பூஜித்துக் கொண்டாடும் தினமாகவும் வடநாட்டிலும் கிழக்கு ஆசிய நாடுகளிலும் தீபாவளித் தினத்தை குபேரனை வழிபட்டு அருள்பெறும் நாளாகவும் கொண்டாடுகின்றனர்.

இருளிலிருந்து ஒளிக்கும், சாவினின்று சாவாமைக்கும், அறியாமையிலிருந்து அறிவுக்கும் மனிதனை வழிப்படுத்துவது அருள் ஒளி. இந்த அருள்ஒளி பெறுவதற்கு மனிதனின் அகம்பாவம் நீங்க வேண்டும். இறைவனைப் பூரண சரணாகதி அடைந்தவனிடத்திலேயே அகங்காரம் ஒடுங்கி விடுகின்றது. அவனிடத்திலே இறையருளால் உள்ளொளி விளைகின்றது. உள்ளொளி மூலம் பூரணமான சத் + சித் + ஆனந்தம் ஆன பொருளை அறிந்து அனுபவிக்க முடியும் என்பது ஞானிகளின் அனுபவக் கூற்று. தீபாவளித் திருநாள் எம்மனங்களில் உள்ள கள்ளத்தை நீக்கி எம்மைப் புனிதமாக்குவதற்கான திருநாள். உள்ளம் ஒளி பெறுவதற்கு மனிதனை ஆற்றுப்படுத்தும் ஒரு விழா. மனிதன் திறந்த மனத்துடன் குடும்பத்தவருடனும் சமூகத்துடனும் இணைந்து கொண்டாடும் திருவிழா. மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்து அறம் என்பது வள்ளுவரின் அருள்மொழி. அதனை மணிவாசகர் "நெஞ்சில் வஞ்சம் கெடப் பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே" என்று கூறுவது நோக்கற்பாலது. அகந்தை உள்ள இடத்தில் வஞ்சனை இருக்கும். எனவே மற்றவர்களை வதைத்துக் கொடுமைப்படுத்திப் பார்க்கும் தன்மை அகங்காரம் கொண்ட வஞ்சனை மனத்தின் இயல்பு. அதை அருளால் தெய்வீக மனமாக மாற்றினால் அது மற்றவர்களுடன் இணைந்து கொண்டாடும் இனிய அன்பு மனமாக மலர்ச்சி பெறும்.

உள்ளம் அன்பினால் ஒளிபெறும் போது இதயபூர்வமான பூரண வாழ்வு லயிக்கின்றது. பொறிபுலன்கள் எல்லாம் ஒளிவீசும் தீபங்களாக மலர்ச்சி பெறுகின்றன. எனவே நம் அகவிளக்காகிய மனத்தின் இருள் கெட அன்பெனும் தீபம் பிரகாசம் பெறுகின்றது. அன்புத் தீபம் நம்மை என்றும் அழியாத நித்தியத்தை அளிக்கின்றது. நரகாசுரன் கதையின் மூலம் நாம் அறிந்து கொள்வது நம் அகம்பாவத்தை நீக்கி அன்பில் நம்மை ஒளிவீசச் செய்வதே தீபத்திருநாளாகும் என்பதாகும். உண்மையாக ஒருவன் வாழும் போதே அவனுடைய வாழ்வு கொண்டாட்டமாகின்றது. புறத்தே வீட்டிலும் ஆலயங்களிலும் தீபத்தை ஏற்றும் நாங்கள் நம் அகத்தே அன்பொளியை ஏற்றாது விடலாமா? அன்பே உலக மகாசக்தி. அதுவே ஒளி. அதுவே சத்தியம். அதுவே சிவம். அதுவே ஆனந்தம். அன்பு ஊற்றெடுத்துப் பாயும் போது இடம்பெறுவது கொண்டாட்டம். எனவே தீபாவளி என்பது மனிதன் அன்பினை வளர்த்து அதனால் ஒளிபெறும் திருநாளாகும். கர்மேந்திரியங்களையும் ஞானேந்திரியங்களையும் அன்புவழிப்பட்ட நிலையில் செயற்படுத்தும் போது அவையெல்லாம் ஒளியைப் பாய்ச்சுகின்றன. ஒளி பெற்ற புலன்கள் ஒழுங்குநிலையில் செயற்படும்போது அது தீபாவளியாகின்றது.



# நம்பிக்கை ஒளி நல்கும் தீபாவளி


த. மனோகரன்

மாமன்ற உபதலைவர், மாமன்ற கல்விக் குழுச் செயலாளர்


எத்தனை துன்பங்கள், துயரங்கள் வந்தாலும் இறைவன் மீது கொண்ட நம்பிக்கை மூலம் அவையெல்லாம் இல்லாதொழிக்கப்படும், ஒவ்வொருவரது வாழ்விலும் இன்பம் நிறைந்துவிடும் என்ற நம்பிக்கையை உலகத்தோருக்கு உணர்த்தும் நன்னாள் தீபாவளித் திருநாள்.

உலகமெங்கும் பரந்துவாழும் இந்துப் பெருமக்களால் கொண்டாடப்படும் தீபாவளிப் பண்டிகை பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது. இறை நம்பிக்கையூட்டுவதுடன் சமுதாய இணைப்புக்கும், பிணைப்புக்கும், பண்பாட்டின் வெளிப்பாட்டிற்கும் இத்திருநாள் வலுவூட்டுவதாயமைந்துள்ளது.

இந்து மக்களின்சிறப்பு வழிபாட்டுத்தினங்களாகப் பல நாட்கள் வழக்கிலுள்ளன. இச்சிறப்பு நாட்கள் விரதநாட்களென்றும், பண்டிகை நாட்களென்றும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

விரத நாட்கள் தனிப்பட்ட ஒழுங்கைப் பேணி இறைவழிபாடு செய்யும் நாட்களாகவும், பண்டிகை நாட்கள் சமயரீதியில் சமுதாய இணைப்பையும், பிணைப்பையும் வலுப்படுத்தும் நாட்களாகவும் அமைகின்றன.

விரதநாட்கள் பசித்திருந்து, தனித்திருந்து இறைதியானம் செய்வதுமாயமைந்துள்ளன. சிவராத்திரி போன்ற விரத நாட்களில் விழித்திருந்தும் இறைவழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. அதாவது விரதங்கள் சுயகட்டுப்பாட்டுடன் சமய வழிபாட்டைப் பேணுவதாயமைகின்றது. தனிமனித இறைவழிபாடாக அமைகின்றது.

பண்டிகை நாட்கள் விரதநாட்களிலிருந்து வேறுபடுகின்றன. பண்டிகை நாட்கள் சமயரீதியான சில சடங்குகளுடன் சமுதாயப்பிணைப்பு, உறவுகளின் இணைப்பு மற்றும் கலை, பண்பாடுகளின், கலாசாரத்தின் வெளிப்பாடு என்பவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்படுகின்றன.

மகா சிவராத்திரி, மார்கழித் திருவாதிரை, பிரதோஷ விரதம், கேதாரகௌரி விரதம், சோமவார விரதம், ஆடி அமாவாசை, சித்திரா பௌர்ணமி விரதம், ஏகாதசி விரதம் உட்பட பல விரதங்கள் இந்துக்களால் கைக்கொள்ளப் பட்டுவருகின்றது.

அதேபோன்று தைப் பொங்கல், சித்திரை வருடப்பிறப்பு, ஆடிப்பிறப்பு, காமன்பண்டிகை, ஓணம் பண்டிகை, தீபாவளி போன்றவை இந்துக்களால் பண்டிகைகளாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.



வட இந்தியாவிலே தீபாவளித் திருநாள் ஐந்து நாட்கள் கொண்டாடப் படுகின்றன. தென் இந்தியாவிலே இரண்டு நாட்கள் கொண்டாடப்படுகின்றது. இங்கிலாந்து, ஐக்கிய அமெரிக்கா போன்ற நாடுகளும் தீபாவளித்தினத்தைச் சமய முக்கியத்துவம் வாய்ந்த தினமாக அரச மட்டத்திலே அங்கீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



நரகாசுரன் என்ற கொடிய அசுரன் அழிந்த நாளாகத் தீபாவளியைப் புராணங்கள் கூறுகின்றன. நரகாசுரன் தனது கொடுஞ் சிந்தனையால் தர்மத்தை வீழ்த்தி அதர்மத்தின் உச்சத்தில் ஆணவத்துடன் அல்லல் பல செய்து உலகின் நிம்மதியைக் கெடுத்தான். உலகமே அவனின் அதர்மச் செயற்பாடுகளால் அச்சமுற்று, அல்லற்பட்டு, நிம்மதியின்றித் தவித்தது. அவனது கொடுங் கோன்மையிலிருந்து விடுபடக்காக்கும் பெருங்கடலான திருமாலின் திருவடியை உலகமே சரணடைந்தது.

கருணைக்கடலான திருமால் காலத்திற்குக்காலம் அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநிறுத்துவதற்காகத் தோன்றுவார், என்பது இந்துக்களாகிய நாம் வாழையடிவாழையாகக் கொண்டுள்ள நம்பிக்கையாகும். அதே வழியில் நரகாசுரனை அழிக்க, அவனின் கொட்டத்தை அடக்கி உலகிலே நிம்மதி நிலைபெறச் செய்து தனது சக்தியின் மூலம் அருளிய நாளாகத் தீபாவளி நன்னாள் கொள்ளப்படுகின்றது. இந்நாளிலேயே நரகாசுரன் செயலிழக்கச் செய்யப்பட்டு ஆணவமும், அகங்காரமும் அடங்கிய நாளாக இந்நாள் கொள்ளப்படுகின்றது எனப் புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

நமக்கும் மேலான ஒரு சக்தியுண்டு. எத்தனை துன்பங்கள், துயரங்கள் வந்து நம்மைவாட்டி வதைத்தாலும் இறைவன் மீது பூரணபக்தி கொண்டு நம்பிக்கையுடன் அவனருள் நாடித் தொழுதால் நிச்சயம் அந்த மேலான சக்தியின் அருளால் நம்மைச் சூழ நின்று அல்லல்படுத்தும் அனைத்துத் தீமைகளும் அகன்றுவிடும் என்ற நம்பிக்கையையூட்டும், உணர்த்தும் நன்னாள் இத்தீபாவளித் திருநாள். அதர்மம் அழிந்ததால், அழிக்கப்பட்டதால் உலகம் குதூகலம் கொண்ட நாள் இந்நாள்.

தீபாவளித் திருநாள் கொண்டாட்டங்களுக்குரிய நாளாக மட்டும் கொள்ளாமல் அதில் புதைந்துள்ள தத்துவக் கருத்துக்களை, நம்பிக்கையூட்டும் தன்மைகளை, தூாற்பரியங்களைப் புரிந்துகொண்டு இறைவழிபாடு செய்யவேண்டும். மனத்திலே அச்சம் அகன்று தைரியம் பொங்கும் நாளாக இந் நன்னாளை எதிர்கொள்ள வேண்டும்.

இறை நம்பிக்கையுடன் எதையும் தாங்கும் இதயத்துடன் வாழும் சக்தியை உருவாக்கும் உன்னத நாளாகக் கொள்ள வேண்டும்.

# ஈசனுடன் ஞான மொழி பேசும் முருகன்

பாலமுருகன் தனது தோழர்களுடன் விளையாடிக் கொண்டிருக்கிறார். அவ்வேளையில் அங்கு வந்த இந்திரனும் ஏனைய தேவர்களும் பாலமுருகனை வணங்கிச் செல்கின்றனர். ஆனால் பிரம்மன் மட்டும் முருகனை பாலன்தானே என்ற எண்ணத்திலும், தான் என்னும் அகந்தையிலும் வணங்காது சென்றார். பிரம்மனின் அகந்தையை அடக்க விரும்பிய முருகன் வீரவாகுதேவரை அனுப்பி பிரம்மனை அழைத்துவரச் செய்கிறார். பிரம்மனை வேதம் ஓதுமாறு கூறுகிறார். பிரம்மனும் 'ஓம்' என்று சொல்லி வேதத்தை கூறத் தொடங்குகிறார். முருகன் அவரைத்தடுத்து முதலில் 'ஓம்' என்பதற்கு பொருள் கூறும்படி கேட்க பிரம்மன் பிரணவத்தின் பொருளை கூறமுடியாது தவித்தார். பிரணவத்தின் பொருள் தெரியாதவர் படைப்புத் தொழில் புரிவது தவறு எனக்கூறி பிரம்மனுடைய நான்கு தலைகளிலும் குட்டிவிட்டு அவரை சிறையில் அடைத்துவிட்டு படைப்புத் தொழிலை முருகனே மேற்கொள்கின்றார். இதனால் திருமாலும் தேவர்களும் சிவபெருமானிடம் சென்று முறையிடுகின்றார்கள். சிவபெருமானின் உத்தரவின்படி பிரம்மன் விடுவிக்கப்படுகிறார். சிவன் முருகனிடம் 'ஓம்' என்ற பிரணவப்பொருளில் விளக்கத்தை தனக்கும் உபதேசிக்க வேண்டும் எனக்கேட்க முருகன் தன் தந்தையான சிவன் மடியில் அமர்ந்து குரு



நிலையில் தன் தந்தையின் காதுகளில் உபதேசிக்கின்றார். சிவனுக்கே உபதேசம் செய்ததால் குருநாதன், சுவாமிநாதன் என்ற பெயர்களை முருகன் பெற்றார் என்பது புராணவரலாறு.

இந்தச் சம்பவம் நிகழ்ந்தது சுவாமிமலை தலத்திலாகும். முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகளில் ஒன்றான இதற்கு திருவேரகம் என்ற பெயரும் உண்டு.

(நன்றி : முத்தமிழ் கடவுள் முருகன்)

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதர்மத்தை அழித்துத் தருமத்தை நிலைநிறுத்த இறைவன் அருள் என்றும் உண்டு என்பதை உணர்ந்து துவண்டுவிடாது துடிப்புடன் வாழ இத் தீபாவளித் திருநாளின் தத்துவச் சிந்தனை நமது உள்ளங்களைச் சீர்செய்ய உதவும்.

சமுதாய உறவை மேம்படுத்தி, மகிழ்ச்சியாக, நிம்மதியாக வாழும் நிலை ஏற்படுத்தப்பட்டு இறைவனின் நீதியை எடுத்தியம்பும் அடையாளத் திருநாளாகிய தீபாவளித் தினத்திலே தீயபகை, கொடுமைகள் யாவும் பூண்டோடு பொசுங்கிவிட நல்ல சிந்தனைகளும், நோக்கங்களும், செயற்பாடுகளும் மேலோங்கிவிட இறைவனை வேண்டுதல் செய்து ஆறுதல் பெற நம்மனங்களை ஆற்றுப்படுத்தும் நாள் தீபாவளித் திருநாள்.

உற்றாரை, பெற்றோரை, உடன் பிறப்புக்களை இழந்தும் சொத்து சுகங்களை இழந்தும் சொந்த மண்ணில் அந்நியராய், அகதியாய், அனாதைகளாய் அல்லற்பட்டு அவதியுறும் நம்மக்களைச் சூழ்ந்துள்ள அவலங்கள் யாவும் அகலவேண்டும். அகற்றப்பட வேண்டும். இது எமது தீபாவளிப் பிரார்த்தனையாக அமையவேண்டும்.

தனக்காக மட்டுமன்றி தனது குடும்பம், உறவு, சமூகம், நாடு என்றுயாவுமே நலம் பெற வேண்டும், வளம் பெற வேண்டும், நிம்மதி பெற வேண்டும் என்பதே இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகளின் உட்பொருளாக, நோக்காக அமைகின்றது. நோக்கை, தத்துவத்தை மறந்து, புறந்தள்ளி கொண்டாடப்படும் பண்டிகைகளால் பயனில்லை. உறவுக்கு முக்கியத்துவம் கொடுப்பவையே இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள். இதன்மூலம் உறவின் முக்கியத்துவத்தை, பெறுமதியை இந்துசமயம் வலியுறுத்துவதையும் அறியலாம்.

எதற்கும் ஓர் எல்லையுண்டு என்பார்கள். அதை உலகிற்கு வெளிப்படுத்தும் தினமாகவும் தீபாவளியைக் கொள்ளலாம். நரகாசுரனின் எல்லை மீறிய தொல்லையை அடக்க இறைசக்தி பிரயோகிக்கப்பட்டது அன்று.

அதே சக்தியுடன் வெளிப்பட்டு ஏனென்று கேட்போரை இகழ்ந்து, இட்டதுதான் சட்டமென எண்ணி, தானென்ற அகந்தையுடன் செயற்பட்டு மனிதகுல நிம்மதியைக் கெடுப்போரின் கொடுஞ்செயலை அடக்கியருள வேண்டுமென்று காக்கும் கடமைகொண்ட திருமாலின் திருவடியைச் சரணடைந்தால் துன்பங்கள் தொலையும், துயரங்கள் அண்டாது வாழ்விலே வளம், பலம், மகிழ்ச்சி, நிம்மதி, இரக்கம் என்று பலவும் நம்மை நாடிவரும். நாம் நல்லவர்களாக, நன்மனம் கொண்டவர்களாக, மற்றவர்களின் துன்ப, துயரங்களுக்குக் காரணமாக இல்லாதவர்களாக இருந்தால் மட்டுமே இறையருளால் உயர்வடைய முடியும் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

"ஒருமையுடன் தனது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும். உள்ளொன்று வைத்தும் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்" என்றார் இராமலிங்க வள்ளலார். அதன் பொருளை ஒவ்வொருவரும் உணர்ந்துவிட்டால் நிம்மதி நிறைந்த வாழ்வை வாழலாம்.

வெறும் சம்பிரதாயங்களுக்கப்பால் சமயத்தின் அடிப்படைக் கோட்பாடுகளைப் புரிந்து கொண்டு வாழ வேண்டும். அதுவே சீர்மைபெற்ற சமயவாழ்வு.

தீபாவளித் திருநாளின் தத்துவத்தைப் புரிந்து வாழ்வைச் சீர்செய்து கொண்டு காலவெள்ளம் அள்ளி வந்த வேதனைகள் நீங்கி எல்லோரும் நலம் சூழ, வாழ்வு சிறக்க வாழ இத்தீபாவளி நன்னாளிலே ஒருமனதுடன் இறைவனைத் தொழுது நிற்போம். சங்கடங்கள் நீங்கி, நிம்மதியான எதிர்காலம் அமைய உரிய வழியைக் கைக்கொண்டு, உறவுகளைப்பேணி, இறை வழிபாடு செய்து நலன்கள் யாவும் பெறுவோம்.

வாழ்வைத் தன்னம்பிக்கையுடன் எதிர்கொள்ள வழிசமைக்கும் நன்னாளாக இத்தீபாவளித் திருநாள் அமையட்டும்.

# திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

ஐந்தாம் குரவர் என சைவத்தமிழ் உலகம் போற்றும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் குருபூசை தினம் இம்மாதம் (நவம்பர்) 24 ஆம் திகதியாகும். டிசெம்பர் 5ஆம் திகதியன்று இவரது நினைவு தினமாகும். மாமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நாவலர் மாநாடு, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையினருடன் இணைந்து எதிர்வரும் டிசெம்பர் 7ஆம் 8 ஆம் திகதிகளில் திருக்கேதீஸ்வரத் திருத்தலத்தில் நடாத்தப்படவிருக்கிறது. இதனையொட்டி இந்த சிறப்புக் கட்டுரையை 'இந்து ஒளி' மறு பிரசுரம் செய்கிறது.



"கருதநின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடையாவே".

திருக்கேதீச்சரம் திருக்கோணமலைக்கு வெகு வெகு காலத்தால் முந்தியது. திருக்கேதீச்சரப் பழைமை சரித்திரத்துக்கோ, அகழ்வாராய்ச்சிகளுக்கோ எட்டாதது. புராணேதிகாசங்களால் ஒருவாறு ஊகிக்கற்பாலது.

ஒரு கற்பத்தில் மேரு மலையின் மூன்று சிகரங்கள் தென் கடலில் வீசப்பட்டன. அவற்றுள் ஒரு சிகரம் இந்திரன் ஆணையால் தேவதிபதியான விசுவகன்மாவால் இலங்காபுரியாக அமைக்கப்பட்டது.

மற்றொரு சிகரம் திருக்கேதீச்சரம். அச்சிகரத்தைக் கொண்டு விசுவகன்மாவின் மூத்த புதல்வனான மகாதுவட்டா, ஒரு சிறு நகரஞ் செய்து அதன் மத்தியில் ஒரு சிவஸ்தலத்தையும் அமைத்தான். நகரம் அவன் பெயரால் மகாதுவட்டாபுரம் எனப்பட்டது. அதுவே மாதோட்டம் என மருவிற்று. மத்தியில் அமைந்த சிவஸ்தலம் சிகரத்தின் பெயராகிய திருக்கேதீச்சரம் என வழங்குகின்றது.

மாதோட்டத்தோடு கூடிய திருக்கேதீச்சரம் வேறு, இலங்கை வேறு. இரண்டும் ஒரு காலத்தில் உண்டானவை.

மூன்றாஞ் சிகரம் கந்த மாதனம். இது இராமர் அணைகட்டிய போது நிலப்பரப்பாக அமைக்கப்பட்டது.

கால அடைவில் கந்த மாதனம் இராமேசுவரத்தோடும், மாதோட்டத்தோடு கூடிய திருக்கேதீச்சரம் இலங்கையோடும் இணைந்துவிட்டன.

மற்றொரு கற்பத்தில் இமாசல கைலாசத்தின் மூன்று சிகரங்கள் தஷிண பூமியில் வீசப்பட்டன. அவற்றுள் ஒன்று திருக்கோணமலை, அது இலங்கையில் வீழ்ந்தது.

மற்றவை திருக்காளத்தியும், திரிசிராப்பள்ளியுமாம். மூன்றுந் தஷிண கைலாசங்கள். திருக்கோணமலையைக் கைலாசம் என்று வழங்குவது போல, மேரு சிகரமாகிய திருக்கேதீச்சரத்தை அவ்வாறு வழங்குவதில்லை.

மகா துவட்டாவுக்கு இருவர் தம்பியர். ஒருவர் மநு, மற்றையவர் மயன். மயன் புதல்வி மந்தோதரி. நித்திய கன்னிகள் வரிசையைச் சேர்ந்த உத்தமி மந்தோதரி இராவணன் மனைவி. இராவணன் மணக்கும் போது அவள் வயிற்றிற் சிவகர்ப்பமாயிருந்து இலங்கையிற் பிறந்தவள் சீதை. இவ் வரலாறு இடைப்பிற வரலாயினும் இங்கே அறியத்தக்கது.*

வெகு காலத்துக்கு முன்னமே திருக்கேதீச்சரத் தலம் மண்மழை பெய்து மணல் மூடிப் பின் காடாய் விட்டது என்று கர்ண பரம்பரைக் கதையுண்டு.

சமய குரவர்களாகிய் நாயன்மார் காலத்திலும் திருக்கேதீச்சரம் காடாகவேயிருக்கலாம், தேவாரப் பாடல்களிற் காணப்படும் திருக்கேதீச்சுவரம் அவர்கள் அகக் காட்சியிற் காட்சியளித்ததாகலாம் எனக் கருதலாம்.

'கருத நின்ற கேதீச்சரங் கைதொழக் கடுவினை யடை யாவே' என்ற ஞானசம்பந்தப் பிள்ளையார் வாக்கில் 'கருத நின்ற கேதீச்சரம் கருத்தகத்தே கண்டு மறைந்த கேதீச்சரம் எனலாம்.

திருக்கேதீச்சரம் சம்பந்தப் பிள்ளையாராலும் சுந்தரமூர்த்தி நாயனாராலும் பாடப்பட்ட பெருமை வாய்ந்தது. திருக்கேதீச்சரம் என்னும் நாமம் திருநாவுக்கரசர் திருநாவால் உச்சரிக்கப்பட்டது. மந்திர சக்தி வாய்ந்தது. இவற்றால் தனக்குத் தானே இணையாய தனிச் சிறப்பு வாய்ந்த புனிதத் தலம் திருக்கேதீச்சரம்.

புனிதம் மிக்க தைவிக சிவத்தலங்கள் வழிபடும் பக்குவர்களருகிய காலத்தில் மறைவதும், பக்குவர் சிலரின் தவ விசேடத்தினால் ஒரு பாகமோ முழுவதுமோ வெளிப்படுவதும் இயற்கை என்று அறிந்தோர் கூறக் கேட்டதுண்டு.

எத்தனையோ நூற்றாண்டுகள் கழித்து, சென்ற நூற்றாண்டு மத்தியில் ஒரே ஒரு ஆறுமுகநாவலர் இருதயத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டது. "யாழ்ப்பாணச் சமய நிலை" என்ற துண்டுப் புத்தகத்தில் இறுதிப் பந்தி.

"சைவ சமயிகளே! தேவாரம் பெற்ற சிவஸ் தலங்களுள் இரண்டு இவ்விலங்கையில் உள்ளன. அவைகளுள் ஒன்றாகிய திருக்கோணமலைக்குச் சம்பந்தமூர்த்தி நாயனார் திருப்பதிகமொன்றிருக்கின்றது. மற்றொன்றாகிய திருக்கேதீச்சரத்துக்கு திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் திருப்பதிகமொன்றுஞ், சுந்தரமூரத்திநாயனார் திருப்பதிகமொன்றும் இருக்கின்றன. இத் திருக்கேதீச்சரம் வட மாகாணத்தின் கண்ணுள்ள மன்னாருக்கு அதி சமீபத்திலிருக்கின்ற மாதோட்டத்திலுள்ளது. இத் திருக்கேதீச்சரம் அழிந்து காடாகக் கிடக்கின்றதே! புதிது புதிதாக இவ் விலங்கையில் எத்தனையோ கோயில்கள் கட்டப்படுகின்றனவே! நீங்கள் இந்த மகா ஸ்தலத்தைச்

சிறிதும் நினையாத தென்னையோ! இவ்விலங்கையிலுள்ள விபூதிதாரிகள் எல்லாருஞ் சிறிது சிறிது உபகரிக்கினும் எத்துணைப் பெருந்தகைப் பொருள் சேர்ந்து விடும்! இதை நீங்கள் எல்லாருஞ் சிந்தித்து இத்திருப்பணியை நிறைவேற்றுவீர்களாயின் அருட் கடலாகிய சிவபெருமான் உங்களுக்கு அநுக்கிரகஞ் செய்வார்"

எனக் கூறிச் சைவர்களை ஊக்கப்படுத்துகின்றார் நாவலர் பெருமான்.

திருக்கேதீச்சர நிலம் அரசாங்கச் சொத்தாய் வடமாகாண அதிபதியின் அதிகாரத்தில் இருந்தது. நாவலரின் இளமைக் காலத்தில் 'டைக்கும்' மத்திய காலத்தில் 'ரசலும்' மாகாண அதிபதிகளாயிருந்து நாவலருக்கு உறுதுணை புரிந்தவர்கள். அவர்கள் காலத்தில் திருக்கேதீச்சர எண்ணம் கருக்கொண்டிருக்குமாயின், நாவலர் பெருமானே விதிப்படி சிவாலயம் எடுத்துப் பூசைக் கிரமம் முதலியன பற்றிப் பத்ததியுஞ் செய்து வைத்திருப்பார்.

ரசலைத் தயாநிதி என்கின்றார் நாவலர். ரசலுக்குப் பின் வந்தவர் துவைனம். திருக்கேதீச்சர நிலத்தை துவைனம் மூலம் நாவலர் பெற விரும்பவில்லை. காரணம் துவைனத்தின் உத்தியோக நடைமுறையில் நாவலருக்கு அருவருப்பு உண்டாயிருக்க வேண்டுமென்று ஊகிக்கலாம்.

பெரியோர்கள் நீதி நெறிக்குப் புறம்பானவர்களிடம் எதையும் பெற விரும்புவதில்லை. இதற்கு எத்தனையோ உதாரணங்கள் உள. நீதிக்குப் புறம்பானவர்களின் உதவி, எடுத்த கருமத்தை மாசு படுத்தும் என்பதைப் பெரியோர்கள் நன்கு அறிவார்கள்.

நாவலரின் அந்நிய காலத்தில் துவைனத்தின் அநீதி மிகப் பிரகாசமானது. மழையின்றி பஞ்ச காலத்திலும், பேதி நோய்க்காலத்திலும், ஏழைகளுக்குக் கிடைக்க வேண்டிய அரசாங்க உதவிகளை துவைனமும், கீழுள்ளவர்களும் அப்படியே உறிஞ்சிவிட்டார்கள்.

சமயம்! சமயம்!


இது நல்ல சமயம்!

வெகு சனத் துரோகம்!

என்ற துண்டுப் புத்தகங்கள் துவைனத்தின் மீது நாவலர் கொடுத்த வச்சிர குலிசங்கள்.

'யாழ்ப்பாணத்துக் கச்சேரி அநீதி, பொய், கோள் முதலிய புத்தகங்கள் படிக்கின்ற கலீசு (College) அதற்குத் தலைவர் (Principal) துவைனந் துரை, உபாத்தியாயர்கள்' பாவந் தோன்றிய நாளையிற் றோன்றிய பாதகன்' ஆகிய முதலியார் முதலிய சில உத்தியோகத்தர்கள், அவைகள் படிக்கிற தாலுகாப் பள்ளிக் கூடங்கள் (Taluk Schools) சில தலைமைக்காரர்களுடைய தானங்கள்.

ஏழைகளுக் கிரங்கி இவ்வாறெழுதிய நாவலர் பெருமானின் தைரியம் பற்றி என்ன நினைக்கலாம். மேற் காட்டிய மூன்று கட்டுரைகளும் நாவலர் பிரபந்தத்தில் உள்ளவை. யாவரும் படித்து நாவலர் யார் எத்தகையினர்! என்பதை ஊன்றி உணரக் கடவர்கள்.



நாவலர் குடியேற்ற நாட்டு மந்திரி பரியந்தம், துவைனத்தின் ஊழல்களை எடுத்துக்காட்டி வாதித்தார். துவைனம் தம்மீது ஏற்றும் குற்றங்களைப் பரிகரியாத வழி உத்தியோக இழப்பு ஒன்றே உடற்றண்டமும் பெறும் நிலை நேர்ந்தது. துவைனம் செய்வதறியாது திகைத்தார்.

இந்நிலையில் நாவலர் பெருமானுக்கு அழைப்பு வந்துவிட்டது. நாவலர் மறைந்தார் என்ற வார்த்தை கேட்ட அக்கணமே, துவைனத்திற்கு விழிப்புணர்ச்சி உண்டாகியது. கச்சேரிக்கு விடுதலை அளித்து, கச்சேரி உத்தியோகத்தர் அனைவரையும் நாவலர் பெருமானின் இறுதிச் சடங்கில் பங்குபற்றச் செய்தார். அடுத்த சில ஆண்டுகளுக்குள் திருக்கேதீச்சர நிலத்தை அந்நிய மதத்தார் கைப்படாமல் வெகு திறமையாகச் சைவர்களுக்கே ஆக்கிவைத்தார் துவைனம். நாவலர் பெருமான் துவைனத்தைக் கேளாமலே காரியம் நிறைவேறியது.

*** இங்கே காட்டப்பட்ட வரலாறுகளுக்கு ஆதாரம், ஈழ மண்டல சதகத்திலுள்ள 'சுருதி பயில் அறிஞன் துவட்டா' என்று தொடங்குந் திருக்கேதீச்சரப் பாடலும், 'தென் கயிலையாகியொளிர் திரிகோணமலை' என்ற பாடலும் அவற்றின் உரையுமாம்.**


(நன்றி : **திருக்கேதீச்சரம் திருக்குடத்திருஞ்சன மலர்**)

(1976)

## அழகன் முருகன்

**முருகன் தமிழர்களுக்குரிய கடவுள். தமிழர்கள் முருகனை முருகு என்று அழைப்பார்கள். முருகு என்ற சொல்லுக்கு இளமை, அழகு, மணம், இயற்கை, கடவுள் தன்மை, தேன் முதலிய பொருட்கள் உண்டு. முருகன் எனும் சொல் இறைத்தன்மையும், என்றும் குன்றாத அழகும் இளமையையும் வாய்க்கப்பெற்றவர் எனப் பொருள்படும்.**





# விபுலானந்த அடிகளாரின் சமயச் சிந்தனைகள் – சில துளிகள்

**கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்**
தலைவர், மாமன்ற சமய விவகாரங்கள் குழு
மாமன்ற அறங்காவலர் சபை உறுப்பினர்

இலங்கையின் கிழக்கே அமைந்துள்ள மட்டக்களப்புக்குத் தெற்கே காரைதீவு என்னும் ஊரில் பிறந்த விபுலானந்தர் வாழ்ந்த காலப்பகுதி இந்நாட்டிலும் இந்தியாவிலும் ஆங்கிலேயப் பேரரசின் ஏகாதிபத்திய ஆட்சி நிலவிய காலம் ஆகும். அப்போது வாழ்ந்த மக்கள் தங்கள் சுதந்திரத்தை இழந்திருந்த நிலையில் தமது மொழி, சமயம், கலை கலாசாரம், கல்வி என்பனவற்றையும் இழந்து அந்நிய நாகரிகத்தின் பிடிக்குள் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

இலங்கையில் காணப்பட்ட இந்நிலைமைகள் விபுலானந்தரின் மனத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தின. தேசிய மொழி, சமயம், கலை, கலாசாரம், கல்வி, அவற்றுடனான தேசிய உணர்வு என்பனவற்றின் மறுமலர்ச்சிக்காக பணியாற்றப் புறப்பட்டார்.

இராமகிருஷ்ண மடத்தை சார்ந்து துறவறம் மேற் கொண்ட விபுலானந்த அடிகளார் மக்களைப் புறக்கணிக்கவில்லை. அவரது பன்முகப்படுத்தப்பட்ட பணிகள் அனைத்தும் மக்கள் நலனையும் தமிழ் மொழி, சமயம், கலை, கலாசாரம், கல்வி, பண்பாட்டுணர்வுகளை மீட்பதனையும் இலக்காகக் கொண்டிருந்தன.

சமயம் வேறு சமூகம் வேறு என்று கொள்ளாது, சமய நெறி நின்று சமுதாயத் தொண்டாற்றியவர். தான் சார்ந்த இந்து சமயத்தில் அப்போது நிலவிய சீர்கேடுகளையும் மூட நம்பிக்கைகளையும் பணிகளிலும் ஈடுபட்டதன் மூலம் அவர் இந்துசமயச் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார்.

மனிதரின் வாழ்வினை நன்னெறிப்படுத்துதல், செம்மைப்படுத்தல், உலகில் வாழும் முறையை உணர்த்தி வாழ்வாங்கு வாழச் செய்து தெய்வ நிலைக்கு உயர்த்துதல் என்பன சமயத்தின் நோக்கங்களாகும். சமயம் அந்நோக்கங் களின் நின்றும் விலகி ஊழல்களுக்கும் பொதுமக்கள் பின்பற்ற முடியாத தேவையற்ற இறுக்கங்களுக்கும் நடைமுறை களுக்கும் இடங்கொடுக்கும் போது சமயச்சீர்திருத்தம் இடம் பெற வேண்டியது அச்சமயத்தின் உண்மை நிலையைநிலைநாட்டுவதன் பொருட்டு இன்றியமையாததாகும். விபுலானந்த அடிகளாரின் சமய சிந்தனைகள் இந்த அடிச்சுவட்டிலேயே அமைந்திருந்தன. சமயம், உலகியல் இரண்டும் இரு துருவங்கள் போல ஒன்றையொன்று இணையக்கூடியன. - இணையவேண்டியன. அப்போதுதான் மனித வாழ்வு, சமூக வாழ்வு என்பன ஊழல்கள் வன்முறைகள் அடக்குமுறைகள் அற்றனவாயும், கருணை, அன்பு, மானுட நேயம், அமைதி, சாந்தம், நீதி, நேர்மை நிறைந்தனவாயும் அமையும் என்பதில் விபுலானந்த அடிகளார் உறுதியாக இருந்தார். மனிதரிடையே ஏற்றத்தாழ்வுகள் வேறுபாடுகள் இருப்பதை உண்மைச்சமயம் ஏற்றுக் கொள்வதில்லை. சமத்துவம் சகோதரத்துவம், ஒருமைப்பாடு மக்களிடையே நிலவ சமயம் உடன்பாடாக உள்ளமையை விபுலானந்த அடிகளார் தமது எழுத்துக்கள், பேச்சுக்கள், செயல்கள் வாயிலாக மக்களுக்கு உணர்த்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

விபுலானந்த அடிகளார் ஒரு விஞ்ஞானப் பட்டதாரி. அதே வேளை அவர் ஓர் அப்பழுக்கற்ற ஆன்மீகவாதியும் ஆவார். மெய்ஞ்ஞானமும் விஞ்ஞானமும் அவரில் சங்கமித்தது. விஞ்ஞானத்துக்கும் மெஞ்ஞானத்துக்கும் இடையிலான நெருங்கிய தொடர்பினை விளக்கிப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

காலத்தின் தேவையைச் சமயம் புறக்கணித்தல் ஆகாது. விஞ்ஞான முடிவுகளைச் சமயம் புறந்தள்ளாமலும் சமய மெய்ஞ்ஞான உண்மைகளை விஞ்ஞானம் அலட்சியம் செய்யாமலும் இரண்டும் இணைந்திருத்தல் காலத்தின் தேவையாகும்.

விஞ்ஞானம் ஆன்மிகத்தை அலட்சியம் செய்யுமே யானால் மனிதர்கள் ஒழுக்கநெறியினின்றும் விலகித் தான் தோன்றித்தனமாக செயற்படுவர். அத்தகைய சூழ்நிலையில் ஆன்மீகத்தை ஓரங்கட்டும் மனிதரின் பிடியில் அகப்பட்டுக் கொண்ட விஞ்ஞானம் மனித ஆக்கத்திற்கன்றி மனித அழிவிற்கே துணை போக நேரிடும்

சமயம் ஒரு தத்துவம், சமய நெறி என்பவற்றுடன் அமையாது, அது ஒரு வாழ்வியல் நெறி என்பதில் விபுலானந்தர் அசைக்கமுடியாத உறுதியுடையவராக விளங்கினார்.

> " பழமையும் புதுமையும், துவைதமும் அத்வைதமும்
> பௌதிக விஞ்ஞானமும் மெஞ்ஞானக் காட்சியும்
> மேற்றிசையறிவும் கீழ்த்திசை சமயமும் மனமொடுங்கிய
> தியான நிலையும் மன்பதைக்குத் தொண்டு புரிதலும்
> சமரசப்பட வேண்டிய காலமிது"

என விபுலானந்த அடிகளாரின் சமயச் சிந்தனையின் பரிணாமத்தை அறிந்து கொள்ளலாம்.

விஞ்ஞான தொழினுட்ப பொருளாதார அதிதீவிர வளர்ச்சியால் மாத்திரம் உலகில் மக்கள் அமைதியாகவும், பெருவளங்கள் பெருநலன்களைப் பெற்று சுபீட்சமாகவும் வாழமுடியாது என விபுலானந்த அடிகளார் சென்ற

நூற்றாண்டின் முன்னரைக் காலப்பகுதியில் கூறியுள்ளமை இன்று எவ்வளவு உண்மையாக உள்ளது என்பதை நாம் தெளிவாக உணர்கின்றோம். ஆன்மிகமும் உலகியலும் சமரசப்படும் போது மனித வாழ்வு சிறக்கும். ஆன்மீக உணர்வை புறக்கணித்து முன்னேறவோ அபிவிருத்தி யடையவோ முயலும் சமுதாயமோ நாடோ இலக்கினை எட்டினாலும் இறுதியில் மனித குல நாசத்திற்கு வழி வகுக்கும் என்பது விபுலானந்த அடிகளாரின் கருத்து. "உள்ளக்கமலமடி உத்தமனார் வேண்டுவது" என்னும் அடிகளாரின் கூற்றிலிருந்து அகத்துாய்மையின் இன்றியமையாமை உணர்த்தப்படுகின்றது. மனத்துக்கண் மாசிலனாதல் அறம் என்பது வள்ளுவர் வாக்கு. மனத் தூய்மை ஆன்மீக வலுவைத் தருகின்றது.

விபுலானந்த அடிகளாரின் சமயச்சிந்தனைகள் மனிதனை இவ்வுலகில் நீதிவழுவா நெறிமுறையில் வாழ்வாங்கு வாழவும் பிறர்க்குரியாளனாக தொண்டுகள் புரியவும், அதற்குரிய மனம், மொழி, செயல் பக்குவத்தை பெறவும் இறை நம்பிக்கையும் சமய நெறிமுறைகளைப் பின்பற்றலும் ஆன்மிகசக்தியும் அவசியம் என்பதை வலியுறுத்துவதாக அமைகின்றன.

# தீபாவளி–சில சிறப்புத் தகவல்கள்

*ஐப்பசி மாதத்து தேய்பிறை (கிருஷ்ண பட்சம்) சதுர்த்தசியில் அமைவது நரக சதுர்த்தசி நாளாகும். இதுவே தீபாவளி பண்டிகை என வழங்கப்படுகிறது. தீபம் + ஆவளி = தீபங்களின், வரிசை என்பது இதற்குப் பொருளாகும். வாழ்க்கையில் இருளை நீக்கி ஒளியைக் கொடுக்கும் பண்டிகையாக தீபாவளி கொண்டாடப்படுகிறது.*

*இந்தியாவின் தமிழகத்தில் கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திர நாளில்தான் தீபங்களை ஏற்றிவைத்து கார்த்திகைத் தீபத் திருநாளைக் கொண்டாடுவர். ஆனால் வடநாட்டில் தீபாவளி தினத்தன்று தான் வீடுகளில் வரிசையாகத் தீபங்களை ஏற்றிவைத்து பட்டாசுகளைக் கொளுத்தியும், புத்தாடை மற்றும் புதிய ஆபரணங்களை அணிந்தும் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவர்.*

**தீபாவளித் தினத்தன்று எண்ணெய் தேய்த்துக் குளித்தால் பீடைகள் விலகும், புண்ணியம் கிடைக்கும். தீபாவளி நாளில் எண்ணெயில்திருமகளும், வெந்நீரில் கங்கையும் ஒன்று சேருவதால் அன்றைய தினம் எண்ணெய் குளியல் செய்பவர்க்கு கங்கையில் மூழ்கிக் குளித்த புனிதப் பயன் கிட்டும் என்பது ஐதீகம்.**

**புதிதாக திருமணம் செய்து கொண்டவர்களுக்கு, மணநாளின் பின்னர் வரும் தீபாவளி தலைத் தீபாவளி என சொல்லப்படுகிறது.**
**புதுமணத் தம்பதிகளை கோலமிடப்பட்ட இடத்தில் ஆசனமொன்றில் இருக்கவைத்து, குங்கமமிட்டு ஆரத்தி எடுப்பர். பின்னர் நலங்கு இட்டு எண்ணெய் தேய்ப்பர். தொடர்ந்து அவர்கள் ஸ்நானம் செய்து இறைவழிபாட்டில் ஈடுபடுவர். அதன்பின்னர் பெரியவர்களின் கையால் மஞ்சள் தடவிய புதுத்துணிகளை வாங்கி உடுத்துவர். அன்றைய தினம் மூத்தோர்களை வணங்கி, அவர்களது ஆசியும், வாழ்த்தும் பெற்றுக் கொள்வதும் வழமையான சம்பிரதாயமாகும்.**

தீபாவளி பண்டிகை தோற்றம் பெற்றதற்கு நரகாசுரன் வரலாறு மூலகாரணமாக இருந்தது என்பதே பலராலும் அறியப்பட்ட தகவல். தேவர்களையும் முனிவர்களையும் துன்புறுத்தி வந்த நரகாசுரனுடன் கிருஷ்ணபகவான் போர்புரிந்து கொன்றார் என்பது வரலாறு. அவன் இறக்குந்தறுவாயில் "கொடியவனாகிய நான் இறந்து போகின்ற இந்த நாளை யாவரும் மங்களகரமாகக் கொண்டாடி சந்தோசமடைய வேண்டும்"என கிருஷ்ணபகவானிடம் வேண்டிக் கொண்டானாம். பகவானும் அவனுக்கு அவ்வாறே வரம்கொடுத்து பரமபதம் சேர்த்தருளினார். என்பது புராண வரலாறு. அது முதலாகவே தீபாவளி திருநாள் குதூகலமாகக் கொண்டாடப்பட்டு வருவது வழக்கமாகிவிட்டது.

**தீபாவளி நாள் மாவலிச் சக்கரவர்த்தி முடிசூடிய தினம் என்றும், விக்கிமாதித்த மன்னன் முடிசூடியதினம் என்றும் ஒரு சாரார் இதனைகொண்டாடுவர். இராமபிரான் இராவணனை தோற்கடித்துவிட்டு அயோத்தி வந்து சேர்ந்தபோது மக்கள் எல்லோரும் நகரத்தை அலங்கரித்து இரவில் தீபம் ஏற்றி வைத்து வெற்றி விழாவைக் கொண்டாடிய தினமே தீபாவளி திருநாள் என்றும் சொல்லப்படுகிறது.**

# அத்துவிதப் பொருள் காப்பாம்



அத்துவிதப் பொருள் காப்பாம் – எனக்
கடியார் களென்றென்றுங் காப்பாம்
சித்தருஞ் தேவரும் காப்பாம் – என்றன்
சித்தத் திலங்குந் திருவருள் காப்பாம்

அட்ட வசுக்களுங் காப்பாம் – எனக்
கானந்த மான பராபரன் காப்பாம்
எட்டுத் திசைகளுங் காப்பாம் – எனக்
கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம்

பிராண னபானனுங் காப்பாம் – என்னைப்
பிரியா திருக்கும் பிரணவம் காப்பாம்
அராவதணி வேணியன் காப்பாம் எனக்
கருணை யளிக்குங் குருபரன் காப்பாம்

பஞ்சப் புலன்களுங் காப்பாம் – என்னைப்
பரவு மடியவ ரனுதினங் காப்பாம்
குஞ்சர முகத்தவன் காப்பாம் – நல்ல
குழந்தை வடிவேலன் என்றென்றுங் காப்பாம்

சந்திர சூரியர் காப்பாம் – எங்குந்
தங்கு முயிர்க ளனைத்துமென் காப்பாம்
மந்திரம் தந்திரங் காப்பாம் – நான்கு
மறைகள் சிவாகமம் மாநிலங் காப்பாம்.

– சிவயோக சுவாமிகள்

## சுவாமிகளின் நற்சிந்தனை

நமது உயிருக்குயிராய் இருப்பவர் கடவுளே, ஆகையால் நாம் அவருடைய உடமை, அவருடைய அடிமை. நம்முடைய அசைவெல்லாம் அவருடைய அசைவே. நாம் அவரை ஒருபோதும் மறந்திருக்க முடியாது.

நமக்கு ஒரு குறைவுமில்லை, நாம் என்றுமுள்ளோம், எங்கும் இருக்கின்றோம், எல்லாம் அறிவோம். இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்து கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வ தத்துவத்தை அடைவோமாக!

## சிவயோக சுவாமிகள் ஐம்பதாவது குருபூசை வைபவம்

சிவயோக சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசை வைபவம் விஜய வருடம் பங்குனி மாதம் 27 ஆம் நாள் (10.04.2014) நடைபெறவிருக்கிறது. அன்றைய தினம் யாழ்ப்பாணம் நல்லூரில் நற்சிந்தனைப் பிரார்த்தனை நிகழ்ச்சியொன்று நடத்தப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுவாமிகளின் குருபூசை நிகழ்வுகளை நாடளாவிய ரீதியில் மட்டுமல்ல பாரெல்லாம் நடத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்யும்படி ஏனைய சங்கங்களிடம் மாமன்றம் வேண்டுகோள் விடுகின்றது. யோகர் சுவாமிகள் அறநிதியம் போன்ற ஈடுபாடுள்ள சங்கங்களும் மாமன்றத்துடன் இணைந்து குருபூசை நிகழ்வுக்கான ஒத்துழைப்பை வழங்குகின்றன.

சுவாமிகளின் ஐம்பதாவது குருபூசையையொட்டி நாடளாவிய ரீதியில் மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மாமன்றம் ஏற்கனவே மேற்கொண்டுள்ளது.

குருபூசை நிகழ்வின் போது வெளியிடப்படவிருக்கும் தமிழ் – ஆங்கில கட்டுரைகள் அடங்கிய சிறப்பு மலருக்குரிய ஆக்கங்களை, ஏனைய சங்கங்களும் அனுப்பிவைத்து உதவலாம். இதுவிடயமாக மாமன்ற தலைமையகத்துடன் தொடர்புகொண்டு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

## முருக வழிபாட்டுச்சிறப்பு

முருகனை வழிபட்டால் பாவங்கள் எல்லாம் பறந்து போகும், ஆபத்துக்கள் யாவும் அகன்று போகும், யமபயம் அகலும், நலியச்செய்யும் நோய்கள் நீங்கும், வேண்டிய யாவும் வேண்டியபடி பெறலாம், கன்னிப் பெண்களுக்கு கடிமணம் நிகழும், நன்மக்கட்பேறு நலமுடன் பெறலாம், பூவுலகினில் புகழுடன் வாழலாம், நாளும் கோளும் நலமே செய்யும், என அருணகிரிநாதர் தனது திருப்புகழ், கந்தரலங்காரம், கந்தரனுபூதி முதலான நூல்களில் குறிப்பிட்டுள்ளார்.



## வேலும் மயிலும் துணை

வேலும் மயிலும் துணை என்ற நம்பிக்கை கொண்டவர்கள் முருக பக்தர்கள். வேல் இறைவனது அறிவையும் மயில் என்பது அந்த அறிவிற்கு உட்பட்ட உயிரின் அறிவையும் குறிக்கும். பண்டைய போர்வீரர்கள் போரிடும்போது "வீர வேல், வெற்றி வேல்" என்று வீரமுழக்கமிட்டு போர் புரிந்தனர். இன்றும் "முருகா முருகா" என்றால் துன்பம் போய்விடும் தொல்வினை போய்விடும் என்ற நம்பிக்கை கொண்டு வாழ்பவர்கள் தமிழர்கள். "வெற்றி வேல் முருகனுக்கு அரோகரா" என்ற முழக்கத்தை முருகன் திருக்கோயில்களில் கேட்க முடியும்.




அகில இலங்கை இந்து மாமன்றம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் நினைவு தினத்தையொட்டி 2012 அக்டோபர் மாதத்தில் நடத்திய மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டியில் மத்திய பிரிவில் முதலாவது பரிசு பெற்ற கட்டுரை இது.

# நாவலர் பெருமான் காட்டிய வழியில் வாழ்வோம்

**செல்வி கே. நிதர்ஷினி**
*சைவ மங்கையர் வித்தியாலயம், வெள்ளவத்தை, கொழும்பு.*

நமது ஈழநாடு நல்லறிஞர் பலரைத் தந்த பெருமைக்குரியது. அத்தகையவர்களில் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் ஒருவராவார். உலகம் போற்றும் தமிழ்ப் பேரறிஞர் நாவலர் பெருமான் யாழ்ப்பாணத்தில் நல்லூரைச் சேர்ந்த கந்தப்பர் சிவகாமிப்பிள்ளை தம்பதிகளின் ஐந்தாவது மகனாக 1822.12.18இல் அவதரித்தார். இவரது பிள்ளைத் திருநாமம் ஆறுமுகம் என்பதாகும். ஆறுமுகநாவலர் பிறந்த காலத்தில் நிலவிய அந்நியர் ஆட்சி காரணமாக நாட்டின் வடபகுதியில் தமிழ் மொழியும், சைவசமயமும் அடக்கியொடுக்கப்பட்டிருந்தது. 1505இல் ஏற்பட்ட போர்த்துக்கேயர் படையெடுப்பு சுதேசிகளிடம் தம் மொழியையும், பண்பாட்டினையும், சமயத்தையும் திணித்தது. அதன் பின் வந்த ஒல்லாந்தர் ஆரம்பத்தில் செய்த அடக்கு முறையைத் தொடரவில்லை. எனினும் தமிழ் மொழியும், சைவ சமயமும் சீர்குலையைக் காரணமாயினர். எனினும் இவர்களது ஆட்சியின் பிற்காலத்தில் ஆலயங்கள் புனரமைக்கப்பட்டதோடு புதிய ஆலயங்களும் எழலாயின.



ஒல்லாந்தரின் பின் வந்த ஆங்கிலேயர் மிஷனரிமார்கள் மூலம் கிறிஸ்தவத்தையும் ஆங்கில மொழியையும் சுதேசிகளிடையே பரப்பலாயினர். இந்நிலையில்தான் ஆறுமுகநாவலர் தோற்றம் பெற்றார். தமிழ் மக்கள் தங்கள் தனித்துவத்தையும், பாரம்பரியத்தையும் நிலைநாட்ட முனைந்து நின்ற வேளையில் நாவலர் பெருமானின் பணி மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றது. சமய ஆசாரங்களையும், ஆகமங்களையும் பேணுவதில் இறுக்கமான நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார். அந்நிய ஆதிக்கத்தால் தமிழர்களது கலாசாரங்கள் சமய நிலைகள் நிலைகுலைந்திருந்த வேளையில் சமயப்பணியோடு மட்டும் நின்று விடாது, தமிழ்ப் பணியும் ஆற்றியமை அவரது ஆழ்ந்த தூரநோக்கத்தையும், சிந்தனைச் சிறப்பையும், தமிழ் ஆற்றலறிவையும் உலகுக்கு எடுத்துக்காட்டி நிற்கின்றது. நாமும் நாவலர் பெருமானின் வழியைப் பின்பற்றி தமிழையும், சைவத்தையும் வளர்ப்போம் என உறுதி கூறுவோம். இலங்கை இந்தியாவைப் பொறுத்தமட்டில் தேசிய உணர்வுகள் அலைமோதிய அக்காலத்தில் முன்னோர்களால் வளர்த்தெடுக்கப்பட்ட தமிழ்மொழியை முன்போல் வளர்த்தெடுக்க வேண்டுமென முன்னின்று உழைத்தார்.

ஆறுமுக நாவலர் தமது ஆரம்பக் கல்வியை இருபாலை சேனாதிராசா முதலியாரிடமும் சரவணமுத்துப் புலவரிடமும் கற்றார். இவர் தம் சிறுவயதிலேயே இலக்கண, இலக்கியங்களை முறைப்படி கற்று புலமை எய்தினார். ஆறுமுகநாவலர் தமது ஆங்கிலக் கல்வியை யாழ் மத்திய கல்லூரியில் கற்றார். இவர் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் பெற்றுக் கொண்ட புலமையினால் சைவத்தை மட்டுமன்றி பிற சமயங்களையும் அறிந்திருந்தார். நாவலர் பெருமான் 1841இல் யாழ் மத்திய கல்லூரியில் ஆசிரியராகச் சேர்ந்தார். பின் சைவத்தையும் அதன் வளர்ச்சிக் கருவியாகிய கல்வியையும் வளர்க்க வேண்டும் என்னும் பேராசையால், 1848இல் ஆசிரியத் தொழிலைத் துறந்து நாட்டுப் பணியில் இறங்கினார். இவர் ஆற்றிய பணிகளை சமயப்பணி, சமூகப்பணி, கல்விப்பணி என்ற அடிப்படையில் நோக்கலாம்.

இளமையிலே புலமை நலஞ் சிறக்கப்பெற்ற ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரை யாழ்ப்பாணத்து மக்களெல்லாம் தம் சமய குரவர் எனப் போற்றி வந்தனர். “தமிழ், சமயம் ஆகிய இரண்டும் இரு கண்கள்; அவை இரண்டும் ஒளி குன்றாமல் இறுதிவரை காத்து பயன் கொள்வதே என்கடன்; அவை வாழப் பணிபுரிதலே என் வாழ்வின் குறிக்கோள்” என்று வாழ்ந்து பணி செய்தவர் ஆறுமுகநாவலர். இவரைப் போன்ற இவரின் குறிக்கோளை பின்பற்றி வாழ வேண்டியது எம் கடமை ஆகும். “போற்ற வேண்டியவை உண்மை, உழைப்பு, உயர்வு. பின்பற்ற வேண்டியவை கனிவு, பணிவு, துணிவு. பேண வேண்டியவை கடமை, கண்ணியம், கட்டுப்பாடு” என்ற அறிஞர் அண்ணாவின் வாக்குக்கு ஏற்ப வாழ்ந்து புகழ்பெற்ற நாவலரை நாமும் போற்றி வாழ வேண்டும்.

அழிந்து கொண்டு குற்றுயிராய் இருந்த சைவசமயத்தை வளர்க்க நாவலர் தம் சொல்லாற்றலைக் கையாண்டார். பிரசங்கம் மூலம் சைவத்தை இவ்வுலகில் நிலைநிறுத்த

முயன்றார். 1847இல் வண்ணார்பண்ணை சிவன் கோயிலில் நாவலர் தம் முதல் பிரசங்கத்தை நிகழ்த்தினார். நாவலர் அவர்களின் பிரசங்கங்கள் பொதுவாக கடவுள் வாழ்த்து, சிவபக்தி, வேதாகமங்கள், திருவிழா, யாக்கை நிலையாமை, சிவதீட்சை, மகளிர் ஒழுக்கம், தருமம், செய்நன்றியறிதல், கல்வி கற்பித்தல், பிரபஞ்சம், மாயை, பேதமை, கொல்லாமை போன்ற பொருள்களில் அமைந்திருந்தன. பிரசங்கத்தின் சிறப்புக் கருதி திருவாவடுதுறை ஆதீனம் இவருக்கு "நாவலர்" என்னும் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது. "பணிவு உடையவராகவும் இனிய சொற்களைப் பேசுபவராகவும் இருத்தலே ஒருவருக்கு வெற்றியைத்தரும்அணிகலன்களாகும்" என்பதற்கிணங்க வாழ்ந்து காட்டியவர் ஆறுமுகநாவலர்.

கோயில்களில் புராணபடனஞ் செய்யும் முறை ஈழத்துக்கே உரிய தனிச்சிறப்புக்குரியதாகும். இந்த முறை ஆறுமுகநாவலரால் சமயப் பிரசார ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டது. புராண படனம் மூலம் கல்வியையும் சமய பக்தியையும் வித்துவத்தையும் ஆறுமுகநாவலர் மக்களிடத்தில் ஏற்படுத்தினார். ஆறுமுகநாவலர் தம் சமயத்துக்கு எதிராக செயற்பட்டவர்கள் மீது கண்டனங்களை மேற்கொண்டார். இவர் இக் கண்டனங்களை கிறிஸ்தவ சமயத்தின் மேல் தொடுத்த கண்டனங்கள், தேசிய சமய வாதிகள் மேல் தொடுத்த கண்டனங்கள் என இரு நிலைகளில் மேற் கொண்டார்.

நாவலர் பெருமான் சைவநெறி தழைத்தோங்கவும், தமிழ்மொழி செழித்து வளரவும் பெரும் பணியாற்றியவராவார். திருக்கேதீஸ்வரம், கீரிமலை சிவன் கோயில் என்பவற்றின் தொன்மைச் சிறப்புக்களை மக்களுக்கு எடுத்துக் கூறி அவற்றைப் புனரமைத்து நித்திய, நைமித்திய பூசைகளுக்கு வழிவகுக்குமாறு சைவ மக்களுக்கு விஞ்ஞாபனம் விடுத்தார். இதன் காரணமாக ஆலயங்கள் மீண்டும் அமையப்பெற்றன. இறைவனின் இயல்புகளும், இறைநெறியின் அறப்பண்புகளும் கற்பிக்கப்படுகின்றன. எமது கலைத்திட்டத்திலே சமயக் கல்விக்கு இன்று முக்கியத்துவம் தரப்படுகின்றது. இதனை ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே உணர்ந்து எங்கள் நாவலர் பெருமான் நடைமுறைப்படுத்தினர். இலவசக் கல்வி, இலவச நூல்கள், தாய்மொழிக் கல்வி என்று நாடு பெருமைப்படும் கல்விச் சாதனைகளை அன்றே அவர் நிலைநாட்டினார்.

சைவசமயம் நலிவுற்றிருந்த வேளையில் நாவலர் பெருமான் தனது சொல்லாலும் எழுத்தாலும் மக்கள் அகக் கண்களைத் திறந்து அவல நிலையை அவர்களுக்கு உணர்த்தியதோடு சைவமும், தமிழும் மீண்டும் புத்துயிர் பெறுவதற்காகத் தம்மாலியன்ற அத்தனை பணிகளையும் செய்தார். அதில் முக்கியமானது இவர் இயற்றிய பிரபந்தங்களாகும். உதாரணமாக புலோலி ஸ்ரீ பசுபதீஸ்வரப் பெருமான் திருவூஞ்சல், கதிகாமக் கந்தன் மீது பாடிய கீர்த்தனைகளும் தனிப்பாடல்களும் என்பவற்றைக் குறிப்பிடலாம். "நாம் சம்பாதிக்கப் பிறந்தவர்கள் அல்லர், சாதனை செய்யப் பிறந்தவர்கள் என்ற எண்ணம் ஒவ்வொருவருக்கும் ஏற்பட்டாக வேண்டும்" என்ற விவேகானந்தரின் வாக்கை நிரூபித்துக்காட்டியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர். வரலாற்றுக்கு முற்பட்ட சமயமாகவும், ஈழம் வாழ் மக்களில் பெரும்பாலானோரது உள்ளத்துள் ஒளி விளக்காய் சுடர் விட்டிலங்குவதுமான சைவ சமயத்தை அந்நியரது செல்வாக்கு வலுவுற்றிருந்த காலத்திலும் கூட வளர்த்து சாதித்தவர் எமது நாவலர் பெருமான்.

சைவம் காத்த நாவலர், சமயப் பணிகளில் ஈடுபட்டதுடன் மட்டும் நின்று விடாது சமூகப் பணிகளிலும் ஈடுபட்டார். அத்துடன் அரசியலிலும் ஈடுபட்டு மக்களுக்கு நன்மை புரிந்திருக்கிறார். இவரின் சமூகப் பணிக்கு எடுத்துக்காட்டாக கஞ்சித் தொட்டி தருமம், மட்டக்களப்பு - யாழ்ப்பாண வேளாண்மைச் சங்கம் என்பன குறிப்பிடத்தக்கவை. கஞ்சித் தொட்டி தருமமானது 1876,1877இல் இலங்கையின் வடபகுதி உட்பட பல இடங்களிலும் ஏற்பட்ட கொடிய பஞ்சத்தினால் மக்களுக்கு உண்டான பசி, பட்டினியைப் போக்குவதற்காக ஆறுமுகநாவலரால் மேற்கொள்ளப்பட்ட ஒரு பணியாகும். கல்வியழகும், தெய்வநெறியும் பொலிந்து விளங்கும் ஒரு சமூகத்தைக் காணத் துடித்தார். அதற்காக அவர் கடுமையாக உழைத்தார். அவரது வாழ்வின் இலட்சியமே இதுவாக இருந்தது.

நாவலர் பெருமானின் கல்விப் பணியும், தமிழ்ப் பணியும் உன்னதமானவை. சைவ சமயத்தையும், தமிழ் கல்வியையும் வளர்ப்பதற்கு ஆறுமுகநாவலர் ஆற்றிய பணி மிகப் பெரியது. இவர் 1848இல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். அவர் நிறுவிய முதலாவது பாடசாலை இதுவாகும். இவர் யாழ்ப்பாணத்தில் கோப்பாய் என்னும் இடத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலையை நிறுவினார். தமிழ்நாடு சிதம்பரத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலை எனும் பெயரில் பாடசாலையை நிறுவி அங்கு போதிப்பதற்கு சைவ சமய நூல்களை பிரசுரித்தார். நாவலர் எழுதிய கட்டுரைகளுக்கும் நூல்களுக்கும் உதாரணமாக நாவலர் பாலபாடம் முதலாம், இரண்டாம், மூன்றாம், நான்காம், புத்தகங்கள், சைவவினாவிடை முதலாம், இரண்டாம் புத்தகங்கள், இலக்கணச் சுருக்கம், இலங்கை பூமி சாஸ்திரம், சிவாலய தரிசன விதி, சிதம்பரமான்மியம், சைவசமயக் கட்டுரை, திருத்தொண்டர் புராணம் என்று வழங்குகின்ற பெரியபுராணம், குட்டிக்கதைகள் என்பவற்றைக் குறிப்பிடலாம். ஆத்திசூடி, கொன்றை வேந்தன், நன்னெறி, நல்வழி போன்ற நூல்களுக்கு உரையும் இன்னும் பல நூல்களுக்கு புத்துரையும் வெளியிட்டார். தமிழர்க்குத் தமிழ் மொழியில் சுவடிச்சாலை சர்வகலாசாலைகளைப்போல் எங்கும் வேண்டும், தமிழில்லாப் பிறமொழி நூல் அனைத்தும் நல்ல தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும் என்று கூறியவர் பாரதிதாசன். இதற்கமைய நாவலர் பல நூல்களை மொழிபெயர்த்து 1849இல் சென்னை மற்றும் நல்லூரில் வித்தியாநுபாலன இயந்திரசாலை

என்னும் அச்சியந்திரசாலையை நிறுவி அப்புத்தகங்களை அச்சிட்டார். ஏடுகளில் எழுதப்பட்டிருந்த பல பழந்தமிழ் நூல்களைப் பரிசோதித்து அச்சில் பதித்தவரும், அத்துறையில் ஏனையோருக்கு வழிகாட்டியாக விளங்கியவரும் நாவலர் பெருமானே ஆவார்.

தமிழ்ப் பணியைச் செய்வதற்காக தமது வாழ்நாள் முழுவதும் பிரம்மசாரியாகவே வாழ்ந்தார். துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டு சைவத்தின் உண்மையை விளக்கி சைவ மக்களிடையே புகுந்துள்ள மாசு நீங்கப் பிற சமயத்தவரின் தீவிர பிரசாரத்தைத்தடுக்க முற்பட்டார். இதற்கு சைவ சமயத்தையும் அதற்குக் கருவியாகிய கல்வியையும் வளர்த்தல் வேண்டும் என்ற பேராசை தம்மிடம் குடிகொண்டிருந்தமையாகும் என ஒரு சந்தர்ப்பத்திலே தம் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளார் நாவலர். நெற்றியிலே நீறு பூசவும், வாழையிலையிலே அமுதுண்ணவும் கூட நம்மவர்கள் அஞ்சியஞ்சி வாழ்ந்து கொண்டிருந்த அவலங்கள் மாறவும், அன்று அந்நியரின் இன்னல் தாங்காது நாட்டை விட்டே வெளியேறிய ஞானபிரகாசர் போன்றோரின் பிரார்த்தனைகள் பலிக்கவும் நாவலர் எழுந்தார். எங்கள் கலாசாரம் பிழைத்துக் கொண்டது. சிவநெறி தழைக்க எங்கள் சமயாசாரியர்கள் திருமுறைகளை அருளிச் செய்தார்கள். இவரே தாம் போன இடங்களிலெல்லாம் சைவப் பிரசங்கங்களைச் செய்து வந்தார். சமயப் பிரசங்கங்களுடன் சமயாசாரியர்களின் தேவார திருமுறைகளையும் விளங்கச் செய்தவர் நாவலர். இவரின் கல்விப் புலமையும், நாவன்மையும், தமிழுக்குக் கிடைத்த பெரும் பேறு எனக் குறிப்பிடலாம்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் இத்தகைய சைவப் பணிகளை ஆற்றியதோடு மாத்திரம் நின்றுவிடாது தனக்குப் பின்னர் தமது பணிகளைத் தொடர்ந்து ஆற்றச் சிவசங்கர பண்டிதர், சி.வை. தமோதரம்பிள்ளை, காசிவாசி செந்திநாத ஐயர், பொன்னம்பலபிள்ளை, சபாபதி நாவலர், சதாவதானி கதிரவேற்பிள்ளை முதலான சைவப் பெரியார்களை நெறிப்படுத்தி நாவலர் நன்நெறி ஈழத்திலும், இந்தியாவிலும் தொடர வழி வகுத்தார். இத்தகைய பணிகளால் ஈழத்து சைவசமயத்தின் மறுமலர்ச்சித் தந்தையாகவும், விடிவெள்ளியாகவும் கருதப்பட்டார். தம் வாழ்நாள் பூராவும் தமிழுக்கும் சைவத்திற்கும் சேவையாற்றி வந்த நாவலர் பெருமான் 1879ஆம் ஆண்டு மார்கழி மாதம் 21ஆம் திகதி இறையடி சேர்ந்தார். அவரது பூதவுடல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையில் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இறைபதம் அடைந்த இவரது குருபூசை தினம் கார்த்திகை மாதம் மக நட்சத்திரத்தில் அனுஷ்டிக்கப்படுகின்றது. தமிழுக்கும் சைவத்திற்கும் அரும் தொண்டாற்றிய நாவலர் பெருமானை அவரது குருபூசை தினத்தில் நினைத்து வழிபட்டு பெருமை பேசுவோமாக.

நாவலர் விட்டுச் சென்ற பணிகளைத் தொடர்ந்து ஆற்றவும் அவரது உடைமைகளை பாதுகாக்கவும் நாவலர் சபை உருவாக்கப்பட்டது. இதன் தலைமையில் 1979இல் நாவலர் நூற்றாண்டு விழா நாடளாவிய ரீதியில் கொண்டாடப்பட்டது. நாவலரைச் சுதேசிய பெயர்களில் ஒருவராக இலங்கை அரசாங்கம் அங்கீகரித்ததோடு அவரது பணிகளைக் கௌரவித்து முத்திரை ஒன்றையும் வெளியிட்டது. நாவலரது சைவசமயப் பணிகளை நினைவுகூருமுகமாக நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்கருகில் நாவலர் மண்டபமும், நாவலர் வீதியிலுள்ள இல்ல வளாகத்தில் இந்து கலாசார திணைக்களத்தினால் யாழ்ப்பாண தொல்பொருட்காட்சிசாலையும் நிறுவப்பட்டன. இவரின் பிறப்பின் முக்கியத்துவத்தினை சி.வை. தாமோதரம்பிள்ளை வியந்து பாடியுள்ளார்.

ஆறுமுகநாவலரைப் பற்றிய நூல்கள் பலவுள்ளன. அவற்றுள் ஸ்ரீலஸ்ரீ நல்லூர் ஆறுமுகநாவலர் சரித்திரம். வண்ணார்பண்ணை வே. கனகரத்தின உபாத்தியாரால் எழுதப்பட்டது. யாழ்ப்பாணத்து நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சரித்திரம் சிவகாமி சேற்றூர் இ. அருணாசலக்கவிராயர் எழுதியது. ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் சரித்திரம் யாழ்ப்பாணம் நல்லூர் த. கைலாசபிள்ளையால் எழுதப்பட்டது. நாவலர் வசனநடை பிரம்மஸ்ரீ. சோ. ராமஸ்வாமி சர்மாவால் எழுதப்பட்டது. நாவலர் நினைவு மலர் பண்டிதர் கா.பொ. இரத்தினத்தால் தொகுக்கப்பட்டு ஈழகேசரி நா. பொன்னையாவால் வெளியிடப்பட்டது. "நாவலர் பெருமான்", "நாவலர் நாடகம்" என்பன யோகி சுத்தானந்த பாரதியாரால் எழுதப்பட்டவை. ஆறுமுகநாவலர் பிரபந்தத்திரட்டு த. கைலாசபிள்ளையால் எழுதப்பட்டது. நாவலர் விழாக்காட்சிகள், நல்லூர் தந்த நாவலர், நாவலர் மாநாடு விழா மலர், நாவலர் சுருக்க வரலாறு, நாவலர் நூற்றாண்டு மலர், ஆறுமுகநாவலர் கவித்திரட்டு, நாவலர் சரித்திர ஆராய்ச்சி என்பனவும் அடங்கும்.


உயிர்களிடத்து நாவலர்காட்டிய அன்பு, பொது வாழ்வில் அவர் கடைபிடித்த நேர்மை, தூய்மை, எளிமை, பொறுமை யாவும் அவரை மனிதருள் மாணிக்கமாக உயர்த்தின. "பார் போற்றும் ஞானதேசிகரை பணிந்தவர் ஆணையின் வண்ணம், பூவலர் கொன்றை புனைந்தவர் புகழைப் புலமுகு மறியவர் கூட்டுண்ணக், காவலர் வியப்ப உரைத்திடல்கேட்டுக் கருணை கூர் தேசிகர் இவர்க்கு, நாவலரெனும் பேர் தகுமென அளித்தார் ஞானத்தார் தகுந்தகும் என்ன?" என ஆறுமுகநாவலரைப் பற்றி சுவாமி விபுலானந்தர் சூட்டிய கவிதை பாமாலை ஆகும். நாவலர் பெருமான் உலகம் உள்ளவரை, வரலாற்றிலும் எமது இளம் மனதுகளிலும் வாழ்ந்து கொண்டே இருப்பார். இன்றைய தமிழ் இளைஞர்களான நாங்களும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் காட்டிய வழியில் நடந்து தமிழ்ப் பணியாற்றமுன்வருவதே நாம் அவருக்குச் செய்யும் கைமாறாகும். அவரது நாமம் வாழ்க! ஆறுமுகநாவலர் பெருமானின் வழியைப் பின்பற்றிச் சிறப்புடன் வாழ்வோமாக!

நல்லூர் கந்தன் வருடாந்த மகோற்சவத்தையொட்டி மாமன்றம் நடத்திய கட்டுரைப் போட்டியில் மேற்பிரிவில் முதலாவது பரிசு பெற்ற கட்டுரை இது.

# கந்தபுராண கலாசாரம்

செல்வன் ஜீ. ஷஜீவன்
யாழ். இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

ஓம் என்கின்ற பிரணவமந்திரத்தின் உட்பொருளாகிய அடிநாதம் எப்படி எல்லா உயிர்களிடத்தேயும் உறைகின்றதோ? ஓயாது சுழன்று கொண்டும், பேரண்டத்தின் ஒளியாகிய சூரியனை சுற்றிக் கொண்டும் இருக்கின்ற இந்த பேருலகு எப்படி உயிர்களின் வாழ்வுக்கு அடிப்படையாக விளங்குகின்றதோ?அது போலத்தான் உள்ளும் புறமுமாக அனைத்துக்கும் ஆக்க மூலமாகவும் அவற்றின் ஒடுக்கத்தின் மூலமாகவும் இறைவன் நிறைந்து இருக்கின்றான். வட நாட்டில் எழுந்த வேதங்கள் அந்த இறைவனைத் தேடி அவனை அடைய ஆய்வு செய்து இறுதியில் வேதங்களின் சாரமாக ஒரு உண்மையைக் கண்டறிந்தது. அது எதுவெனில்,



'எதிலிருந்து எல்லாம் பிரவாகிக்கின்றதோ–ஊழியின்
முடிவில் எதனிடத்தில் எல்லாம் சென்று ஒடுங்கி விடுகிறதோ
அதுவே பிரம்மம்!'

இந்த உண்மையை வேதங்கள் கண்டு தெளியும் முன்பே எமது தமிழ் வேதங்களாகிய தேவாரமும் பிற இறை இலக்கியங்களும் உணர்ந்து இருக்கின்றன என்றால் அது ஒப்பற்ற உண்மை ஆகும்! அந்தவகையில் வந்துதித்த இணையற்ற இறை இலக்கியமாக கந்தபுராணத்தை சிரம் மேற்கொள்வது ஈழத்துச் சைவர்களுடைய மரபாகப் போய்விட்டது. குறிப்பாக யாழ்ப்பாண சைவர்களுடைய வாழ்விலே ஊறி வேர்விட்டுப்போன இலக்கிய வரிசைகளில் என்றென்றும் முன்னிற்பது கந்தன் புகழைத் தங்கத் தமிழில் கச்சியப்ப சிவாச்சாரியாரால் புடம்போட்டு எழுதித் தந்த கந்தபுராணமெனில் அதை மறுப்பார் யாரும் இல்லை!

இதனால்தான் என்னவோ தமிழக ஆய் வாளர்களும், அறப்பணிக்காவலர்களும் யாழ்ப்பாணத்தை 'கந்தபுராண கலாசார நகரம்'என்று போற்றி வணங்குவது வழமையானதாக மாறிப்போய்விட்டது.'அது என்ன கந்தபுராண கலாசாரம்?' என்பது அனைவர் உள்ளங்களிலும் உதயமாகும் வினாவாகத்தான் இருக்கிறது. நீண்ட வரலாற்றில் நெய்யப்பட்ட அந்த கந்தபுராண கலாசாரத்தை பற்றி சற்று எம் எண்ண ஓட்டத்தைத் திசை திருப்புவோம்.

'அறியாத என்னை அறிவாயும்
நீ என்று, அகம் புறமும்
பிறியாது, அறிவித்த பேரறிவு'

என்று தாயுமான சுவாமிகள் தன் உயர் தமிழில் உரை செய்கின்றார்.இது கந்தபுராணத்தின் கருவோடு ஒத்துப்போவதைக் காணலாம். அறிவும் அழகும் உருவாகிப் பொறியில் நிறைவாகிப் பூவில் உருவான கந்தன் ஆணவம், கன்மம், மாயை என்கின்ற மும்மலங்களைப் போக்கி முத்தியின்பம் தரும் உன்னத இலக்கிய நிகழ்வை பக்தி என்கின்ற உயர்நெறியில் பசுவாகிய உயிருக்கு அறிவை அறிவிக்கும் பாங்கை தாயுமானவரும் தமிழில் இலக்கிய உறவின் இயல்பே. கந்தபுராணப் பாடல்கள் கேட்போர் மனங்களை தம் தெய்வீக சக்தியால் தம்பால் ஈர்க்க வல்லவை. முருகனின் அவதாரம் முதற் கொண்டுஅடியவர் குறை தீர்க்கும் அவன் அற்புத ஆனந்த நிலைகள் பற்றி அடிஅடியாய் எடுத்துரைக்கும் இயல்பு பெற்றவை. மூலத்தின் மூலமாகவும் முடிவிற்கு முடிவாகவும் ஞாலத்தின் ஆதாரமாகவும் இருக்கும் சிவனின் நெற்றிக்கண்களில் இருந்து உருவெடுத்த குமரன் கதையை தேனிலும் தெவிட்டாத தமிழில் சொல்பவை.

'தட்டைநெருகி டிரங்கழல் சதங்கைகள் சிலம்பக்
கட்டழகு மேய அரை ஞாண்மணி கறங்க
வட்டமணி குண்டல மாதணி நுதல் வீர
பட்டிகைமினக் குமரன் ஆடல் பயில்கின்றான்'

என்று தெய்வத்தின் அசைவுகளை செவி வழி ஏற்றி எம் சிந்தையை மயக்கும் தெள்ளு தமிழ்ப் பாடல்களாய் தரும் கந்தபுராண கலாசாரம் யாழ்ப்பாணத்தில் வேர்விட்ட தொன்மை இன்னும் ஆராயப்பட வேண்டியதே!

இங்ஙனம் உயர் சிறப்புவாய்ந்த கந்தபுராணம் சைவர்கள் வாழ்வில் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் தான் ஊர்ஊராக உரை செய்கின்ற முறை எழுந்தது என்றால் வியப்பல்லவா? ஆம். வருடத்தில் நான்கில் ஒரு பங்கு காலம் அதாவது மூன்று மாதங்கள் யாழ்ப்பாணத்திலே கந்தபுராணக் காலம்தான். விதிப்படி ஓதுவார்கள் சைவாலயங்களில் ஊரார் முன்னிலையில் கந்தபுராணப் பாடல்களை விளக்கிப் பொருள் உரைப்பார்கள். பாடல் படித்து அதற்கு பொருள் சொல்லும் முறை ஈழத்தில் எங்கும் இல்லாது யாழ்ப்பாணத்தில் மட்டுமே சிறப்புற்று விளங்கியது என்றால் அது மிகையல்ல. கோயிற் சந்நிதானத்தில் தெற்கே வடக்கு முகமாக இருந்து ஒருவர் பாட்டினைப் படிக்க, மற்றவர் கிழக்கு முகமாக இருந்து பொருள் உரைப்பார். முதலில் பதப் பொருளும் பின்பு பொழிப்புரையும் தேவைக்கு ஏற்ப விஷேட உரையும் வழங்கப்படும்.இதில் சிறப்புக்குரிய விடயம் என்னவெனில் பாடல் படிப்பவர் எச்சுதியிலும் என்ன இராகத்திலும் படிக்கின்றாரோ, அதே சுதியிலும் இராகத்திலும் பொருளும் கூறப்படும். இவ் வழக்கம் இற்றைக்கு அறுநூறு ஆண்டுகளுக்கு முன்பே நடந்து வருகின்றமை ஆச்சரியமே!

**'அவன் அருளாலே அவன் தாள் வணங்கி'**

என்று சிவபுராணம் கூறுதல் போல் கந்தன் திருவருளும் சைவர்களது மன உறுதியுமே அதற்கு காரண பொருளாக அமைந்தது எனலாம்.

கந்தபுராண கலாசாரம் என்பது வெறுமனமே ஈழத்தில் ஓதுதல், கேட்டல், பரவசம் அடைதல் என்கின்ற வட்டத்துள் அடங்கி விடவில்லை. ஏனெனில் ஒரு கலாசாரம் எப்போது கலாசாரத்திற்குரிய பூரண தகுதியைப் பெறும் என்கில் அது தனக்கெதிரான தடைகளை அழித்து எதிர்த்து நிலை கொள்கின்ற போதே தன்! 'வலியது வாழும் மற்றன மறையும்' என்கிற டார்வினின் கொள்கை அடிப்படையில் எம் கந்தபுராண கலாசாரம் வாழ்ந்தது, வாழ்கின்றது, வாழும் எனில் ஐயமில்லை.'தடைகள்' என்று குறிப்பிட்டதைப்போல பெருந்தடைகளும் வரலாறு ஏற்று அழுகின்ற அழிவுகளும் கந்தபுராண கலாசாரத்திற்கு வந்தது.ஆதியில் அமைதியாய் வேர்விட்ட கலாசாரம் சீன மூங்கில்களைப் போல் சிந்தித்து மறைமுக வளர்ச்சி எய்த வேண்டிய நிலை ஏற்பட்டுப் போனது.கந்தபுராணத்திலே கச்சியப்ப தேவர் குறிப்பிட்டவாறு,

**'உரற்றிய கணமழை உம்பர் சூழ்ந்தென**
**இரற்றெடு சூழ் படை ஈட்டம் நோக்கியே**
**மரற்றுறு பலங்களில் வாரி கண்வர**
**அரற்றினர் வெருவினர் அமரர் யாவரும்'**

அமரர்களாகிய தேவர்கள் அடைந்த நிலையை ஈழ நாட்டு சைவர்கள் அடைந்து அல்லலுற்றனர். விரிவாக உரைப்பதாயின் பறங்கியர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் என்ற அந்நியர்கள் வடக்கே நல்லூரில் தமிழ் அரசு செய்த மன்னர்களை வீழ்த்தி தாம் அரசு செய்யப் போந்தனர். கந்தபுராணம் கூறும் ஆணவம், கன்மம், மாயை போன்ற சிங்கன் தாரகன் சூரன் என்போர்க்கு ஒப்பான அந்நியர்களால் அந்த கந்தபுராண கலாசாரம் கலக்கமடைய வேண்டியிருந்தது. முன் வந்த பறங்கியரும் ஒல்லாந்தரும் கட்டாய சமயக் கொள்கையை விதித்து சைவர்களை அல்லலுறச்செய்தனர். வாழையிலையில் உணவருந்த தடை விதிக்கப்பட்டது. வீடுகளில் உருவ வழிபாடு தடுக்கப்பட்டது. ஆலயங்களில் ஓதப்பட்ட கந்தபுராணம் நிறுத்தப்பட்டது. கட்டாய மதமாற்றமும் அவர்கள் உணவின் பொருட்டு வீட்டுக்கொரு பசுவும் வரிகளாக விதிக்கப்பட்டது. அப்போதைய சைவர்கள் எங்கே எம் கந்தபுராண கலாசாரம் சிதைந்து விடுமோ என்று அச்சப்படலாயினர். எனினும் சைவர்களாய் பிறந்துவிட்டு அச்சம் கொள்ளல் அவமானம் என உணர்ந்தனர்.

**"மஞ்சுலாம் உருவும் அஞ்சேன் மன்னரோடு உறவும் அஞ்சேன்"**

என்று சூளுரைத்த மணிவாசகர் வழித்தோன்றல்கள் அல்லவா நாம்? என்பதை அறிந்தனர்.கந்தனை தம் மனக்கரங்களால் வணங்கினர். கந்தபுராண கலாசாரத்தை கட்டிக்காக்க மனத்தளவில் எல்லோரும் ஒருமித்தவர்களாயினர். சோதனைகள் அலை அலையாய் வந்தன. கந்தபுராண படனம் செய்யும் பள்ளிகள் மறைந்தன. வெள்ளையர் ஆட்சியின் விளைவாய் கிறிஸ்தவ மிசனரிமார்களின் ஆங்கில மதப் பள்ளிகள் தலைதூக்கின. சைவச் சிறார்களின் தமிழும் சைவமும் கலந்த கல்வி பறிக்கப்பட்டு ஆங்கில மொழிக்கல்வி திணிக்கப்பட்டது. எங்கே எம் கலாசாரம் மறைந்து விடுமோ என்ற சூழ்நிலையில் தான் நாவலன் என்ற சைவத்தின் காவலன் உதயமானான்! மதுரைத் தமிழில் மதுரத் தமிழை தமிழ் நாட்டில் பிரசங்கம் செய்த ஆறுமுகநாவலர் 'நாவலர்' பட்டத்தோடு யாழ்ப்பாணம் மீண்டார். அதன் பின்னாலே நாவலர் சைவமும் தமிழும் தழைத்தோங்க ஆற்றிய சேவைகள் தான் என்னே? என்னே? தனிமனித சாதனைகளாகவே அவற்றை ஆன்றோர் கொள்வர். எங்கெல்லாம் கந்தபுராணக் கலாசாரம் பேசப்படுகிறதோ, அங்கெல்லாம் நாவலரின் உயர்பணிகளை நினைவு கூருவது தவிர்க்க முடியாததாகிப் போய்விட்டது.

**'நல்லை நகர் ஆறுமுக நாவலர் பிறந்திரரேல்**
**சொல்லு தமிழ் எங்கே? சுருதியெங்கே?'**

என்று சி.வை.தாமோதரம் பிள்ளை அவர்கள் உரைத்தது உண்மையில் சிறந்ததெனலாம். இங்ஙனம் கந்தபுராணக் கலாசாரத்தைத் தாங்கிய தூணாக நாவலர் பெருமான் திகழ்ந்தார். கந்தபுராணத்தின் கடைக் கூறுகளையும் கற்றுணர்ந்த நாவலர் பிரசங்கங்களைத் தோற்றுவித்த பெருமகனாவார். படிப்பறியாப் பாமரரும், சிறார்களும், கந்தபுராணத்தை செவி வழிக்கேட்டு முருகனை தரிசிக்க வைத்தவர் எனின் மிகையல்ல. நாவலருடன் வித்துவசிரோமணி பொன்னம்பலப் பிள்ளையும் இணைந்து கந்தபுராணக் கலாசாரத்தை காத்துவரலாயினர். அவர் வேறு யாரும் இல்லை, நாவலரின் மருமகனாரே ஆவார். நாவலரின் பின்னாலே பொன்னம்பலபிள்ளை கந்தபுராண படனங்களை அக்காலத்தில் சர்வ கலாசாலையாக விளங்கிய வண்ணை வைத்தீஸ்வரன் கோயில் வித்தியா மண்டபத்தில் ஆற்றினார். போர்த்துக் கீசரும் ஒல்லாந்தராலும் மறுக்கப்பட்ட எம் கந்தபுராணம் வெள்ளையர் ஆட்சியில் (பிரித்தானியர்) மெல்ல ஒளிவிட்டு பிரகாசித்தது எனலாம். ஆறுமுக நாவலர் வழி வந்த குரு சீட பரம்பரையினர் அக் கந்தபுராணத்தையும் புராணம் நல்கிய கலாசாரத்தையும் காத்து வரலாயினர்.சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களும் சுதுமலையைச் சேர்ந்த விசுவநாத பிள்ளையும் முதன்முதலில் இலங்கையில் பி.ஏ பரீட்சையில் சித்தி எய்தி கந்தபுராண கலாசாரத்தை ஏடுகளில் ஏற்றிவைத்தனர். மிசனரி கல்விமூலம் கரோல் விசுவநாத பிள்ளை என வாழ்ந்த அவர் நாவலருடன் தர்க்கம் புரிந்து தன் தவறை உணர்ந்தார். சைவ நிந்தனை செய்த தன் நாவினைப் பொன் ஊசியால் சூடு போட்டுக் கொண்டார். பின் சைவ விருத்திக்கு தன்னை ஈடுபடுத்தலானார். இதுபோல் எத்தனையோ சந்தர்ப்பங்களில் எத்தனையோ பேரின் மனங்களை கந்தன் துணையுடன் நாவலர் மாற்றினார்.

தமிழ் சரித்திரம் எழுதிய கனகசபைபிள்ளை, அகராதி தந்த கதிரவேற்பிள்ளை, மொழிபெயர்த்தல் கலையால் கந்தபுராணக் கலாசாரத்தை உலகறியச்செய்த சுதுமலையூர் விசுவநாதப்பிள்ளை, கந்தபுராண கலாசார விழுமியங்களை ஆவணம் செய்த ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை மற்றும் கந்தபுராண கலாசாரத்துள் மூழ்கித் திளைத்து அதன் பயனாக **கந்தபுராண நவநீதம்** எனும் நூல் தந்த ஆறுமுக நாவலரின் மாணவரான செந்திநாதையர் டாக்டர். உ. வே. சுவாமிநாதையர் என்று அந்தப்பெரும் பொருளான கந்தபுராணம் தந்த கனவான்கள் பட்டியல் மிக நீளம்.

**'இந்திரராகி பார்மேல் இன்ப முற்றினுது மேவிச்**
**சிந்தையிணைந்த முற்றிச் சிவகதியதனிற் சேர்வர்.'**

என்று கந்தபுராண நூற்பயன் உரைப்பதைப்போன்று கந்தபுராண கலாசாரம் தந்த அந்த சைவ கனவான்கள் என்றும் இந்திரலோகத்துள் வாழ்வது திண்ணமே.

காலத்தின் தேவை கருதி நாம் பிற்கால அதாவது நவீனயுகக் கந்தபுராண கலாசார நிலைமைகளை ஆராய்ந்து அறிய வேண்டியவர்களாக உள்ளோம். மகான்களும் வேதாந்திகளும் கட்டிக்காத்த கலாசாரம் எப்படி நவீனயுகத்தின் வேகமான மாறுதல்களை சீரணித்துக் கொண்டது பற்றிச் சிந்தனை செய்வோம். ஆரம்பத்தில் கூறியது போல கலாசாரம் மாறுதல்களை தனக்கு சாதகமாக மாற்றிக் கொண்டால் மட்டுமே வையத்துள் நிலைத்திருக்கும். கந்தபுராணம் கூறும் கருத்துக்கள் தற்கால உலகினுக்கே பெரிதும் பொருந்துவதாய் உள்ளது. கந்தனை வணங்குதல் மட்டுமன்றி அவன் புகழ்பாடும் கந்த புராணத்தை ஓதுவதுமே கந்தபுராண கலாசாரமாகும். அவை தவிர கந்தபுராணத்தோடு ஒன்றிய வாழ்வு வளம்பெறுதலும் வேண்டும்.மகாகவி பாரதி,

**தோகை மேல் உலவுங் கந்தன்**
**சுடர்க்கரத் திருக்கும் வெற்றி**
**வாகையே சுமக்கும் வேலை**
**வணங்குவது எமக்கு வேலை!**

என்று பாடல் இசைத்தது போல் வாழ்ந்த யாழ்ப்பாணக் குடி மக்கள் நகரின் மத்தியிலே நல்லூர், வடதிசையிலே மாவிட்டபுரமும், கடற்கரையினிலே செல்வ சந்நிதியிலும் இன்னும் பல ஊர்களிலும் குடி கொண்ட வேலவன் புகழைப்பாடுதலும் அவன் அடி வணங்குதலையுமே வேலையாகக் கொண்டிருந்தனர். இன்று கந்தபுராண கலாசார நகரம் எப்படி இருக்கிறது? அந்த உயர்ந்த உன்னத கலாசாரத்தை கைக்கொள்கின்றதா? ஆலயங்களும் கலாசாலைகளும் கந்தபுராணத்தை சிரம்மேல் ஏற்று அதன் உட்பொருளை உலகறியச் செய்கின்றதா? இந்தக் கேள்விகளுக்கு சில கசப்பான உண்மைகளே பதிலாய் வந்தாலும் அதை ஏற்றுக் கொள்ள வேண்டியது எம்முடைய கடமையாகும். அக்காலத்தில் எல்லாம்,

**வாளாறுத்துச் சுடினும் மருத்துவன் பால்**
**மாளாத காதல் நோயாளன் போல்.**

துன்பங்கள் வந்த போதும் சோதனைகளை இறைவன் கொடுத்த போதும் அவன் மீதும் கந்தபுராணக் கலாசாரம் மீதும் இடையறாத காதல் பூண்ட ஈழத்திருநாட்டு மக்கள் இன்று உள்ளனரா? என்றால் உண்மையில் அரிதாகிப்போய்விட்டனரே! இன்றைய மக்கள் கந்தனை உயர்த்தி உயர்த்தி வணங்குகின்றனர். ஆனால் கந்தபுராணத்தை கைநழுவ விட்டுவிட்டனர். வானுயரக் கோபுரங்களும் விதானங்களும் அமைத்து மகிழ்கின்றனர். ஆனால் வானினை விட உயரமான எம் கந்தபுராணக் கலாசாரத்தை மறந்து விடலாயினர். அரங்கங்களிலும் கலாசாலைகளிலும் கந்தபுராண படனம் செய்வதை தவிர வேறெல்லாம் நடக்கிறது. மீறி எவராயினும் கந்தபுராண படனம் செய்யின் அதைக் காது கொடுத்து கேட்கவே இங்குள்ளோர் முனைப்பற்றவர்களாயுள்ளனர். என் காது கொடுத்து கேட்ட ஒரு வார்த்தை "யாழ்ப்பாணமாவது கந்தபுராண கலாசாரமாவது இப்ப கந்தறுந்த கலாசாரமாகிட்டுது."

'கொன்றிடல் போலொரு வார்த்தை-இங்கு கூறத் தகாதவன் கூறினன் கண்டீர்!'

என்று பாரதி உரைத்தது போல் இருந்தது. இந்நிலை இன்று வரக் காரணம் யாதோ? இயந்திரமயமாகிப் போன வாழ்வும் பொய் மாய நாகரிக கலாசாரங்களில் கண்ட அற்ப இன்பமும் இதற்குக் காரணமாகியது. நாவலர் பெருமான் மிசனரிமார்களோடு வாதிட்டு ஈட்டித்தந்த அந்த வெற்றிகளை மறந்து கால காலமாய் கட்டிக்காத்த கந்தபுராண கலாசாரத்தை மறந்து போனது, ஒரு நாளில் அல்லது என்றோ ஒரு யுகத்தில் தமிழர் சேர்ந்து செய்த பெரும் பாவமே ஆகும்.

**"சீதளக் காற்றும் செந்தமிழ் புராணமும்**
**பூதலம் தன்னில் மலிந்தே கிடந்த**
**மாதவம் செய்த மண்ணடா-அள்ளி**
**மார்பினில் பூசடா தமிழா!"**

என்று ஞாபகம் செய்தாலும் இன்றுள்ள தமிழர் நினைவுகொள்வரோ என்பது ஐயமே! இந்து மாமன்றங்களும் சைவ விருத்தி நிலையங்களும் இன்று இந்த ஞாபகமூட்டும் செயல்களில் ஈடுபட்டுவருதல் காலத்தின் தேவையாகவும் தமிழர் செய்த புண்ணியமாகவும் கொள்ளலாம். இன்று தமிழர் பல இன்னல்களை அநுபவிப்பதற்கும் அல்லலுற்று இருப்பதற்கும் எது காரணம்? இன்று ஈழத்தில் மழை வளம் இன்றி வேளாண்மை பாதிப்புறவும் குடும்ப உறவுகள் பிணைப்பின்றி விரிசல் காணவும் காரணம் என்ன? பாவச்செயல்களும் பஞ்சமா பாவங்களும் தடையின்றி நடைபெற ஏன் கந்தன் மௌனித்துள்ளான்? என்றால் நாம் கந்தபுராண கலாசாரத்தை மறந்தமையே ஆகும்.

**"வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க, மன்னன்**
**கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க,**
**நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க,**
**மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."**

என்று ஓதி ஓதி உரை செய்து நாட்டுவளமும் வீட்டு வளமும் உயர்வுற பஞ்சமா பாதகங்கள் நலிவுற கந்தபுராணம் ஓதிய மன அலைகள் குறைந்து போனதனால் குற்றங்கள் பெருகியது எனலாம்.என்று நாம் எம் கந்தபுராண கலாசாரத்தை மீட்டு எடுத்து வாழத் தொடங்குகின்றோமோ, அன்று தான் நாம் இழந்தவற்றைப் பெற்று இன்பமுறலாம். கலாசாரம் கலாசாரம் என்று மேடைகளில் முழங்குபவர்கள் கூட கந்தபுராண கலாசாரத்தை எடுத்துரைப்பதோ அல்லது அதன்படி உரைப்பதற்கு ஏற்றது போல் நடப்பதோ கிடையாது.

சரி இனி குறைகளை பேசுவதை நிறுத்தி விடுவோம். இனியாவது இழந்து போன எம் கந்தபுராண கலாசாரத்தை மீட்டெடுக்கும் வழி முறைகளைக் கைக்கொள்ள கடப்படுவோம். நாளைய சைவ உலகின் தலைவர்களான பள்ளி மாணவர்களிடத்தே கந்தபுராண கலாசார தொன்மையையும் கந்தபுராணத்தின் தேன்தமிழ்ச் சுவையையும் பருக வழி செய்தல் வேண்டும்.நாவலர் பெருமான் செய்ததைப்போன்று வெள்ளிக்கிழமைகளில் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் கந்தபுராணம் சார் கலைவெளிப்பாடுடைய நிகழ்வுகளை நடாத்த வேண்டும். சைவ சிறார்களையே சிறந்த ஆயுதமாக நாவலர் தீர்க்க தரிசனத்துடன் பயன்படுத்தியது வியப்பே!பாலபாடம், பாலபோதினி போன்ற நூல்களை அச்சிட்டது மதிநுட்பம் வாய்ந்த இன்னரும் பணியன்றோ! கந்தபுராண கலாசாரம் ஒருபோதும் கவனிப்பாரற்றுப் போய்விடக்கூடாது! அது காலம் என்கின்ற சாகரத்தில் கரைந்து விடக்கூடாது. ஞாலம் என்ற

பொருள் உள்ளவரை அது நிலைத்து இருக்க வேண்டும். வேலும் மயிலும் சேவற்கொடியும் ஆட்சி புரியத் திசைகள் எட்டிற்கும் எம் கலாசாரம் பரவவேண்டும். விண்ணகம் போல் இம் மண்ணகமும் சிறப்புற்றிருக்க வேண்டும் எனில் கந்தன் திருவருள் கூடவே கந்தபுராணக் கலாசாரத்தின் நிறை அருளும் வேண்டும். ஆதியில் உயர்ந்த தமிழ் குடிகள் இன்றும் தலை நிமிர வேண்டும். சைவமும் தமிழும் ஆட்சி செய்யும் நாவலர் கண்ட கனவுத்தேசம் மெய்ப்பட வேண்டும். உயரிய கலாசாரங்கள் உலகில் பலபாகங்களில் நிலவியதைப்போல் இங்கு கந்தபுராண கலாசாரம் சிரஞ்சீவியாக நிலவ வேண்டும்! ஏடுகள் தோறும் திருப்புகழும் கந்தபுராணமும் பதிப்பிடப்பட்டு படனம் செய்யப்படல் வேண்டும். சனத்திரள் வெள்ளத்துள் அசைந்து வரும் நல்லூரான் திருத்தேரின் ஒளிபோலவும் "ஓம் ஓம்...." என்று உரக்க முழங்கும் காண்டா மணியின் ஒலி போலவும் வீரம் விளைந்து நிமிர்ந்து நிற்கும் விதானம் போலவும் தமிழர் வாழ்வும் சைவர்கள் பெருவாழ்வும் நிலைபெற்று செழிக்க வேண்டும்! நீள் உலகு தனில் வளம்கொழிக்க வேண்டும்!

கந்தபுராண கலாசாரம் கடல் கடந்தும் நிலைபெறும் என்ற நீண்ட நம்பிக்கைச் சிந்தனை நிஜம்பெறக் கந்தவேள் திருப்பாதம் விருப்புடன் தொழுகின்றேன்!

**"இளமை நிலையா தென வறிந்து வேலன்**
**பழமை தரும் அடியைப் பற்றும்-எழுமையும்**
**இன்பம் தரும் இலங்கை மா நன்னாட்டீர்**
**அன்பிற் பணிவீரே அறிந்து!"**

"கச்சியப்ப சிவாச்சாரியார் திருவடி வாழ்க!"
குருபரன் திருவடி வாழ்க"




## பன்னீர் இலையில் திருநீற்றுப் பிரசாதம்

முருகனின் ஆறுபடை வீடுகளில் ஒன்று திருச்செந்தூர். இங்கு பன்னீர் இலையில் திருநீற்றை வைத்துப்பக்தர்கள் அனைவருக்கும் மருத்துவ மகா பிரசாதமாக வழங்கும் நடைமுறை பல வருடங்களாகவே இருந்து வருகின்றது. திருச்செந்தூர் பன்னீர் இலைத் திருநீற்றை பூசினாலும் பூசித்தாலும் பல நன்மைகள் விளங்குகின்றன. பல நோய்கள் தீருகின்றன.

திருச்செந்தூரில் பன்னீர் மரங்களாக இருப்பவர்கள் தேவர்கள். பன்னீர் இலைகளாக இருப்பவைகள் வேதங்கள். எனவே பன்னீர் இலைகள் தெய்வத்தன்மையும் மருத்துவ குணங்களும் கொண்டவை. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பன்னீர் இலையிலும் பன்னிரண்டு நரம்புகள் இருக்கின்றன. இவை ஆறுமுகப்பெருமானின் பன்னிரண்டு திருக்கரங்கள். ஆகவே பன்னீர் இலையில் வைத்த திருநீற்றை ஏற்பது என்பது ஆறுமுகப்பெருமானே தனது திருக்கைகளால் திருநீற்றை அனைவருக்கும் அருளுவதற்குச் சமனாகும் என்றும் சொல்வர்.

*(நன்றி : முத்தமிழ் கடவுள் முருகன்)*

## நல்லூர் கந்தன் மகோற்சவத்தை முன்னிட்டு இந்து மாமன்றம் நடாத்திய கட்டுரைப் போட்டி முடிவுகள்



| ஆரம்பப் பிரிவு | பெயர் முகவரி | பாடசாலை |
|---|---|---|
| 1ஆம் இடம் | செல்வி அஷாரிஹா அசோகன்<br>69, நாயன்மார் வீதி,<br>நல்லூர் யாழ்ப்பாணம். | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை. யாழ்ப்பாணம். |
| 2ஆம் இடம் | செல்வி ஜெயாளினி கந்தசாமி<br>56N, கறப்பளை முத்துக்கல்,<br>பொலனறுவை. | பொல/திம்பு ஹெவன்பிட்டி தமிழ் மகா வித்தியாலயம் பொலனறுவை. |
| 3ஆம் இடம் | செல்வி பிரதாயினி ஸ்ரீராகவராஜன்<br>35B, விவேகானந்தர் வீதி,<br>கொழும்பு - 06 | சைவ மங்கையர் வித்தியாலயம் கொழும்பு. |
| **கீழ்ப்பிரிவு** | | |
| 1ஆம் இடம் | செல்வி யதுசா ரகுநாதன்<br>அரச வீதி,<br>உரும்பிராய் கிழக்கு,<br>உரும்பிராய். | யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை யாழ்ப்பாணம். |
| 2ஆம் இடம் | செல்வி நிதர்சனா நடராஜா<br>23, கறப்பளை,<br>முத்துக்கல், பொலனறுவை. | பொல/திம்பு/ ஹெவன்பிட்டி தமிழ் மகா வித்தியாலயம் பொலனறுவை. |
| 3ஆம் இடம் | செல்வி சுரேகா மனோகரன்<br>கிராமக்கோட்டு வீதி,<br>களுவாஞ்சிக்குடி. | மட்/ பட்டிருப்பு மத்திய மகா வித்தியாலயம் பட்டிருப்பு. |
| **மத்திய பிரிவு** | | |
| 1ஆம் இடம் | செல்வன் ராமலிங்கம் நித்தியராஜ்<br>23, கறப்பளை,<br>முத்துக்கல்,<br>பொலனறுவை. | பொல/திம்பு/ ஹெவன்பிட்டி தமிழ் மகா வித்தியாலயம் பொலனறுவை. |
| 2ஆம் இடம் | செல்வன் பேரம்பலம் லக்சயன்<br>23/4, முதலியார் வீதி,<br>நல்லூர் தெற்கு. | புனித பரியோவான் கல்லூரி யாழ்ப்பாணம். |
| 3ஆம் இடம் | செல்வி துவன்னிகா கணேசன்<br>89, கூமாங்குள பிரதானவீதி,<br>உக்குளாங்குளம், வவுனியா. | வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம், வவுனியா. |
| **மேற்பிரிவு** | | |
| 1ஆம் இடம் | செல்வன் ஜீவரட்ணராஜா ஷஜீவன்<br>61, சுதுமலை மேற்கு,<br>மானிப்பாய். | யாழ் இந்துக் கல்லூரி யாழ்ப்பாணம் |
| 2ஆம் இடம் | செல்வி சுப்பிரமணியம். பவஷாளினி<br>மகிலூர் வீதி, ஒந்தாச்சி மடம்<br>தெற்கு, களுவாஞ்சிக்குடி. | கமு/ இராமகிருஷ்ண மகா வித்தியாலயம். கல்முனை |
| 3ஆம் இடம் | செல்வன் செங்கதிர்ச்செல்வன்<br>சேந்தன்<br>185/1, கண்டி வீதி, சாவகச்சேரி | யாழ்/இந்துக் கல்லூரி. யாழ்ப்பாணம். |

# ஞான வேள்வி - ஆன்மீக கேள்வி பதில்கள்





*காரணமின்றி ஒரு காரியமில்லை என்பார்கள். அதிலும் தொன்மைமிக்க நம் சைவ சமயத்திலே இயற்றப்படுகின்ற ஒவ்வொரு சிறிய காரியங்களுக்கும் ஆணித்தரமான ஆதாரபூர்வமான காரணங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆன்மீக சூட்சுமங்களை முனிவர்களும் நாயன்மார்களும் ஆழ்வார்களும் சித்தர்களும் மட்டுமன்றி காலத்திற்கு காலம் தோன்றிய சமயப் பெரியோரும் மகான்களும்கூட எளிய மொழியில் சொல்லிவிட்டுச் சென்றிருக்கிறார்கள். தெய்வீக ஆற்றலின் ஆழம் அறிந்த அக்காலத்து மக்கள் சமய அனுஷ்டானங்களை தம் வாழ்க்கையோடு சேர்த்தே பின்பற்றினார்கள். ஆன்மீகநெறியில் ஒழுகி நிறைவான வாழ்க்கையும் வாழ்ந்தார்கள். ஆனால் இன்று அச்சூழல்நிலை முற்றாக மாறி தமது வசதிக்கேற்ப ஆன்மீகத்தை வடிவமைத்துக்கொள்ளும் தலைமுறை உருவாகி வருவதனாலேயே அமைதியற்ற வாழ்க்கைமுறையை அனுபவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு ஏற்பட்டுள்ளது. அமைதியற்ற தடுமாற்றமான மனநிலைக்கு சந்தேகங்களே அடிப்படையாக அமைகின்றன. அந்த சந்தேகங்கள் உரியவகையில் தீர்க்கப்படுமானால் போலியான கருத்துக்களால் நெறிபிறழ்வதற்கு வாய்ப்பு ஏற்படாதல்லவா? அந்தவகையில் நெறிமுறையோடு வாழ்வாங்கு வாழ்வதற்கு வழிகாட்டும் வாழ்வியல் தத்துவங்கள், தாய்ச்சமயமென போற்றப்படும் நம் இந்து தர்மத்திலே ஏராளமாகக் காணப்படுகின்றன. அச்சூட்சுமங்களை அறிந்து முறையாக வாழ்க்கையை வாழ ஆரம்பித்தால் இக்கலியுகத்திலும் மனஅமைதியுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ்வாங்கு வாழலாம் என்பதே உண்மை. அந்த தேடலின் ஒரு முயற்சியாகவே இந்து ஒளியில் ஆன்மீகக் கேள்வி பதில்களின் தொகுப்பாக "ஞான வேள்வி" எனும் தொடரை இந்த இதழிலிருந்து ஆரம்பிக்கின்றோம். முதல் அத்தியாயத்திற்கான பதில்களை அளித்தவர் அருள்மொழியரசி, வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் அம்மையார் ஆவார். தொகுத்து தருகிறார் சகோதரி கே. ஜெயபாரதி அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். - ஆசிரிய குழு*

**1. வீடுகளில் சுவாமியறை பூஜை என அனுஷ்டானங்களை மேற்கொண்டாலும் ஆலயத்திற்கு சென்று வழிபடவேண்டியதன் முக்கியத்துவம் என்ன?**

ஆலயங்கள் என்பவை ஆகம நியமங்களுக்கு அமைய (இலங்கையில் காரணாகமம், காமிகாகமம்) தேர்ந்தெடுக்கப்பட்ட புண்ணிய நிலத்தில் குறிக்கப்பட்டுள்ள அளவுப் பிரமாணங்களுக்கமைவாக இராஜகோபுரம், உள்பிரகாரம், வெளிப்பிரகாரம், சுதைவடிவங்கள் உள்ளிட்ட அனைந்து கட்டுமானங்களும் மேற்கொள்ளப்பட்டு பஞ்சபூதங்களும் உள்ளடங்கும் கருங்கற்களால், சாஸ்த்திரப்படி உருவாக்கப்பட்ட தெய்வ விக்கிரகங்களையும், உலோகத்திலானான உற்சவ மூர்த்திகளையும் மந்திரபூர்வமாக முறைப்படி பிரதிஷ்டை செய்து ஜீவகலையூட்டப்பட்ட தேவ மூர்த்தங்களினூடாக தெய்வீக அருள் சுரக்கின்ற புனித ஸ்தலங்களாகும். அவ்வாறு முறைப்படி அமைக்கப்பட்ட புனித சன்னிதிகளிலேயே இறைவன் உறைகின்றான். அங்கேதான் 'மூர்த்திகரம்' எனப்படும் இறைவனின் பேராற்றல் நிறைந்து காணப்படுகிறது. ஆலயத்தில் நிலவுகின்ற அமைதியும் தூய்மையும் நமது மனதை அமைதிப்படுத்தி ஒருமைப்பாட்டுடனும் சிதறாதச் சிந்தனையுடனும் வழிபாடுகளை மேற்கொண்டு அந்த இறையருளை நாமும் பெற்றுக்கொள்ள வழிகிடைக்கின்றது.

எனினும் பொருளாதார சிக்கலும் இடநெருக்கடியும் நிலவுகின்ற இன்றைய சூழ்நிலையில் சாதாரணமான நமது வீடுகளில் இத்தகைய உயரிய புனிதத்தன்மையை பேணுவதென்பது முடியாததொரு காரியம். ஆகவே நமது மன அமைதிக்காகவும் மகிழ்ச்சிக்காகவும் மங்களத்திற்காகவும் இறைவனின் திருவுருவப் படங்களை வீடுகளில் வைத்து பூசிப்பதோடு இயன்றவரையில் அவ்விடத்தை தூய்மையாக வைத்திருக்க முற்படுகின்றோம், எவ்வாறெனினும் நடைமுறை வாழ்க்கையில், வீடுகளில் ஏற்படுகின்ற சில குற்றங்கள் அதாவது தூய்மையின்மைகள் துடக்கு போன்ற நிலைமைகளை நம்மால் தவிர்க்க முடியாமல் போய்விடுகின்றது. ஆகவேதான் திருவுருவப்படங்களை வைப்பது போன்று தெய்வ விக்கிரகங்களை வீடுகளில் வைக்கக்கூடாது என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன.

அதுமட்டுமன்றி ஆலயத்தின் அமைப்பானது மெய்ஞானத்தில் கூறப்பட்ட விடயங்களை மட்டுமே கொண்டிராமல் விஞ்ஞானமும் வியந்து ஏற்றுகொண்ட பல பிரபஞ்ச இரகசியங்களையும், நூதனசக்திகளை வியாபிக்கின்ற இடமாக காணப்படுகிறது. ஆகவே அந்த தெய்வீக சக்திகளையும் இறைவனின் பேரருளையும் அவனுடைய உறைவிடத்திற்கே சென்று பெற்றுகொள்வதே மிகவும் உத்தமமானதாகும்.

**2. வீடுகளில் தனியான சுவாமியறைகள் வைக்கும் வசதிபடைத்தவர்கள் அங்கே தெய்வ விக்கிரகங்களை வைத்து வழிபடலாமா?**

வசதிபடைத்தவர்கள் என்றில்லை, எத்தகையோரானாலும் வீடுகளில் விக்கிரக வழிபாடு இயற்றும்போது இறைத் தூய்மைக்கும் புனிதத் தன்மைக்கும் ஏதேனும் பங்கம் ஏற்படுமாயின் அது இறை நிந்தனையாகவும் பாவகாரியமாகவும் அமையும் என்பதாலேயே சாஸ்த்திரங்கள் இத்தகைய நியமங்களை விதித்திருக்கின்றன. இருந்தபோதிலும் தூய்மையான தனியான சுவாமியறையில் தெய்வவிக்கிரகங்களை

வைக்கவேண்டும் என விரும்புகின்றவர்கள் தமது கையின் சாண் அளவுள்ள சுவாமி விக்கிரகங்களை மட்டுமே வீடுகளில் வைக்கலாம்.

**3. அப்படியாயின் சில இடங்களில் வீடுகளை ஒட்டியதாக சிறிய சிறிய கோயில்களை போல் அமைத்து (கோபுரங்களோ பிரகாரங்களோ இன்றி) சுவாமி விக்கிரகங்களை வைத்து பூஜைகளை மேற்கொள்கிறார்களே. அது தவறா?**

தவறு என்பதோடு மிகவும் வருந்தத்தக்க விடயமும் கூட. ஏனெனில் இறைவனின் அளப்பெருங் கருணையினாலேயே அவன் தனது தடத்த நிலையிலிருந்து (மெய்யறிவினால் மட்டும் அறியக்கூடியது) இறங்கி வந்து நமது அறிவுக்கு எட்டக்கூடிய சொரூப நிலையில் அருளுகின்றான். அவ்வாறு இருந்தபோதிலும் மேலும் அவனை அடையும் வழியை எளிதாக்குவதற்காக வேதங்கள், ஆகமங்கள், பன்னிரு திருமுறைகள், புராணங்கள் என்று எத்தனை எத்தனையோ வழிகாட்டிகள் நமக்காக உள்ளன. அதன் ஒரு வடிவமாகவே ஆலயங்களும் நான் முன்பு கூறியதுபோன்று பற்பல ஆகம நியமங்களின் அடிப்படையில் எழுப்பப்படுகின்றன. அவ்வாறிருக்கையில் வேத ஆகம நியமங்களை மீறி நாமே நமது சுயவிருப்பத்திற்கும் தேவைக்குமேற்ப ஆலயங்களை அமைத்துக்கொள்வதென்பது மிகவும் பாவமான செயலாகும்.

அதேவேளை, பிள்ளையார் மிகவும் எளிதாக அருள்பாலிக்கின்ற தெய்வமாக எளியோர்க்கு எளியோனாக இருக்கிறார். அவரது சன்னிதிகளை ஆற்றங்கரையிலும், வழிச்சந்திகளிலும் கூடத் தரிசிக்கின்றோம். ஏன் நாம் பிடித்துவைக்கும் மஞ்சளிலும் அவர் பிரசன்னமாகிறார். ஏனெனில் அவர் அவ்வளவு எளிமையானவர். எனினும் ஏனைய வழிபாடுகளை அவ்வளவு சுலபமாக நடாத்திவிட முடியாது. ஆகவே அந்தந்த தெய்வங்களுக்குரிய கிரியா விதிமுறைகள் கண்டிப்பாக பேணப்படவேண்டும்.

புதிது புதிதாக தேவைகளும் அதனையொட்டி பிரச்சினைகளும் அதிகரித்துவரும் நிலையில் ஒரே தெய்வத்திடம் மனம் லயிக்காது எங்கு சென்றால் தமது பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வு கிடைக்கும் என்று மக்களும் தெய்வத்தை மாற்றி மாற்றி கொண்டு அலைகிறார்கள் இறுதியில் தாமே புதிதாக ஒரு தெய்வத்தையும் உருவாக்கி விடுகிறார்கள். இது மகா குற்றம். தெய்வ வழிபாட்டிலும் கற்பினை ஒத்த நெறி பேணப்படவேண்டும். நமது மனம் நாடுகின்ற தெய்வீக சக்தியை அறிந்து அத்தெய்வத்தையே நமது இஷ்ட தெய்வமாக சிந்தையிலிருந்தி சிக்கெனப்பிடித்தலே நமது நல்வாழ்வுக்கு வழியாக அமையும். அதனை விட்டுவிட்டு, தமது துன்பத்திற்கு தமது முன்வினைப்பயனே காரணம் என்பதைப் பற்றியும் சிந்திக்காமல், விதிகளை மீறி தன்னிச்சையாக செயற்படுவதன் மூலம் மக்கள் மேலும் பாவங்களை சேர்த்துக்கொள்கிறார்கள் என்றுதான் கூறவேண்டும்.

**4. முறையான ஆலய வழிபாடு என்பது எவ்வாறு அமைய வேண்டும்?**

நீராடித் தூய்மையாகி, தோய்த்துலர்ந்த ஆடையணிந்து ஆலயத்திற்கு செல்லவேண்டும். ஆலய வாயிலில் மீண்டும் கைகால்களை கழுவிக்கொண்டு, ஆலயத்தை அண்மித்ததும் ஸ்தூல லிங்கமாகிய கோபுரத்தை வணங்கி இறை சிந்தனையுடன் அவனது துதிகளை ஓதியபடி ஆலயத்திற்குள் பிரவேசிக்க வேண்டும். ஆலயத்திற்குள் சென்றதும் முதலாவதாக பலிபீடத்தை வணங்கி 'நான்' எனும் தற்போதத்தை அங்கே பலியிட வேண்டும். அதாவது 'நான்' 'எனது' எனும் சுயநலத்தை முன்னிறுத்திய எண்ணங்களை அவ்விடத்திலேயே விட்டுவிட்டு இறைவனின் பேரருளில் நாட்டம் கொண்டவர்களாக பிள்ளையார் சன்னிதிக்கு சென்று தலையில் குட்டிக்கொண்டு தோப்புக்கரணம் போட்டு வழிபாடு செய்து தொடர்ந்து பிரகாரத்தை வலம்வந்து மூலஸ்தானத்திற்குள் உள்ள பரம்பொருளை தரிசிக்க செல்லவேண்டும். அவ்வாறு செல்கையில் நந்தி, பலிபீடங்களுக்கு குறுக்காக செல்லாது சுற்றிச்செல்ல வேண்டும். மூலஸ்தானத்திலே இறைவனை வணங்கி வெளியில் வந்து சுற்றுபிரகாரங்களில் உள்ள பரிவார மூர்த்திகளை ஒவ்வொன்றாக வணங்கி நவக்கிரகங்களை வணங்கி விட்டு இறுதியாக சண்டேஸ்வரர் சன்னிதிக்கு சென்று வழிபடவேண்டும். இவரது சன்னிதியையும் முழுவலமாக வரக்கூடாது. அதாவது குறுக்காக செல்லக்கூடாது. அவரது தியான வழிபாட்டுக்கு பங்கம் ஏற்படாது நமது வருகையை அவருக்கு தெரிவிக்கும் வகையிலும் ஆலய வழிபாட்டின் பலனைத் தந்தருளுமாறும் அவரை வேண்டி வலது கையின் ஆட்காட்டி விரலையும் நடுவிரலையும் நீட்டி ஏனைய விரல்களை மடக்கி இடது உள்ளங்கையில் மூன்று முறை தட்டி அல்லது மூன்று முறை சுடக்கு போட வேண்டும். இதற்கு 'தாளதிரயம்' என்று பெயர். பெரிதாக சத்தம் எழுப்பக்கூடிய விதத்தில் கைகளை தட்டி வழிபடுவதென்பது சண்டேஸ்வரரின் தியானத்திற்கு இடையூறாகவே அமையும். ஏனைய சந்தர்ப்பங்களிலும் பக்தர்களின் வழிபாட்டுக்கும் ஆலயத்தின் புனிதத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் ஆலயத்தினுள் மேற்கொள்கின்ற நடவடிக்கைகள் அனைத்தும் தெய்வநிந்தனையாகவே அமையும். சண்டேஸ்வர வழிபாட்டைத் தொடர்ந்து கொடிமரத்திற்குகீழே வடக்கு முகமாக ஆண்களாயின் அஷ்டாங்க நமஸ்காரமும் பெண்களாயின் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்யவேண்டும். அதன்பின்னர் சிவாச்சாரியாரிடமிருந்து விபூதி பிரசாதங்களை பெற்று நிலத்தில் சிந்திவிடாது அவற்றைத் தரித்த பின்பு ஆலயத்தில் சிறிது நேரம் அமர்ந்து தியானம் அல்லது தேவார பாராயணங்களை செய்த பின்பு மீண்டும் இறைவனை வணங்கிவிட்டு ஆலயத்திலிருந்து செல்லவேண்டும்.

**5. விபூதி, பிரசாதத்தை எவ்விரல்களால் தரிக்க வேண்டும்?**

பவித்திர விரல், கர்மத்திற்கு உரிய விரல் எனப்படுகின்ற மோதிர விரலினால் விபூதி பிரசாதத்தை

தரித்துக்கொள்வதே முறையானது. அதேவேளை பதியை குறிக்கும் பெருவிரலால் குரு தனது சீடனை அல்லது மூத்தவர்கள் சிறியவர்களை ஆசீர்வதித்து திருநீறு அணிவிக்கையில் மாத்திரம் பெருவிரலால் விபூதியிடலாம். அவ்வாறே தீர்த்தத்தைப் பெறுகின்றபோது இடது கையின் மீது வலது கையை வைத்து மரியாதையாக பெறல்வேண்டும். பெண்கள் தமது சேலைத் தலைப்பினை இடது கைமீது வைத்து, அதன்மீது வலது கையை வைத்து பெறுவதே மிகவும் சிறந்த முறையாகும்.

**6. அர்ச்சனை செய்யும்போது சுவாமி பெயருக்கு செய்வதா? அல்லது தமது பெயர் நட்சத்திரங்களில் செய்வதா உகந்தது?**

நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருள் அறியாமல் உலகில் ஒரு அணுவும் அசையாது. அவ்வாறிருக்கையில் நாம் நமது பெயர் நட்சத்திரங்களை சொல்லி நம்மை அவனுக்கு அறிமுகம் செய்து வைப்பது வேடிக்கையல்லவா? விதியை நியமிப்பவனுக்கு நம் பிறந்தநாளை ஞாபகப்படுத்த வேண்டுமா என்ன? எனினும் நமது அறியாமையினாலும் மனதிருப்திக்காகவும் நமது பெயர் நட்சத்திரங்களை சொல்லி அர்ச்சனை செய்வித்துக்கொள்கின்றோம்.

எவ்வாறு இறைவனுக்கு திருப்பல்லாண்டு பாடியும் வாழ்த்து கூறியும் உலக உயிர்களின் உய்விற்கு வழிதேடப்படுகிறதோ, அவ்வாறே அவனது நாமத்திற்கே அர்ச்சனை செய்விப்பதும் நமது நலனுக்கு உரியதாகவே அமையும்.

**7. அவ்வாறே ஆலயத்திற்கு உபயமாக கொடுக்கும் பொருட்களில் தத்தமது பெயர்களை பொறிக்கலாமா?**

இறைசிந்தனையோடு ஆலயத்திற்குள் வருகின்ற பக்தர்கள் சிலவேளைகளில் நமது உபயப்பொருளில் எழுதப்பட்டிருக்கும் பெயர்களால் சிந்தனைச் சிதறல்களுக்கு ஆட்படலாம். ஒரு சிலவேளைகளில் திருவுருவப் படங்களில் உபயமாக பெயர் குறிப்பிடப்பட்டிருப்பவர் தமது பகைவராக காணப்படுமிடத்து ஒரு பக்தர் இறைவனின் திருவுருவத்தை பார்த்தாலும், அவரது மனம் குறித்த நபர்மீது வைத்திருக்கக்கூடிய பகையை நினைப்பதை தவிர்க்க முடியாது. அவ்வாறான எண்ணச்சிதறல்களுக்கு நமது உபயப்பொருள் வழிகோலிவிடக்கூடாது என்பதற்காகவே அவற்றில் பெயர்பொறித்து கொடுப்பது சிறந்த முறையல்ல எனக் கூறப்படுகின்றது. எனினும் பக்தி மனத்துடன் இறைவனுக்கென நாம் கொடுக்கக்கூடிய ஒரு பச்சையிலையும் கூட இறைவனின் திருப்பாதங்களைச் சென்றடைகிறது. பரம்பொருளிடம் நம்மை நாம் அடையாளப்படுத்தி காட்ட தேவையில்லை. சகலமும் அறிந்தவன் அவன். அப்படியிருக்கையில் தனது ஆலயத்திற்கு உபயப்பொருளை கொடுத்தவர் யாரென்றா அவன் அறியாதிருப்பான்?.. ஆகவே நாம் செய்யும் வினைகளுக்கு ஏற்ப பலன்களை அனுக்கிரகிக்க அவன் ஒருபோதும் தவறமாட்டான் என்று நினைத்து அவனது செயல்களாகவே நமது செயல்களை மேற்கொள்வதே அமைதியான வாழ்க்கைக்கு வழியாக அமையும்.

**8. ஆலயத்தில் எவ்வெவ்விடங்களில் வீழ்ந்து நமஸ்காரம் செய்யலாம்? மானிடர்களை ஆலயத்திற்குள் வைத்து வீழ்ந்து வணங்கலாமா?**

இறைவனை விடுத்து சாதாரண மானிடர்களை ஆலயத்தினுள் வீழ்ந்து வணங்கக் (நமஸ்கரிக்கக்) கூடாது, ஏனெனில் ஆலயத்தில் இறைவனின் அருட்சக்தி ஒன்றே முதன்மையானதாக மேலோங்கி காணப்படுகிறது. அதனை வணங்குவதை விடுத்து நரர்களை (மனிதர்களை) வீழ்ந்துவணங்குவதென்பது பாவ காரியமாகும். அத்துடன் மூலஸ்தானத்தில் இறைவனையுமே வீழ்ந்து வணங்கக் கூடாது. அங்குமட்டுமல்ல பொதுவாக ஆலயத்தின் கொடிமரத்திற்கு எதிராக வடக்கு முகமாக அதாவது வாயிலின் திசை நோக்கியடி கால்கள் காணப்படும்படி மட்டுமே ஆண்களாயின் அஷ்டாங்க நமஸ்காரமும் பெண்களாயின் பஞ்சாங்க நமஸ்காரமும் செய்யவேண்டும்.

ஆலயத்தினுள் ஆச்சாரியர்களை வீழ்ந்து வணங்குவதானால் கொடிமரத்திற்கு இப்பால் வீழ்ந்து வணங்கலாம். எனினும் இறைவனின் பிரதிநிதியை ஒத்த சேவையை இயற்றும் சிவாச்சாரியர்கள் திருநீற்று பிரசாதங்களை வழங்கும்போது மரியாதை நிமித்தம் அவர்களது கால்களை தொட்டு வணங்குவது தவறல்ல. எனினும் ஸாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்குவதென்பது தவறான காரியமாகும்.

**9. விநாயகரை வழிபடும்போது பெண்கள் தோப்புகரணம் போடக்கூடாதென்று சொல்கிறார்களே அது உண்மையா?**

உண்மைதான். ஏனெனில் ஆண்களின் உடல் திண்மையானது. பெண்களின் உடல் அப்படியில்லை. ஆகவே ஒப்பீட்டளவில் பெண்கள் மெல்லியர்களாகவே கருதப்படுகின்றனர். அவ்வாறிருக்க தோப்புகரணம் இடுவதனால் அவர்களின் உடல் நிலைமைக்கு ஒவ்வாத அசௌகரியங்கள் ஏற்படக்கூடும் என்பதாலேயே அதனை விடுத்து தலையில் குட்டிக்கொள்வதே பெண்களுக்கு போதுமானது என கூறப்படுகிறது.

**10. பெண்கள் 'திரயாங்க' நமஸ்காரம் செய்யலாமா?**

கூடாது. இவ்விதிமுறையும் பெண்களின் நலனடிப்படையில் சொல்லப்பட்டதாகும். ஏனெனில் திரயாங்க நமஸ்காரம் செய்யும்போது இருகைகளையும் தலைக்கு மேலே தூக்கி வணங்கவேண்டும். அச்சந்தர்ப்பத்தில் அப்பெண்ணின் உடல் பாகங்கள் மற்றவர்களின் பார்வையில் தவறான எண்ணத் தூண்டல்கள் எழுவதற்கு ஏதுவாக அமைந்து விடக்கூடாதென்பதற்காகவே அத்தகைய நியமங்களை பெரியோர்கள் விதித்திருக்கின்றனர். ஆகவே பெண்கள் கரங்களை குவித்து ஏகாங்க நமஸ்காரம் செய்வதே போதுமானதாகும்.

(வேள்வி வளரும்)

**தொகுப்பு : கே. ஜெயபாரதி**

# மணிவிழா நாயகரை மாமன்றம் வாழ்த்துகிறது



திரு. ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி மனித நேயமிக்கவர். முகம் மலர அனைவருடனும் பழகும் இனிய சுவாவம் கொண்டவர். யாழ். இணுவில் கிராமத்தை சொந்த இடமாகக் கொண்டவர். இணுவில் இந்துக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியை மேற்கொண்டு, கோப்பாய் மகா வித்தியாலயம், உரும்பிராய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கல்வியைத் தொடர்ந்ததுடன், பின்னர் கொக்குவில் இந்துக் கல்லூரியில் உயர் கல்வியைப் பயின்று, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நுழைந்து கலைப் பட்டதாரியானார். அதன் பின்னர் யாழ் பல்கலைக்கழகத்தில் பட்டப் பின் கல்வி டிப்ளோமா, தொடர்ந்து முது தத்துவமாணி (கல்வித்துறை) பட்டங்களைப் பெற்று 1978 ஆம் ஆண்டில் ஆசிரிய சேவையில் இணைந்து கொண்டார்.

முதலில் பளை சோரன்பற்று கணேச வித்தியாசாலையிலும், 1981 ஆம் ஆண்டிலிருந்து பளை மகா வித்தியாலயத்திலும் ஆசிரியப் பணியை மேற்கொண்டார். 1991ஆம் ஆண்டிலிருந்து பலாலி ஆசிரிய கலாசாலையிலும் 2000 ஆம் ஆண்டிலிருந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலையிலும் விரிவுரையாளராகக் கடமையாற்றியதுடன், 2003 ஆம் ஆண்டிலிருந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபராக உயர்வு பெற்றார். மற்றுமொரு பதவி உயர்வாக 2008 ஆம் ஆண்டிலிருந்து தென்மராட்சி கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி அண்மையில் ஓய்வு பெற்றுக் கொண்டார்.

இவரது முப்பத்தைந்து வருட கால கல்விப் பணியின் ஊடாக பயன் பெற்றவர்கள் மிகப் பலர் என்றே சொல்ல வேண்டும்.

கல்விப் பணிக்கு மேலாக சமய சமூக நலப்பணிகளிலும் திரு. ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தியின் பங்களிப்பு போற்றத்தக்கது. அகில இலங்கை இந்து மாமன்றத்தின் சிறப்பு உறுப்பினராகவும், மாமன்ற யாழ். பிராந்திய பணிமனையின் இணைப்பாளராகவுமிருந்து ஆற்றிவரும் சேவையும் பெரிதும் பாராட்டத்தக்கது.

இவர் தீவிர இறைபற்றாளர் மட்டுமல்ல, ஆன்மீகத்திலும் நல்ல ஈடுபாடு கொண்டவர். மணிவிழா கண்டுள்ள இவரை மாமன்றம் இனிதே வாழ்த்துகிறது.

## மாமன்றச் செய்தி



### போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சுயதொழில் ஊக்குவிப்பு உதவி

*முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பத் தலைவியருக்கு, அவர்களது சுயதொழில் ஊக்குவிப்புக்காக அகில இலங்கை இந்து மாமன்றம் உதவியிருக்கிறது. மாமன்றத்தின் நெறியாள்கையின் கீழ், மாமன்ற சமூக நலன் குழுவின் ஏற்பாட்டில் றீட் அமைப்பின் இணை அனுசரணையுடன் முள்ளியவளை கல்யாணவேலவர் (முருகன்) ஆலயத்தில் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வின் போது நீர் இறைக்கும் இயந்திரம், தையல் இயந்திரம், வளர்ப்புக்குரிய ஆடுகள் மற்றும் பசு மாடுகள், கோழிக் குஞ்சுகள், துவிச்சக்கரவண்டி, வீட்டுக்குரிய தளபாடங்கள், பாத்திரங்கள் மற்றும் குளிர்சாதனப் பெட்டி என்பன வழங்கப்பட்டன.*

*இந்த வைபவத்தில் முல்லைத்தீவு அரச அதிபர் திரு. நா. வேதநாயகம், முள்ளியவளை உதவி அரச அதிபர் திரு. ஆர். குருபரன், உதவி திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். சி. ஸ்ரீரங்கன், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன், றீட் லங்கா நிறுவனத் தலைவர் வைத்திய கலாநிதி பி. கந்தசாமி, இலண்டன் லூசியம் சிவன் கோயில் உபதலைவர் வைத்திய கலாநிதி சி. சோமசேகரம், ஆலய பரிபாலன சபை தலைவர் திரு. க. மார்க்கண்டு, ஆலய பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ பி. ரகுநாதக் குருக்கள், அகில இலங்கை இந்து மாமன்ற பொதுச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன், மாமன்ற சமுகநலன் குழுத் தலைவர் விடைக்கொடிச்செல்வர் சின்னத்துரை தனபாலா, திரு ரி. கிரிதரன், சி. தனராஜா, திரு. எஸ் சதீஸ்கரன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.*

*(பின்னட்டை உள்பக்கத்தில் படங்களை பார்க்கவும்)*

## நாவலப்பிட்டி இந்து மன்றம் நடத்திய

# "சைவசமய சாரம்" நூல் வெளியீட்டு விழா


அகில இலங்கை இந்து மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான நாவலப்பிட்டி இந்து மன்றம் அதன் கன்னி முயற்சியாக "சைவசமய சாரம்" என்ற நூல் வெளியீட்டு விழாவைக் கடந்த ஆகஸ்ட் மாதம் 09ஆம் திகதி வெள்ளிக்கிழமை நாவலப்பிட்டி கதிரேசன் மகளிர் கல்லூரி மண்டபத்தில் நாவலப்பிட்டி இந்து மன்றத் தலைவர் தேசபந்து திரு. ஆர். இராஜேந்திரன் தலைமையில் நடாத்தியிருந்தது.

தலைவர் தனது தலைமையுரையில் "எமது தாய்ச்சங்கமான அகில இலங்கை இந்து மாமன்றம் எமக்குப் பலவழிகளில் ஆன்மீக, கலை, இலக்கிய, சமூகத் தொண்டுகளுக்கு வழிகாட்டியாக இருப்பதுடன் பலவிதமான உதவிகளையும் வழங்கி வருகிறது. நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் மற்றுமொரு செயற்பாடாக, எமது வேண்டுகோளுக்கிணங்க இலகு வழியில் ஆன்மீக அறிவை வளர்ப்பதற்கு 'சைவசமய சாரம்' என்ற நூலை எழுத்தாளர் திரு. தாமோதரம் கிருஷ்ணகுமார் ஆக்கித் தந்துள்ளார். இவர் பயிற்றப்பட்ட இந்து சமய ஆசிரியராவார்.

இது தொடர்பாக மலையகத்தில் கல்வி மேம்பாட்டிற்கு நன்கொடைகள் வழங்கும் திரு. முத்தையாபிள்ளை ஸ்ரீகாந்த் அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. அவர் இவ்வாறான நூல் மலையகத்திற்கு மிகவும் அவசியம் என்று தெரிவித்து அதற்குரிய நன்கொடையையும் வழங்குவதாக உறுதியளித்தார். எனவே இந்நூல் வெளியிடுவதற்கு பேருதவி புரிந்த நன்கொடையாளர் திரு. மு. ஸ்ரீகாந்த் அவர்களுக்கு எமது உள்ளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்" என்று கூறினார்.

இவ்விழாவிற்கு முதன்மை அதிதியாகக் கலந்து கொண்ட சப்ரகமுவ பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன் தனது உரையில், நாவலப்பிட்டி இந்து மன்றத்தின் ஆரம்பகர்த்தாவாக தானும் சேர்ந்திருப்பது மிகவும் பெருமைபடக்கூடியதாக அமைந்ததாகவும், அதன் தொண்டுகள் பல்வேறு வழிகளில் பரந்து விரிந்து அதன் தலைவர் தேசபந்து திரு. ஆர். இராஜேந்திரன் தலைமையில், குறிப்பாக மலையகத்தில் பெருந்தோட்டப் பகுதிகளில் அரும்பெரும் சேவையாற்றிக்கொண்டிருப்பதை தான் நன்கு அறிவேன் என்றும், இந்து மாமன்றத்தின் கன்னி முயற்சியாக ஆன்மீக வளர்ச்சியின் பொருட்டு "சைவசமய சாரம்" என்ற நூலை வெளியிட்டு மிக இலகு வழியில் சிறுவர் முதல் பெரியவர் வரை புரியும் விதம் அமைத்ததும், இதனை ஆக்கிய ஆசிரியர் தான் வாழும் மண்வாசனைக்கு ஏற்ற வகையில் தயாரித்துக் கொடுத்ததுமல்லாமல் பலராலும் பயன்படக்கூடிய இந்து மதத்தின் அறிவுச் செல்வத்தை வழங்கியுள்ளார் என்று பாராட்டியதுடன், இவ்வாறான ஆன்மிகத் தொண்டுகள் தொடரவேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்தார்.

இவ்விழாவின்போது மலையகத்தில் பலராலும் பாராட்டத்தக்கதான சேவைகள் புரிந்தவர்களுக்கு பொன்னாடை போர்த்தியும் நினைவுச்சின்னங்கள் வழங்கியும் கௌரவிக்கப்பட்டது. மலையக கல்வி மேம்பாட்டிற்கு பல ஆண்டுகளாக சேவையாற்றி இவ்வாண்டு ஓய்வுபெற்ற மத்தியமாகாண கல்வி(தமிழ்) உதவிபணிப்பாளர் திருமதி. பி. இராமநாதன், இன்னும் சில மாதங்களில் ஓய்வுபெறவுள்ள கம்பளை வலய (தமிழ்) உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. எம். லோகநாதன், ஆன்மீகத் துறையில் தொடர்ந்து சேவையாற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி கனகசபாபதி நாகேஸ்வரன், உலக சைவப் பேரவையின் உறுப்பினரும் நாவலப்பிட்டியில் நீண்டகாலமாக வாழ்ந்து சைவத்தை வளர்த்தவருமான திரு. எஸ். சிதம்பரநாதன், நாவலப்பிட்டி அறநெறிப் பாடசாலைகளில் அதிக காலமாக சேவையாற்றிவரும் மூத்த ஆசிரியருமான திருமதி. எஸ். முத்தம்மா, மலையகத்தில் இனமத பேதமின்றி அரும்பெரும் சமய சமூகத் தொண்டுகளுக்கு நன்கொடைகள் வாரிவழங்கும் திரு. முத்தையாபிள்ளை ஸ்ரீகாந்த் ஆகியோர் இந்நிகழ்வில் கௌரவம் பெற்றார்கள்.



இவ்விழாவில் நாவலப்பிட்டி பர்வதா நர்த்தனாலய இயக்குனர் கலாசூரி திருமதி. சிவாந்தி இராமமூர்த்தி அவர்களது மாணவிகளினது சிறப்பு நடன நிகழ்ச்சியும், நாவலப்பிட்டி கதிரேசன் மகளிர் கல்லூரி மாணவிகளின் தேவார ஓதுதலும் இடம்பெற்றன. நாவலப்பிட்டி இந்து மன்ற உப தலைவர் திரு. எஸ். மாயவதாரன் நன்றியுரை வழங்கினார்.

தகவல்: *தேசபந்து ஆர். இராஜேந்திரன்* (தலைவர்)
*கலாபூஷணம் பி. திருநாவுக்கரசு* (செயலாளர்)

# தேர் – ஆய்வுச் சஞ்சிகை வெளியீடு

அகில இலங்கை இந்து மாமன்றம் "தேர்" என்னும் ஆய்வுச் சஞ்சிகையை வெளியிட முன்வந்துள்ளது. இதனை வெளியிட முன்வந்தமைக்கான நோக்கம்,

01. தமிழ்மொழியில் ஆய்வுச் சஞ்சிகை என்று சொல்லக் கூடிய ஒன்றும் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியே வரவில்லை என்பதும்,
02. பல்கலைக்கழக சஞ்சிகைகள் பொதுப்பட எல்லாக் கல்விநெறிகளையும் அடிப்படையாகக் கொண்டு வெளிவருவதனால் சமயம் பண்பாடு பற்றிய ஆய்வுகள் முழுமையாக இடம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் கிட்டுவதில்லை என்பதும்,
03. தமிழ்மொழியில் இந்துசமயம், இந்துப்பண்பாடு, நாட்டார் வழக்கியல் முதலான துறைகள் ஆய்வுக்குட்பட்டு புதிய நோக்குடனும் புதிய நாட்டு பிடிப்புக்களோடும் அவை வளர்ச்சியடைய வேண்டும் என்பதும்,

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பேரவாவாகும்.

பட்டதாரி ஆசிரியர்களும், பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கான மாணவர்களும், விரிவுரையாளர்களும், புறநிலை ஆய்வாளர்களும், ஆய்வில் ஆர்வமுடையவர்களும் பேராசிரியர்களும் கேட்டுக் கொண்டதன் பேரிலும் 'தேர்' என்னும் இவ் ஆய்வுச் சஞ்சிகையை வெளியிட இருப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

தேர் என்னும் சொல் எல்லோருக்கும் தெரிந்ததே. அது தேரைக் குறித்து நிற்கும் என்பதே நினைவுக்கு வரும். ஆனால் அது அவ்வாறு இல்லை. அது முதல்நிலைத் தொழிற் பெயர் என்பர். அது பெயராகவும் வினையாகவும் நிற்கும். விரதம் எனப் பெயராகவும், தேர், தெரிதல், தெளிதல், பகுத்தல் என வினையாகும் நிற்கும் தன்மை வாய்ந்தது. ஆலயத்தை அடிப்படையாகக் கொண்ட "தேர்" அல்லது தேர்த்திருவிழா தத்துவ மரபில் அழித்தல் தொழிலைக் குறிக்கும் என்பர். ஐந்தொழில்களுள் அழித்தல் தொழிலைச் செய்யும் கடவுளையே முழுமுதற் கடவுள் என்பர். வாழ்வின் பயனை வேண்டி நிற்பர். "தேர்" போன்று ஆய்வும் ஐந்தொழிலை அடிப்படையாகக் கொண்டது என்பர். அவை தொகுத்தல், பகுத்தல், ஐயுறுவு கொள்ளல், நீக்குதல், தீர்மானித்தல் என்பனவாகும். ஆய்வாளர்களும் ஆய்வினைத் தேர்ந்து எடுத்து அதில் தெளிந்து "தேர்" என்னும் "ஆய்வுத் தேரில்" நல்ல முடிவுகளை வைத்து தேரினை இழுத்துச் செல்ல முயற்சிக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**இந்து மாமன்றம் உங்களது மன்றம்**
**தேர் உங்களது சஞ்சிகை**
**தேர் உங்களது வெளியீடு**
**தேரை இழுத்துப் பயன் அடைவது**
**உங்களது தவப் பயன்.**

## "தேர்"

### அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆய்வு இதழ்

**இதழ் ஆசிரியர்கள்**

பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்
திருமதி நாச்சியார். செல்வநாயகம்

**ஆலோசனைக் குழு**

பேராசிரியர் நா. கோபாலகிருஷ்ணன்
பேராசிரியர் இரத்தினசபாபதி *(சென்னை)*
பேராசிரியர் சின்னப்பன் *(மலேசியா)*

**நிர்வாக ஆசிரியர்கள்**

கந்தையா நீலகண்டன்
*(தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)*
கலாநிதி ஆறு. திருமுருகன்
*(உப தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)*
*(இயக்குநர், இந்து ஆராய்ச்சி நிலையம், மாமன்ற யாழ். பணிமனை)*

**ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிப்பதற்கான அறிவுரைகள்:**

தேர் என்னும் இவ் ஆய்விதழ் ஆண்டிற்கு இரு முறை சித்திரை, ஐப்பசி மாதங்களில் வெளிவர இருக்கின்றது. இவ்விதழானது பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு வெளிவரும். அவை வருமாறு :-

01. இந்து சமயத்தின் வழிபாடு, தத்துவம், வாழ்வியல் அறிவியல் வரலாறு முதலான விடயங்களுக்கும்,
02. கட்டடம், சிற்பம், ஓவியம் முதலான விடயங்களுக்கும்,
03. நாட்டார் வழக்கியலில் வழிபாடு, கலை, இலக்கியம், கூத்து முதலான விடயங்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். அத்துடன்,
04. மானிடவியல், சமூகவியல், தமிழியல், வடமொழியியல், கல்வியியல், மெய்யியல், மொழியியல், புவியியல், அரசியல், பொருளியல், இசையியல் முதலான துறைசார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் வரவேற்கப்படும். அவை பண்பாட்டுடன் இணைந்து வருவது வரவேற்கத்தக்கது.
05. ஆங்கிலத்தில் எழுதப்படும் கட்டுரைகள் தமிழாய்வின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு மொழிபெயர்த்தும் தனித்தும் வெளியிடப்படும்.

**ஆய்வு பற்றிய எதிர்பார்ப்பு**

01. தேர் ஆய்விதழில் வரும் கட்டுரைகள், தேர்ந்த தகுதிவாய்ந்தனவாக அமைதல் வேண்டும்.
02. ஆய்வுக் கட்டுரைகளின் தரம், தகுதிவாய்ந்த முதுநிலை ஆய்வாளர்களாலும் பேராசிரியர்களாலும், தீர்மானிக்கப்படும்.
03. ஆய்வறிஞர்களின் ஒப்புதலைப் பெறாத கட்டுரைகள் வெளியிடப்படமாட்டாது.

04. எழுதப்படும் ஆய்வுக் கட்டுரைகள், வேறு சஞ்சிகைகள் ஆய்விதழ்கள் போன்றவற்றில் வெளிவந்திருப்பின் அவை பிரசுரிப்பதற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

ஆயினும் தனது ஆய்வின் கருத்தியலை சிறிய சஞ்சிகைகளிலோ, பிற பிரசுரங்களிலோ, பிரசுரித்த பிற்பாடு அக்கருத்தியலை முழுமையான வடிவில் ஆய்வு செய்து அனுப்பப்படும் கட்டுரைகள், ஆய்வுக்குட்படுத்தி அவை ஆய்வுக்கு ஏற்றதாயின் அவை வெளியிடுவதற்கு ஏற்றுக் கொள்ளப்படும்.

**ஆய்வுக் கட்டுரையின் அமைப்பு**

01. கட்டுரைத் தலைப்பு, அதன் கீழ் கட்டுரையின் சுருக்கம், அதன்பின் முழுமையான கட்டுரையாக இருத்தல் வேண்டும்.
02. அடிக் குறிப்புக்கள், உசாத்துணை விபரங்கள் யாவும் கட்டுரையின் இறுதியில் அமைதல் வேண்டும்.
03. கட்டுரையின் சொல் எண்ணிக்கை பற்றிய மேலெல்லை எதுவுமில்லையாயினும் 3000-5000 சொற்களைக் கொண்டிருத்தல் பெரிதும் வரவேற்கத்தக்கதாகும்.

அதேவேளையில் சொற்களின் எண்ணிக்கைக்கு அமைவாகவே ஆய்வு அமைதல் வேண்டுமென்று இங்கு எதிர்பார்க்கப்படவில்லை. சொற்களின் எண்ணிக்கையை விட ஆய்வின் தரத்தையே இவ்விதழ் எதிர்பார்க்கின்றது.

**உசாத்துணை விபரங்கள் பற்றிய அறிவுறுத்தல்கள்**

01. ஆசிரியர் பெயர், பிரசுர ஆண்டு (அடைப்புக்குறிக்குள்), நூலின் பெயர் அல்லது கட்டுரையின் தலைப்பு என்பன இடம்பெற வேண்டும். நூலாயின் தடித்த எழுத்திலும், கட்டுரையெனின் மேற்கோள் குறிக்குள்ளும் வருதல் வேண்டும்.
02. கட்டுரை வெளிவந்த நூலின் பெயரோ அல்லது ஆய்விதழின் பெயரோ தடித்த எழுத்தில் அமைதல் வேண்டும்.
03. ஆய்விதழாயின் அதனைத் தொகுத்தவர் பெயர் முதலில் குறிப்பிடப்படல் வேண்டும்.

**எடுத்துக்காட்டாக:-**

**"கனகரத்தினம், இரா.வை. (2007)**
"நாவலர் ஆளுமையும் புலமைத்துவமும்",
ரெக்னோ அச்சகம், கொழும்பு

**விபுலானந்தர், சுவாமி. (1941)**
"சோழமண்டலத் தமிழும் ஈழமண்டலத் தமிழும்"
கலைமகள், பக். 22-30.

**கைலாசபதி, க. (1977)**
"ஆக்க இலக்கியமும் அறிவியலும்" (பக்)

**சண்முகதாஸ்**
ஆக்க இலக்கியமும் அறிவியலும், தமிழ்த்துறை வெளியீடு, யாழ்ப்பாண வளாகம், பக். 51-76.

**தொடர்பு:-**

தேர் ஆய்விதழுக்குக் கட்டுரை எழுத விரும்புவோர் கட்டுரையினை மின்னச்சில் பொறித்து, மின்னஞ்சலூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

அத்துடன், ஒரு பதிப்புப் பிரதியினைத் தபால் மூலம் அனுப்பிவைத்தல் வேண்டும்.

கட்டுரையாளர் தனது முழுப்பெயர், வயது, பதவி, கடமையாற்றும் நிறுவனம் போன்ற விபரங்களை தனியானதொரு தாளில் எழுதி கட்டுரையுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**முக்கிய குறிப்பு**

ஆய்வாளர்களை முக்கியமாகப் பல்கலைக்கழக இளம் மற்றும் முதுநிலை ஆய்வாளர்களை வேண்டிக் கொள்வது, தமிழ் மொழியில் ஆய்வு செய்து அதனை வெளியிடுவதற்கு நல்ல மலர்களோ சஞ்சிகைகளோ கிடைக்கவில்லை. அப்படி ஒரு சில சஞ்சிகைகள் வெளிவந்தாலும் அது அங்கீகரிக்கப்பட்ட தாபனத்திலிருந்து வெளிவருவதுமில்லை என்ற உரத்த குற்றச்சாட்டு எமது காதில் கேட்கின்றது.

ஆய்வாளன் தன்னில் நம்பிக்கை கொண்டு உழைக்க வேண்டும் என்பதற்காகவே மாமன்றம் உங்கள் முன் "தேர்" என்னும் ஆய்வுச் சஞ்சிகையை அல்லது மலரினை களமிறக்கியுள்ளது. அதில் உங்களுடைய உழைப்பைச் செலுத்தி அதில் நீங்கள் சென்றடைய வேண்டிய இடத்தை அடைய முயற்சிக்கலாம்.


தொடர்பு கொள்ள வேண்டியவர்களின் முகவரி

**நிர்வாக ஆசிரியர்கள்**

**கந்தையா நீலகண்டன் – தலைவர்**
அகில இலங்கை இந்து மாமன்றம்
இல. 91/5, சேர் சிற்றம்பலம் ஏ. காடினர் மாவத்தை
கொழும்பு – 02 இலங்கை.
தொலைபேசி தலைமைப் பணிமனை:- 011-2434990,
மின்னஞ்சல்:- hinducongress@gmail.com

**கலாநிதி ஆறு. திருமுருகன் – உப தலைவர்**
கௌரவ இயக்குநர் இந்து ஆராய்ச்சி நிலையம்
மாமன்ற யாழ். பணிமனை
இல. 211/17 கோவில் வீதி
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ. பே. : 021 - 2221075

**இணையாசிரியர்கள்**

**பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம்**
தொலைபேசி இல:- 011-2638477, 071-8620114

**திருமதி நாச்சியார் செல்வநாயகம்**
தொலைபேசி:- 077-6032152, 021-2250507


வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல் செவ்வேள் திருக்கைவேல்-வாரி
குளித்தவேல் கொற்றவேல் சூர்மார்பும் குன்றும்
துளைத்த வேல் உண்டே துணை!

அஞ்சுமுகந் தோன்றின் ஆறுமுகந் தோன்றும்
வெஞ்சமரில் அச்சலென வேல்தோன்றும்-நெஞ்சில்
ஒருகால் நினைக்கில் இருகாலுந் தோன்றும்
முருகாஎன் றோதுவார் முன்!

# மாமன்றத்தின் செய்திகள்



## மாமன்றத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் விஜயவருடம் கார்த்திகைத் திங்கள் 14ஆம் நாள் (30.11.2013) சனிக்கிழமை மாலை 2.00 மணிமுதல், மாமன்ற தலைமையகப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

பொதுக்கூட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர், நண்பகல் 12.30 மணிமுதல் மதிய போசனம் வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மதிய போசனத்திலும், ஆண்டுப் பொதுக்கூட்டத்திலும் கலந்து கொள்ளும்படி பேராளர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர்.

## திருக்கேதீஸ்வரத்தில் நாவலர் மாநாடு

அகில இலங்கை இந்து மாமன்றம் அங்கத்துவ சங்கங்களுள் ஒன்றான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையுடன் இணைந்து திருக்கேதீஸ்வரத்தில் விஜய வருடம் கார்த்திகைத் திங்கள் 21ஆம் 22ஆம் நாளில் (07.12.2013, 08.12.2013) சனி, ஞாயிறு தினங்களில் நாவலர் மாநாட்டை நடத்துவதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை முதலமைச்சர் மாண்புமிகு சத்தியவித்தகர் க. வி. விக்னேஸ்வரன், பேரூர் ஆதீனம் மருதாசலம் அடிகளார், தமிழ்நாட்டு பேச்சாளர் பேராசிரியர் இரா. செல்வகணபதி ஆகியோர் கலந்து கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

## பிரார்த்தனை மண்டபத்திற்கு நிதியுதவி

களுத்துறை மாவட்டத்திலுள்ள ஹல்வத்தோ என்ற இடத்திலிருக்கும் புனர்வாழ்வு நிலையத்தில் இந்து வழிபாட்டு பிரார்த்தனை மண்டபமொன்றைக் கட்டுவதற்காக மாமன்றம் நிதியுதவி செய்துள்ளது. இப்பிரார்த்தனை மண்டபம் விரைவில் திறந்து வைக்கப்படவிருக்கிறது.

## நீத்தார் நினைவு

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் தங்களை அர்ப்பணித்துச் சேவையாற்றி இறையடிசேர்ந்த முகாமைப் பேரவை உறுப்பினர்களை கௌரவிக்கும் வகையில், வருடந்தோறும் அஞ்சலி செலுத்தும் வைபவமொன்றை நடத்துவதற்கு மாமன்றம் தீர்மானித்துள்ளது. ஒவ்வொரு தை மாதத்து அமாவாசை நாளின்போதும் இந்த நிகழ்வு நடைபெறவிருக்கிறது. இதன்பிரகாரம், முதலாவது நீத்தார் நினைவு அஞ்சலி வைபவம் விஜய வருடம் தைத் திங்கள் 17 ஆம் நாள் (30.01.2014) இடம்பெறும்.

எனினும், இதுவரை காலமும் வருடந்தோறும் மாமன்றத்தால் நடத்தப்பட்டு வந்த அமரர் பாலசுப்பிரமணியம் நினைவுப் பேருரை, அமரர் வைத்திய கலாநிதி வேலாயுதபிள்ளை நினைவுப்பேருரை என்பன தொடர்ந்தும் இடம்பெறும்.

**மாமன்றத்தின் அஞ்சலி**

## திரு. முத்துத்தம்பி சிவராசா

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும், பின்னாளில் இலண்டனில் வசித்துவந்தவருமாகிய திரு. முத்துத்தம்பி சிவராசா அவர்கள் கடந்த ஆகஸ்ட் 21ஆம் திகதி இலண்டனில் காலமானார் என்பதை அறிந்து அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த வருத்தமடைகிறது.

பொதுச் சேவையுணர்வும் சமயப்பற்றுமுடைய அமரர் சிவராசா அவர்கள் மாமன்றத்தில் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுத் தொண்டாற்றியிருப்பதும், இந்நாட்டு வரலாற்றில் இருள்படிந்த காலமான 1981ஆம் ஆண்டு முதல் 1986ஆம் ஆண்டு வரை மாமன்றத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றியிருப்பதும் குறிப்பிடத்தக்கவை.

எல்லோருடனும் அன்பாகவும் பண்பாகவும் பழகிய அமரர் சிவராசா அவர்கள் மாமன்றத்தின் பொதுச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் மாமன்றத்தின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதில் துணிந்து முன்னின்று உழைத்தவராவார் என்பதை சிறப்பாகச் சொல்லலாம்.

மேலும் இவர் கொழும்பு விவேகானந்த சபை ஊடாகவும் குறிப்பிடத்தக்க சேவைகளை ஆற்றியுள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் இவரது குடும்பத்தினருக்கு மாமன்றம் தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறையருளை வேண்டி பிரார்த்தித்துக்கொள்கிறது.

*(40ஆம் பக்கம் பார்க்கவும்)*

# இந்தச் சுடரில்...


| | |
|---|---|
| ❖ பஞ்ச புராணங்கள் | 1 |
| ❖ ஆன்மீகச்சுடரின் அருள்மடல் | 3 |
| ❖ மாதச்சிறப்புகள் | 4 |
| ❖ கந்தபுராணம் பற்றிய தெய்வத்திருமகளின் சிந்தனை முத்துக்கள் | 5 |
| ❖ கந்தனுக்கு ஒரு கந்தசஷ்டி | 6 |
| ❖ வாழ்வில் ஒளி காட்டும் கார்த்திகை விளக்கீடு | 8 |
| ❖ தமிழ் தந்த முருகன் | 9 |
| ❖ முருகனின் அறுபடைச் சிறப்பு | 12 |
| ❖ அருள்மிகு ஆறுபடை வீடு | 13 |
| ❖ சுப்பிரமணியக் கடவுளும் ஔவையாரும் | 14 |
| ❖ வாழ்வை புனிதமாக்கும் தீபாவளித் திருநாள் | 16 |
| ❖ நம்பிக்கை ஒளி நல்கும் தீபாவளி | 18 |
| ❖ திருக்கேதீச்சரமும் நாவலர் அவர்களும் | 20 |
| ❖ விபுலானந்த அடிகளாரின் சமயச் சிந்தனைகள்... | 22 |
| ❖ யோகர் சுவாமிகள் பக்கம் | 24 |
| ❖ மாணவர் ஒளி – நாவலர் பெருமான் காட்டிய... | 25 |
| ❖ கந்தபுராண கலாசாரம் | 28 |
| ❖ ஞான வேள்வி – ஆன்மீக கேள்வி பதில்கள் | 32 |
| ❖ மணிவிழா நாயகரை மாமன்றம் வாழ்த்துகிறது | 35 |
| ❖ "சைவசமய சாரம்" நூல் வெளியீட்டு விழா | 36 |
| ❖ தேர் – ஆய்வுச் சஞ்சிகை வெளியீடு | 37 |
| ❖ மாமன்றத்தின் செய்திகள் | 39 |
| ❖ மாமன்றத்தின் அஞ்சலி | 40 |


**அடுத்த சுடர்**

**விஜய வருடம் மார்கழி - தை**

## மாமன்றத்தின் அஞ்சலி

மாமன்ற முன்னாள் பொதுச்செயலாளர் **திரு. மு. சிவராஜா,** முன்னாள் பொருளாளர் **திரு. மு. கந்தசாமி** ஆகியோரை மாமன்றம் இழந்துவிட்டது.



திரு. மு. சிவராஜா



திரு. மு. கந்தசாமி

*(39ஆம் பக்கம் பார்க்கவும்)*

# திரு. முருகேசு கந்தசாமி

அகில இலங்கை இந்து மாமன்ற முகாமைப் பேரவையின் கௌரவ உறுப்பினரும், முன்னாள் பொருளாளருமான திரு. முருகேசு கந்தசாமி அவர்கள் கடந்த செப்டம்பர் மாதம் 27ஆம் திகதியன்று காலமானார் என்பதை மாமன்றம் ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது.

மாமன்றத்தின் கௌரவ பொருளாளராக பணியாற்றிய காலத்தில் மாமன்றத்தின் தலைமையகக் கட்டடத்தை உருவாக்க அயராது உழைத்தவர்களில் அமரர் கந்தசாமி அவர்களும் ஒருவராவார்.

மேலும் மாமன்றத்தின் நிதி முகாமைத்துவத்திலும் தன் செயல் திறனைக் காண்பித்ததுடன் அதனூடாக மாமன்றத்தின் சிறப்புக்கும் வளர்ச்சிக்கும் இவர் ஆற்றிய சேவைகள் என்றென்றும் மறக்கப்பட முடியாதவையாகும்.

பாதுகாப்பு அமைச்சில் பிரதம கணக்காளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றபின், அகில இலங்கை இந்து மாமன்றத்தில் கௌரவ பொருளாளர் பதவியை வகித்ததோடு மட்டுமன்றி, கொழும்பு விவேகானந்த சபையின் காப்பாளராகவும் உபதலைவராகவும் செயற்பட்டு சமூகத்திற்கு அளப்பரிய பணியாற்றினார். கொட்டாஞ்சேனை விவேகானந்தா தேசிய கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சபை செயலாளராகவும் நீண்டகாலம் பணியாற்றி கல்லூரி வளர்ச்சிக்கு பெரும்பங்காற்றியவர். வடமராட்சி ஒப்பரேசனைத் தொடர்ந்து வடபகுதி மக்கள் இடம் பெயர்ந்த போது அவர்களுக்கு உதவி செய்ய ஆரம்பிக்கப்பட்ட இந்து பிரஜைகள் குழு, அதன்பின் தமிழர் பாதுகாப்புக்கழகம் ஆகியவற்றில் பொருளாளராகவும் பணியாற்றினார்.

அன்னாரின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறையருளை வேண்டி பிரார்த்தித்துக்கொள்கிறது.

## நல்லூர் ஆதீனச் செய்திகள்...



18.10.2013 அன்று நல்லூர் ஆதீன முதல்வருடன் திரு வே. சிவசுந்தரம் (லண்டன்)மற்றும் மாமன்றக் குழுவினர் சந்திப்பு.



நல்லூர் திருவிழா உற்சவ காலத்தில் நல்லூர் ஆதீனக் கட்டடத்தின் கம்பீரமான தோற்றம்





நல்லூர் ஆதீனத்தில் 13.10.2013 அன்று நடந்த சரஸ்வதி பூஜை நிகழ்வும், அங்கு இடம் பெற்ற கலைநிகழ்ச்சியில் பங்குபற்றிய மாணவ மாணவிகளும்.

## மாமன்றத்தின் சமூகநலப் பணிகள்...








முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட தாய்மாருக்கு அகில இலங்கை இந்து மாமன்ற சமூக நலன் குழு றீட் லங்கா ஆதரவுடன் வாழ்வாதார திட்ட உதவிகள் வழங்கும் காட்சிகள்




கிழக்கு மாகாணத்தின் மண்டூர் கிராமத்தில் இயங்கிவரும் இந்து இளைஞர் மன்றத்தின் நிர்வாகக் குழுவினரையும், உறுப்பினர்களையும் சந்திப்பதற்காக அகில இலங்கை இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளர் கலாநிதி முத்தையா கதிர்காமநாதன் அண்மையில் அங்கு விஜயம் செய்திருந்தார். அப்போது மன்றத்தினருக்கு பன்னிரு திருமுறை தொகுப்பு நூலொன்றையும் இந்து மாமன்றத்தின் சார்பாக வழங்கியிருந்தார். அந்த நிகழ்வினை இங்கு காணலாம்.

HINDU OLI - REGISTERED IN THE DEPARTMENT OF POSTS OF SRI LANKA UNDER NO. QD/19/NEWS/2013

## நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் 18.08.2013 அன்று நடந்த 'இந்து ஒளி' நல்லூர் கந்தன் மகோற்சவ சிறப்பிதழ் வெளியீட்டு விழா நிகழ்வுகள்...



மாமன்றத் தலைவர் திரு. கந்தையா நீலகண்டன் உரையாற்றுகிறார்.



செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வெளியீட்டுரை ஆற்றுகிறார்.



சிறப்பிதழின் முதற் பிரதியை யாழ் பல்கலைக்கழக இந்துநாகரிகத்துறைத்தலைவர் பேராசிரியர் மா. வேதநாதன் மாமன்றத் தலைவரிடமிருந்து பெற்றுக் கொள்கிறார்.



'இந்து ஒளி' சிறப்புப் பிரதி இந்து கலாசார திணைக்கள அலுவலர் திருமதி அனந்தலஷ்மி மாணிக்கராஜ சர்மாவுக்கு வழங்கப்படுகிறது.




நல்லைக் கந்தன் மகோற்சவ காலத்தில் ஆலய வீதியில் இந்து மாமன்றம் அமைத்திருந்த புத்தக விற்பனை நிலையம்.

## மாமன்ற உதவி...



அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஆதரவில் 2006இல் இருதய சத்திரசிகிச்சை செய்யப்பட்ட, இப்போது பாடசாலையில் திறமையுடன் படிக்கும் செல்வி ஹன்சிகாவுக்குப் பிறந்த தினப் பரிசாக கணினி ஒன்றினை மாமன்றத்தின் சார்பில் மாமன்ற உப தலைவரும், யாழ் இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநருமான சைவஞானபானு செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் 2.10.2013இல் வழங்குகிறார். கணினி பரிசளிக்க உதவியவர் திரு சிவா ரமேஷ் (லண்டன்)

இவ்விதழ் இல. 48B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13, யுனி ஆர்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் வெளியிடப்பட்டது.